# அரசாங்கத்தின் காலை வார சுதந்திரக் கட்சி தயாரில்லை



தொழில் அமைச்சர் நிமல் சிறிபால தெரிவிப்பு

02 பக்கம்


# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 432 பிலவ வருடம், தை மாதம் 06ஆம் திகதி புதன்கிழமை (19.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜுமா அத்துல் ஆகீர் - 15, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## 13ஆவது திருத்தத்தை வலியுறுத்தும் தமிழ்க் கட்சிகளின் ஆவணம்

இந்திய தூதரிடம் கையளிக்கப்பட்டது



02 பக்கம்

# சவால்களை வெல்ல ஒன்றிணையுங்கள்; அரசியலுக்காக மக்களைத் தூண்டாதீர்!



## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்து

- சவால்களுக்கு மத்தியிலும் அடிப்படைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அலட்சியம் காட்டவில்லை...
- பொதுமக்களின் ஆரோக்கியத்துக்கு முன்னுரிமையளித்தோம்...
- எந்தவொரு மனித உரிமை மீறல்களுக்கும் அரசாங்கம் ஆதரவளிக்கவில்லை என்பதைப் பொறுப்புடன் தெரிவிக்கிறேன்...
- அரசியல் நோக்கங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்...
- அரசியல் நோக்கங்களுக்காக வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்த வேண்டாம்...
- உயர்தர அரசசார்பற்ற பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க நாடாளுமன்றத்தில் விவாதங்களை நடத்துங்கள்...

9ஆவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை நேற்று ஆரம்பித்துவைத்து ஜனாதிபதி ஆற்றிய உரை:- 02 பக்கம்

# கோட்டா பேச்சில் உப்புச்சப்பில்லை!

## பெசிலிடம் சீறினார் சம்பந்தன்; போய்க் கூறும்படியும் காட்டம்



"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த உரை வெறும் குப்பை. அதில் ஒன்றுமே இல்லை. இதை அப்படியே போய் ஜனாதிபதியிடம் கூறுங்கள்" - இப்படி ஜனாதிபதியின் சகோதரரும் நிதி அமைச்சருமான பெசில் ராஜபக்ஷவிடம் முகத்துக்கு நேரில் காட்டத்துடன் கூறினார் தமிழ்த் தேசியக்... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



உரிச்சுப்பார்த்தா வெங்காயத்தில் ஒன்றும் இருக்காது எண்ட பாட்டு தானுங்கோ நினைவுக்கு வருகுது...

# எளிமையான முறையில் ஆரம்பமான சபை அமர்வு

யோ.தர்மராஜ்

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி 2021 டிசம்பர் 18ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 18ஆம் திகதி வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. அதற்கமையவே, நேற்று ஜனாதிபதி தலைமையில் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டது. 02 பக்கம்

# அரசியல் தீர்வு பேச்சுக்கு கோட்டா அழைப்பு விடுப்பார் என்ற எதிர்பார்ப்பு பொய்த்தது

## த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்.பி



"அரசியல் தீர்வுக்கான பேச்சு வார்த்தை நடத்த தான் தயார்" என்ற ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தன் கொள்கை உரையில் அறிவிப்பார் என்று கடந்த சில நாட்களாக ஒருசில ஆங்கில, தமிழ், சிங்கள ஊடகங்களிலும், ஒருசில தமிழ் அரசியல் தரப்புகளாலும் வெளியிடப் பட்ட ஊகங்கள் பொய்த்தன.

02 பக்கம்

# ஜனாதிபதியின் சம்பிரதாய விருந்தை எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு

ஒன்பதாவது நாடாளுமன்றின் இரண்டாம் கூட்டத்தொடர் நேற்று ஜனாதிபதியால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அதன்பின்னர் நாடாளுமன்றில் ஜனாதிபதியால் சம்பிரதாயபூர்வமாக விருந்துபசாரம் ஒன்று வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் உரை - முடிவு விருந்தை ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொதுமுடிவின்படி ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகள் புறக்கணித்தன.

குறித்த தேநீர் விருந்துபசாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புறக்கணித்தது.



## உஷ்



ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்திற்கு நேற்று வருகை தந்தாராம் அண்மையில் பதவி விலக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த.

ஆனாலும் அரசின் மூத்த அமைச்சர்கள் பலர் அவரை கண்டும் காணாததுபோல ஒதுங்கிவிட்டதாக தகவல்.

நேற்றைய தினம் ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வந்திருந்தார் அல்லவா? அதனால் சுசில் பிரேம் ஜயந்தவுடன் பேசுவதை எவராவது அவரிடம் வத்திவைத்துவிடுவார்கள் என்று கருதியே பலர் பேசுவதை தவிர்த்ததாக அறியமுடிந்தது.

அரசியல் என்னவெல்லாம் செய்கிறது பாருங்கள்...

# எங்களுக்கும் நெருக்கடியே!

## ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்தது

யோ.தர்மராஜ்

Lanka IOC

எரிபொருளை கொள்வனவு செய்வதில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ள நெருக்கடியை தாமும் எதிர்கொண்டுள்ளதாக இந்திய எண்ணெய் நிறுவனம் (ஐ.ஓ.சி) தெரிவித்துள்ளது.

கடன் கடிதங்களை வழங்குவதிலுள்ள சிரமங்களே எரிபொருள் கொள்வனவு செய்வதற்கும் தடையாக இருப்பதாகவும் ஐ.ஓ.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது, தங்களுடைய விநியோகஸ்தர்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை வழங்குவதற்கே தாம் முக்கியத்துவம் கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மின்சாரம் தயாரிக்க இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் இருந்து எரிபொருளை பெறும் திட்டம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே ஐ.ஓ.சி நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேநீர் விருந்துபசாரத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உட்பட்ட பிரமுகர்கள் சம்பாஷணையில் ஈடுபட்டுள்ளனர்.






UK Newspapers Vibe Community

## எளிமையான முறையில்...

அதன்படி, நேற்றுக்காலை 9 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வருகை தந்தார். இதனையடுத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வருகையும் அதனையடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரின் பாரியாரின் வருகையும் இடம்பெற்றது. வருகை தந்த ஜனாதிபதி மற்றும் பிரதமரை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வரவேற்றார்.

நாடாளுமன்றத்தின் பிரதான வாயிலின் அருகில் வந்த ஜனாதிபதி மற்றும் அவரின் பாரியாரும், ஸ்ரீஜயவர்தனபுர ஜனாதிபதி மகளிர் கல்லூரி மாணவிகளால் ஜயமங்கள கீதம் இசைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து, படைக்கலசேவிதர், பிரதிப் படைக்கலசேவிதர் மற்றும் உதவிப் படைக்கல சேவிதர், சபாநாயகர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட குழுவினரால் ஜனாதிபதி சபைக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற சிம்மாசனத்தில் அமர்ந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால், அடுத்த மூன்று வருடத்திற்கான அரசின் கொள்கைப் பிரகடனம் வாசிக்கப்பட்டது. சுமார் 52 நிமிடங்கள் ஜனாதிபதி தன் உரையை ஆற்றினார்.

இதனையடுத்து, சபை முதல்வர், அமைச்சர் தினேஸ் குணவர்தனவினால் நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டதுடன், ஜனாதிபதியினால் சபை அமர்வுகள் இன்று (19) பிற்பகல் ஒரு மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏனைய விருந்தினருக்கும் தேநீர் விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, நாடாளுமன்ற சபை அமர்வை ஆரம்பித்து வைப்பதற்கு வருகை தந்த ஜனாதிபதி எவ்வித விசேட வாகன அணிவகுப்புகளையும் முன்னெடுக்காது, எளிமையாகவே சபைக்கு வருகை தந்தார். ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வருகைதரும் நிகழ்வு அவருடைய ஆலோசனைக்கமையவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோட்டா பேச்சில்...

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பில் தகவல் வெளியிட்ட கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் இத்தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் சுமந்திரன் மேலும் வெளியிட்ட தகவல்கள் வருமாறு.

ஜனாதிபதியின் பேச்சை செவிமடுத்த கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் அதையொட்டி பெரும் கோபம் கொண்டார். பேச்சு முடிந்த கையோடு எழுந்து நாடாளுமன்றில் பகிரங்கமாகத் தம் எதிர்ப்பை பதிவுசெய்ய அவர் விரும்பினார். அதற்காக எழுந்தார். எனினும் யோசித்தவர், நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறி நடக்கக் கூடாது என்பதற்காக அப்படி கருத்து தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொண்டார்.

எனினும், நாடாளுமன்றை விட்டு வெளியே வரும்போது லொபியில் தமக்கு முன்னால் எதிர்ப்பட்ட நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவிடம் தமது கோபத்தை அவர் காட்டினார்.

இந்தப் பேச்சு வெறும் குப்பை. உருப்படியாக இதில் எதுவும் இல்லை. இதைப் போய் அவரிடம் சொல்லுங்கள். நான் தேநீர் உபசாரத்திற்கு வரவில்லை. வந்தால் இதை நானே அவருக்கு நேரடியாகக் கூற வேண்டியிருக்கும். அப்படி வேண்டாம் என்பதற்காகத்தான் தேநீர் உபசாரத்தையே தவிர்த்துக் கொண்டிருக்கிறேன்.

இந்தப் பேச்சு வெறும் குப்பை என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை என்பதை நான் கூறினேன் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள். எங்களுடைய நாட்டின் தேசிய பிரச்சினை குறித்து ஏதும் இந்தப் பேச்சில் சொல்லப்படவில்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் உங்களுக்கு எதுவும் சரிப்பட்டு வராது. உருப்படவே மாட்டீர்கள் என்பதை அவரிடம் போய்ச் சொல்லுங்கள் என்று சம்பந்தன் ஐயா சீற்றத்துடன் கூறினார்.

இந்தத் திடீர் தாக்குதலை எதிர்பார்க்காத பெசில் ராஜபக்ஷ விடயத்தைச் சமாளித்து, தாங்யூ, தாங்யூ...! என்று கூறி அங்கிருந்து அகன்றார்- என்று தகவல் வெளியிட்டார் சுமந்திரன்.

## அரசியல் தீர்வு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த மூன்று வருடங்களுக்கான தனது அரசாங்கத்தின் கொள்கை நோக்கை விளக்கி நாடாளுமன்றத்தில் ஆற்றிய நீண்ட உரையில், தேசிய இனப்பிரச்சினையை, பொருளாதார பிரச்சினையாக மட்டுமே பார்க்கும் தனது கொள்கை மாறவில்லை என்பதை தெளிவாக கோடிட்டுக் காட்டினார். நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரையை அடுத்து கருத்து கூறிய மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது.

"அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நடத்த தான் தயார்" என்ற நிலைப்பாட்டை ஜனாதிபதி இன்று தன் கொள்கை உரையில் அறிவிப்பார் என்று கடந்த சில நாட்களாக வெளியிடப்பட்ட ஊகங்கள் பொய்த்தன. கொழும்பின் இராஜதந்திர சமூகம் தவறாமல் வாசிக்கும் பிரபல வார இறுதி ஆங்கில பத்திரிகையின் அரசியல் ஆருடம் பொய்த்தது.

அப்பத்திரிகை தனது ஏற்புடைமையை இழந்தது என்றும், அதை நம்பிய ஒருசில தமிழ் அரசியல்வாதிகளும் ஏமாந்தனர் என்றும், சற்று முன் என்னுடன் உரையாடிய பிரபல மேற்கு நாட்டு இராஜதந்திரி சொன்னார்.

தேசிய இனப்பிரச்சினை இருப்பதாக ஏற்க ஜனாதிபதி தன் உரையில் தெளிவாக மறுக்கிறார். இந்நாட்டில் நிலவும் பிரச்சினைகளை பொருளாதார பிரச்சினையாக மட்டுமே அவர் இறுக்கமாக பார்க்கிறார். மக்களுக்கு குடிநீர், நீர்ப்பாசனம், வீடுகள், நெடுஞ்சாலைகள் ஆகிய வசதிகளை வழங்குவதே, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்பதுவே தனது அரசாங்கத்தின் நல்லிணக்க கொள்கை என ஜனாதிபதி கூறி முடித்தார்.

மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய இலங்கையின் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் விசேட பிரச்சினைகள் பற்றிய தீர்வுகள் தொடர்பிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அடுத்த மூன்றாண்டுக்கான கொள்கை உரையில் எதுவும் கூறப்படவில்லை.

அதிகாரப் பரவலாக்கல், 13ஆம் திருத்தம் ஆகிய விவகாரங்கள் பற்றி ஜனாதிபதி ஒரு வார்த்தையும் கூறாமல் இந்நாட்டு தமிழ்ப் பேசும் மக்களை ஏமாற்றியுள்ளார் என நான் நினைக்கிறேன். வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தனது அரசினால் முன்னெடுக்கப்படுவதாக கூறப்படும் அபிவிருத்தி செயல்திட்டங்களுக்கு வடகிழக்கு பிரதேசங்களில் இருந்து மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதுவே அவரது அதிகபட்ச கோரிக்கையாக இருந்தது.

ஜனாதிபதியின் உரை நிறைவு பெற்ற பின், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் எம்.பி. மிகவும் சலிப்புடனும், ஏமாற்றத்துடனும் இருந்ததை, அவருக்கு சமீபத்தில் அமர்ந்திருந்த நான் அவருடன் சற்று உரையாடியபோது அவதானித்தேன். அது எனக்கு மிகுந்த மனக்கவலையை தந்தது.

"ஜனாதிபதி இனப்பிரச்சினையை பற்றி ஒரு வார்த்தையும் கூறாமல், கடலுக்கு அடியில் அமைக்க திட்டமிடும் டிஜிட்டல் தொழில்நுட்ப கேபிள்களை பற்றி அதிகம் பேசினார். உங்கள் இனப்பிரச்சினையையும் அங்கே கடலுக்கு அடியில் புதைக்கப் போகிறாரோ" என அவ்வேளை என்னுடன் உரையாடிய முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க என்னிடம் கேலியாக தெரிவித்தார்.

அதேவேளை, தான் நியமித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத குழுவினால் எழுதப்படும் புதிய அரசியலமைப்பிற்கான வரைபை தனது அமைச்சரவையில் சமர்ப்பித்து, அதன்பின் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறினார். இந்த புதிய அரசியலமைப்பு வரைபில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது கானல் நீராகவே இருக்கும் என்பதை ஜனாதிபதியின் உரை கோடிட்டுக் காட்டுவதாகவே நான் நினைக்கிறேன். - என்றார் மனோ எம்.பி.

# இந்தியா 500 மில். டொலர் இலங்கைக்கு கடன் சலுகை

இலங்கைக்கு இந்தியா புதிதாக மேலும் 500 மில்லியன் டொலர் கடன் எல்லை சலுகையை வழங்கியுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் ஊடக அறிக்கை ஒன்றில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். ஏற்கனவே நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவிற்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது பேசப்பட்ட விடயங்களும் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் 900 மில்லியன் டொலர் நிதிப்பரிமாற்ற வசதியை வழங்கியிருந்தது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் இருதரப்பு பொருளாதார வர்த்தக தொடர்புகளின் பாரிய பங்களிப்பாக இந்த சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

## 13ஆவது திருத்தத்தை...

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை வலியுறுத்தி தமிழ்க் கட்சிகள் தயாரித்த ஆவணம் நேற்று இந்திய தூதுவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் இந்த சந்திப்பு நடந்தது.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு, சமஷ்டி அடிப்படையிலான இறுதித் தீர்வை அடைய உதவும்படியும், அதுவரை இடைக்கால ஏற்பாடாக, 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தப்படுவதை இந்தியா உறுதிசெய்ய வேண்டுமென வலியுறுத்தி, தமிழ்க் கட்சிகள் இந்த ஆவணத்தை தயாரித்துள்ளன.

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சி.வி.விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், சுரேன் குருசாமி ஆகியோர் நேற்று இந்திய தூதரகத்திற்கு சென்று, ஆவணத்தை கையளித்துள்ளனர்.

## அரசாங்கத்தின் காலை...

**யோ.தர்மராஜ்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நாங்கள் உருவாக்கியது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் மாத்திரம் இதன் முழு உரிமையாளர்களல்ல. நாங்களும் இதற்கு தலைமைத் தாங்கியுள்ளோம். எனவே, அரசாங்கத்தின் காலை வாரிவிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரில்லை என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அரசாங்கத்தை விட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும் என தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பது குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதிய பயணத்தை ஆரம்பிப்போம் என்றே அறிவித்தார். அதேபோன்று, கடந்த இரு வருடங்கள் அரசாங்கத்தை விமர்சனம் செய்தவர்கள் செய்யட்டும் என பிரதமர் தெரிவித்தார். ஆனால், ஜனாதிபதி அறிவித்த புதிய பயணத்தில் அரசாங்கத்தின் காலை வாரிவிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரில்லை.

இந்த அரசாங்கம் நாங்கள் உருவாக்கியது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் மாத்திரம் இதன் முழு உரிமையாளர்களல்ல. நாங்கள் இதற்கு தலைமைத் தாங்கியுள்ளோம் என்பதோடு, நாங்கள் அனைவரும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள். எனவே, இந்த அரசாங்கத்தை பாதுகாப்பதற்கு எங்களுக்கு உரிமை மற்றும் பொறுப்புள்ளது. அதேபோன்று, அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டுவதற்கும் பொறுப்புள்ளது.

இதேவேளை உரம் தொடர்பான கொள்கை சிறந்த தேசிய கொள்கையாகும். ஆனால், விவசாய மக்கள் அந்த கொள்கையை ஏற்றுக்கொள்வதற்கு தயாரில்லை. விவசாயத்திற்கு தேவையான சேதனப் பசளைகள் இலவசமாக வழங்கப்படும். ஆனால், இரசாயன உரம் தேவை என்றால் தனியார் நிறுவனங்களில் பணத்திற்கு பெற்றுக்கொள்ள முடியும். இதனூடாக உரப்பிரச்சினை நிவர்த்தி செய்யப்படும் என நினைக்கின்றோம் - என்றார்.

# ஜனாதிபதியின் அக்கிராசன உரை



2022இல் உதித்த புத்தாண்டை முன்னிட்டு உங்களுக்கும் நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜனநாயகரீதியாக அதியுயர் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நீங்கள் பல்வேறு அரசியல் கருத்துகளினூடாக நாட்டு மக்களின் அபிலாஷைகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக உள்ளீர்கள்.

இதனால் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நீங்கள் அனைவரும் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய மிகவும் விசேடமான ஓர் குழுவினராவீர்கள்.

உங்களைப் போன்று ஜனநாயக வழிமுறையினூடாக மக்களின் ஆணையைப் பெற்று ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள நானும் நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளேன். தேர்தலில் எனக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்ல, வாக்களிக்காத மக்கள் தொடர்பாகவும் பொறுப்புக் கூறும் கடமை எனக்கு உள்ளது.

எனவே, நாடாளுமன்றத்திலும் அதன் வெளியிலும் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் தனது கடமைப் பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றி, நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களிலிருந்து வெற்றி பெறுவதற்கு எனக்கு உதவுமாறு நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் இன்று உங்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

கடந்த இரண்டு ஆண்டுகள் பெரும் சவால்களை எதிர்நோக்கிய காலகட்டமாக அமைந்தது. ஒட்டுமொத்தமான உலகையே ஒரேயடியாக தாக்கிய கொவிட் -19 உலகளாவிய தொற்று நோயை எம்மால் எதிர்கொள்ள நேர்ந்தது. இந்த தொற்று நோய் காரணமாக உலகில் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் அனைத்து நாடுகளும் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கின. சிறிய பொருளாதாரமொன்றைக் கொண்டுள்ள இலங்கையை அது கடுமையாக பாதித்தது. பல தடவைகள் நாட்டை முடக்க நிலைக்கு கொண்டு வருவதற்கும் நேர்ந்தது. இதனால் நாட்டின் பொருளாதார செயற்பாடுகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டன. நாட்டுக்கு அந்நிய செலவாணியை கொண்டு வந்த சுற்றுலாத்துறை, வெளிநாடுகளில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் ஆடைத் தொழில்துறை போன்ற முக்கிய துறைகள் அனைத்தும் இந்த தொற்று நோயினால் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கின. உலகளாவிய ரீதியிலான இத்தொற்று நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த பல்வேறு சட்டவிதிமுறைகளை அமுல்படுத்த நேர்ந்ததினால் பல தொழில் முயற்சிகள் மற்றும் சுயதொழிலில் ஈடுபடுவோரின் அன்றாட வருமானம் பாதிக்கப்பட்டது. மக்களின் பொதுவான வாழ்க்கையும் பல தடைகளை எதிர்நோக்கியதனால் சமுதாயத்தில் உளரீதியான பாதிப்புகளும் ஏற்பட்டிருந்தன.

கொவிட் -19 உலகளாவிய ரீதியிலான தொற்று நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்க அரசு பாரிய செலவுகளை மேற்கொண்டது. அடிக்கடி நாடு முடக்கப்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் வருமானங்களை இழந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். உலகளாவிய ரீதியிலான இத்தொற்று நோய் காரணமாக வருமானங்களை இழந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் கடன் மீள் செலுத்தலை பிற்போடுவதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். குறைக்கப்பட்ட எந்தவொரு வரியையும் நாங்கள் மீண்டும் அதிகரிக்கவில்லை. அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவு எவற்றையும் நாங்கள் குறைக்கவில்லை.

எத்தகைய பொருளாதார நெருக்கடிகள் காணப்பட்டாலும் மக்களின் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை வழங்கி அதற்குத் தேவையான அனைத்து செலவுகளையும் அரசு மேற்கொண்டது. நாடு முழுவதிலும் தனிமைப்படுத்தும் நிலையங்கள் மற்றும் சிகிச்சையளிப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டதுடன், வைத்தியசாலைகளுக்குப் புதிதாக 35ஆயிரத்துக்கும் அதிகமான படுக்கைகளை வழங்கினோம். வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் 10ஆயிரம் ரூபா பெறுமதியான உணவு நிவாரணப் பொதிகளை வழங்கினோம்.

கொவிட் -19 உலகளாவிய ரீதியிலான இத்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரே ஒரு வழி தடுப்பூசி வழங்குவதே என்பதை நாம் புரிந்து கொண்டோம். அதன்படி பாரிய செலவுகளை மேற்கொண்டு நாட்டுக்குத் தேவையான தடுப்பூசிகளைப் பெற்று 16 வயதிற்கு மேற்பட்டோருக்கு அந்த தடுப்பூசிகளை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். தற்போது இந்த உலகளாவிய ரீதியிலான தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தல் தொடர்பாக ஏனைய உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில், நாங்கள் ஒரு திருப்திகரமான நிலையில் உள்ளோம்.

இலக்கு வைக்கப்பட்ட சனத்தொகையில் 85 வீதத்தினருக்கும் அதிகமானோருக்கு இரண்டு தடுப்பூசிகளையும் வழங்கி இந்த நோயைக் கட்டுப்படுத்தி மக்களின் வாழ்க்கையை வழமை நிலைமைக்கு கொண்டு வர முடிந்தது. தற்போது அனைத்து மக்களையும் இலக்காகக் கொண்டு மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியையும் வழங்கி வருகின்றோம்.

இந்த உயர் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மத்தியில் அரசியல் ரீதியிலான பல்வேறு கருத்து வேறுபாடுகள் மற்றும் கொள்கை வேறுபாடுகள் இருக்கின்றன. எனினும், நாங்கள் அனைவரும் நாட்டின் நன்மைக்காகவே பிரார்த்திக்கின்றோம். உலகளாவிய தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இந்த கடினமான சந்தர்ப்பத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்படும் பாரிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளாகிய உங்கள் அனைவருக்கும் உள்ளது. அந்தப் பொறுப்பினை நிறைவேற்ற எம்முடன் இணைந்து செயற்படுமாறு உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

குறுகிய கால பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதுடன், எமது அடிப்படை கடமைப் பொறுப்பு எங்களால் நாட்டு மக்களுக்கு முன்வைக்கப்பட்ட பெரும்பாலான மக்களினால் அனுமதிக்கப்பட்ட நீண்டகால அடிப்படையிலான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இடையறாது முன்னெடுத்தலாகும். இதனடிப்படையிலேயே நாட்டின் நிலைபேறான அபிவிருத்தி தங்கியுள்ளது. இதனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது முன்னுரிமை கடமைப் பொறுப்புகளை மறந்துவிடக் கூடாது.

நாங்கள் ஈராண்டுக்குள் ஒரு குறிப்பிடத்தக்க அளவிலான வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதாக மக்களுக்கு உறுதியளித்திருந்தோம். எனினும், முதல் ஈராண்டுகளில் உலகளாவிய தொற்று நோயினால் பாரிய இடையூறு ஏற்பட்டது. எனினும் எமது கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதை நாங்கள் மறக்கவும் இல்லை, தட்டிக் கழிக்கவும் இல்லை.

2019ஆம் ஆண்டில் நான் ஜனாதிபதியாக நியமிக்கப்படும்போது மக்களுக்கு இருந்த அடிப்படைப் பிரச்சினை, தேசிய பாதுகாப்பு என்பதை பலர் இன்று மறந்து விட்டனர். தற்போது நாங்கள் நாட்டின் பாதுகாப்பினை உறுதிபடுத்தியுள்ளோம். இன்று மக்கள் மத்தியில் பயங்கரவாதம் தொடர்பான அச்சம் கிடையாது.

பாதாள உலகக் கோஷ்டியின் நடவடிக்கைகள் அன்று பாரியளவில் வியாபித்திருந்தது. சிறைச்சாலை பஸ் வண்டிகள் மீது துப்பாக்கிச் சூடுகளை மேற்கொண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சிறைக்கைதிகள் கொலை செய்யப்பட்ட ஒரு யுகத்தை நாம் கடந்து வந்துள்ளோம். வீதியில் பயணித்த பொது மக்கள் பாதாள உலகக் கோஷ்டியினரின் மோதல்களில் சிக்கி உயிரிழந்த யுகத்தையும் நாம் கடந்து வந்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசாங்கம் இந்த நிலைமையை மாற்றியமைத்துள்ளது.



போதைப்பொருள் தொல்லை அன்று பாரிய ஒரு பிரச்சினையாக இருந்தது. நாட்டின் இளைஞர்கள் பாரியளவில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டிருந்தனர். வெளிநாடுகளுக்கு கூட போதைப்பொருட்களை வழங்கும் கோஷ்டிகள் இலங்கையில் உருவாகி எமது நாடு சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரர்களின் கேந்திர நிலையமாக உருவாக்கப்பட்டிருந்தது. இதனை உடனடியாக கட்டுப்படுத்துவதற்காக நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நடவடிக்கை எடுத்தோம். எமது பாதுகாப்புப் படையினர், புலனாய்வுப் பிரிவினர் துல்லியமாக செயற்பட்டு இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். போதைப்பொருள் தொல்லையை முற்றாக ஒழிப்பதற்கு நாங்கள் ஆரம்பித்த வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்போம். அயல்நாடுகளின் புலனாய்வு துறையினரும் எமக்குத் தேவையான தகவல்களை வழங்கி வருகின்றனர்.

மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் பொலிஸாருக்கு பாரிய பொறுப்புள்ளது. மக்களுக்கு அச்சம், பீதி இல்லாமல் வாழக்கூடிய சூழலை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸார் தொடர்ச்சியாக மக்களது பாதுகாப்பு சம்பந்தமாக விழிப்புடன் இருத்தல் வேண்டும். இதற்காக நாங்கள் பொலிஸ் துறையில் பல்வேறு மாற்றங்களை மேற்கொண்டுள்ளோம்.

எந்தவொரு பகுதியில் வாழும் மக்களுக்கும் பொலிஸ் நிலையங்களிலிருந்து சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் நாடு முழுவதிலும் சுமார் நூற்றுக்கும் அதிகமான பொலிஸ் நிலையங்களை நாங்கள் புதிதாக நிறுவியுள்ளோம். அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் தேவையான வாகன வசதிகளையும் வழங்கியுள்ளோம். அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்துள்ளதுடன், பயிற்சிகள், செயலமர்வுகள் மூலம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மத்தியில் அறிவு மற்றும் சிந்தனை ரீதியிலான மாற்றங்களைச் செய்துள்ளோம்.

செயலிழந்த நிலையில் காணப்பட்ட சூழல் பாதுகாப்பு பொலிஸ் பிரிவினை நாங்கள் மீண்டும் வலுவடையச் செய்துள்ளோம். பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமிடையேயான தொடர்புகளை மேலும் பலப்படுத்தும் வகையில் மக்கள் பாதுகாப்பு கடமைகளில் பொதுமக்களின் பங்களிப்பினையும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் சமுதாய பொலிஸ் இராஜாங்க அமைச்சினையும் ஸ்தாபித்துள்ளோம்.

(08ஆம் பக்கம் பார்க்க)

LK Newspapers Viber Community

# இன்றைய ராசி பலன்

**19.01.2022 புதன்கிழமை தை 06**

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: ஆயிலியம்**
காலை 6.43 - 20.01.2022
காலை 8.24 வரை

**ஆயுஷ்மான்**
மாலை 4.06 - 20.01.2022
மாலை 3.45 வரை

**யோகம்: பிரீதி**
மாலை 4.06 வரை

**திதி: அமர பட்ச துவிதியை**
காலை 6.53 - 20.01.2022
காலை 8.04 வரை

**முற்கரணம்: கௌலவம்**
காலை 6.53 வரை

**பிற்கரணம்: தைதுலம்**
காலை 6.53 - இரவு 7.32

**சுப நேரங்கள்**
காலை 6.28 - 7.55
மாலை 3.18 - 4.46

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
பிற்பகல் 12.21 - 1.50

**குளிகை காலம்**
காலை10.53 - பி.ப 12.21

**எமகண்ட காலம்**
காலை 7.56 - 9.25

**துர் முகூர்த்தம்**
காலை 11.58
பி.ப 12.45

***லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் - கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி***

**மேஷம்:** புடவை வணிகத்தில் சிறிய இழப்பு உண்டாகலாம். இன்று வணிகத்தில் புதிய திட்டங்களை தவிர்ப்பது நல்லது. புதிய தொழில் அல்லது வேலை துவங்குமுன் பெற்றோர் ஆசி பெறுவது மேன்மை தரும்.

**ரிஷபம்:** வாழ்க்கைத்துணையுடன் கருத்து வேறுபாடுகள் நீங்கலாம். வேலைத்தளங்களில் சக ஊழியர்களுடன் நல்ல உறவும், பணிகளில் சுறுசுறுப்புடன் இருத்தலும் உண்டாகலாம். புதிய தொழில் அல்லது வேலை துவங்க நல்ல நாள். உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கு நல்ல நிலை உருவாகலாம்.

**மிதுனம்:** உணவு பழக்கத்தை சரியான முறையில் கடைப்பிடித்து உடல்நல பாதிப்புகளை தவிர்த்துக்கொள்ளலாம். அவமரியாதை யான சொற்களை தவிர்ப்பது நல்லது. கவனச் சிதறலால் பணிகள் தாமதம் பெறலாம். பிள்ளைகளால் மகிழ்ச்சி கிடைக்கலாம்.

**கடகம்:** தரகு சம்பந்தப்பட்ட வேலைகளில் இருப்பவர்களுக்கு வருவாய் மேம்படும். காதலில் மகிழ்ச்சி ஏற்படலாம். மூதாதையர் சொத்து சம்பந்தப்பட்ட விடயங்களில் சில தீர்மானம் எடுக்கப்படலாம். வாழ்க்கைத்துணையால் பரிசு கிடைக்கலாம்.

**சிம்மம்:** ஆடம்பர விரய செலவுகளை தவிர்ப்பது நல்லது. நீர் நிலைகளிலிருந்து ஒதுங்கியிருப்பது நன்மை. மனதில் சில குழப்பங்கள் தோன்றலாம். உடல் சோர்வு உண்டாகலாம். இறைவணக்கம் தேவை.

**கன்னி:** நிதி பிரச்சினையால் தடைப்பட்ட வேலைகள் நிறைவேறலாம். காதலர்களுக்குள் உணர்வுகளை பகிர்தல் உண்டாகலாம். அரசாங்க சம்பந்தப்பட்ட வேலைகள் நிறைவேறலாம். வேலைத்தளங்களில் உள்ளக சீர்திருத்தம் ஏற்படலாம்.

**துலாம்:** புதிய வாகனம் அல்லது சொத்து வாங்கும் நிலை உண்டாகலாம். சில விருப்பங்கள் இறையருளால் நிறைவேறலாம். பணிகளில் உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கலாம். சிலருக்கு பணியில் பதவி உயர்வு அல்லது மேலதிக பொறுப்பும் கிடைக்கப்பெறலாம்.

**விருச்சிகம்:** சந்தைப்படுத்துதல் சம்பந்தப்பட்ட வேலைகளில் வருவாய் அதிகரிக்கலாம். ஆன்மீகபயணம் உருவாகலாம். சமூக நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் நிலை உண்டாகலாம். வேலைத் தளங்களில் மரியாதை மேம்படும்.

**தனுசு:** பணியிட உள்ளக அரசியலில் ஒதுங்கியிருப்பது நன்மை. ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட வேலைகளில் ஆர்வம் உண்டாகலாம். பணப் பற்றாக்குறையால் சில வேலைகள் தடைப்படலாம். பிள்ளைகளுக்கு சிறிய உடல்நல பிரச்சினை ஏற்படலாம். இறைவணக்கம் தேவை.
**சந்திராஷ்டமம்: பூராடம் நட்சத்திரத்திற்கு அ.கா 12.13 - 20.01.2022 அதிகாலை 2.01 வரை**

**மகரம்:** சில நிறுவனங்களில் பணி செய்பவர்களின் வருவாய் அதிகரிக்கலாம். குடும்பத்தில் சில பிரச்சினைகள் நீங்கலாம். உணர்வுபூர்வ முடிவுகளைதவிர்ப்பது நன்மை. உங்கள் நலம் விரும்புபவர்களின் ஆலோசனை நன்மை தரும்.

**கும்பம்:** திருமண உறவில் மகிழ்ச்சி மேம்படும். நிர்வாக சேவைகளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு சாதகமான நாளாக அமையலாம். சமூகத்தில் கௌரவம் மேம்படும். தேவையற்ற செலவுகளை குறைப்பதிலும் கவனம் தேவைப்படலாம்.

**மீனம்:** சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு நல்ல நாளாக அமையலாம். வணிக ஒப்பந்தங்களில் லாபம் அதிகரிக்கலாம். நண்பர்களுடன் இன்று மகிழ்வான நாளாக அமையலாம். சில பெண்களுக்கு சிறிய உடல்நல பிரச்சினைகள் உண்டாகலாம்.

# கோட்டாபயவின் பேச்சு மிகவும் மட்ட ரகமென்கிறார் சுமந்திரன் !



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்தக் கொள்கை விளக்கப் பிரகடன உரை மிகவும் மட்ட ரகமான பேச்சு. அதைக் கேட்டுக்கொண்டிருக்கும் போது அவர் இலங்கையைப் பற்றிதான் பேசுகின்றாரா அல்லது வேறு ஏதேனும் நாட்டைப் பற்றி பேசுகின்றாரா என்ற சந்தேகம் எங்களுக்குள் எழுந்தது. ஒரு பிரச்சினையும் இல்லாத - சுபீட்சமாக வீறுநடை போடுகின்ற ஒரு நாட்டைப் பற்றியே அவர் பேசுவதுபோல் இருந்தது

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

ஜனாதிபதியின் பேச்சில் தமிழரின் தேசிய பிரச்சினை குறித்து ஒரு வார்த்தை தன்னும் இல்லை. அவர் சொன்னதெல்லாம் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்காலிகமாகவேனும் தங்கள் கொள்கைகளை ஒரு பக்கம் வைத்துவிட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அரசுடன் கைகோர்க்க வேண்டும் என்பதுதான்.

ஏன் கொள்கைகளை ஒரு பக்கத்தில் வைக்க வேண்டும்? இது எங்கள் கொள்கை அல்ல, மக்களின் கொள்கை. அதற்கான ஆணையை கொடுத்தவர்கள் மக்கள்தான். அது அவர்களின் கொள்கை. நாங்கள் மக்கள் பிரதிநிதிகளாக வந்ததே இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான். ஆகவே, மக்களின் தேவையைப் பூர்த்திசெய்வது ஒன்று, கொள்கை வேறொன்று என்று இல்லை. மக்களின் கொள்கையைத்தான் பூர்த்திசெய்ய வேண்டும். ஆகவே, அந்தக் கொள்கைகளை நாம் ஒரு பக்கத்தில் வைக்கவேண்டிய தேவை ஏதும் இல்லை. அந்த விடயம் கூட ஜனாதிபதிக்குப் புரிந்த மாதிரி தெரியவில்லை - என்றார் சுமந்திரன்.

# ஒலிபண்ட் தோட்ட அதிகாரியை உடனடியாக இடமாற்றுமாறு கோரி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

***(தலவாக்கலை நிருபர்)***





களனிவெளி பிலான்டேசன் நிர்வாகத்திற்கு கீழ் இயங்கும் நுவரெலியா ஒலிபண்ட் தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக அத்தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (18) செவ்வாய்க்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தோட்டத் அதிகாரி சர்வாதிகாரமாக செயல்படுவதால் அவரை உடனடியாக இடமாற்றம் செய்யும்படி கோரி தொழிலாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

தோட்ட அதிகாரி தொழிலாளர்களை சர்வாதிகாரமாக வழிநடத்துவதாகவும் தோட்டத்தில் தொழிலாளர்கள் குடியிருக்கும் வீட்டிற்கு அருகிலும் தங்களது விவசாய காணியில் தங்களது சொந்த செலவில் வீடு கட்டுவதற்கும் மலசலகூடம் கட்டுவதற்கும் அனுமதி வழங்க தோட்ட அதிகாரி மறுத்து வருவதாகவும் தொழிலாளர்களின் செலவில் கட்டப்பட்ட வீடுகளையும் பொலிஸாரின் உதவியுடன் தோட்ட அதிகாரி உடைத்ததாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் இந்த தோட்டத்தில் தொடர் குடியிருப்புகள் இரண்டு மூன்று குடும்பங்கள் ஒரே வீட்டில் வாழ்வதால் இடவசதியில்லாமல் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். அத்துடன் தொழிலாளர்களின் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பதற்கு பதிவு கடிதம் கேட்டால் தோட்ட அதிகாரி கடிதம் வழங்குவதில்லை.

இதனால் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்க்க முடியாமல் தொழிலாளர்கள் அவஸ்த்தைபடுவதாகவும் தெரிவிக்கின்றனர். நாட்சம்பளத்திற்கு 20 கிலோவிற்கு மேல் கொழுந்து பறிக்க வேண்டும் எனவும் வேலை அதிகரித்துள்ளதாகவும் 1000 ரூபா சம்பளம் வழங்கப்படுவதில்லை எனவும் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தோட்ட அதிகாரி செவிமடுப்பதில்லை. தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளையோ அல்லது உரிமைகளையோ தோட்ட அதிகாரி வழங்காமல் தோட்டத் தொழிலாளர்களை கொத்தடிமைகளாக வழி நடத்துவதாகவும் தோட்ட அதிகாரி சர்வாதிகாரியாக செயல்படுவதால் உடனடியாக தோட்ட அதிகாரியை இடம் மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் பாரிய போராட்டம் நடத்தவிருப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

# உரையைப் புறக்கணித்தனர் கத்தோலிக்க மத குருமார்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சம்பிரதாய உரை நாடாளுமன்றில் இடம்பெற்ற போது கத்தோலிக்க மதகுருமார் நிகழ்வைப் புறக்கணித்தனர்.

9ஆவது நாடாளுமன்றின் இரண்டாவது அமர்வு நேற்றைய தினம் ஜனாதிபதியால் சம்பிரதாய'பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதன்போது சர்வ மதகுருமாரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு அழைக்கப்பட்ட மத குருமாருக்கான கலரியில் விசேடமாக இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதில் 16 பௌத்த பிக்குகள் கலந்துகொண்ட அதேநேரம், ஒரேயொரு சைவ மதகுருவும் இரு மௌலவிகளும் கலந்துகொண்டிருந்தனர். இருப்பினும், கத்தோலிக்க மதகுருமார் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பது அனைவரையும் திரும்பிப் பார்க்கவைத்த விடயமாகப் பேசப்படுகின்றது.

# கஞ்சா கடத்திய நபருக்கு விளக்கமறியல்

***(கந்தளாய் நிருபர்)***

வவுனியாவிலிருந்து திருகோணமலைக்கு 3 கிலோ 100 கிராம் கஞ்சாவை கொண்டுசென்ற நபரொருவரை இம்மாதம் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் ரஸாக் பயாஸ் நேற்று (18) உத்தரவிட்டார்.

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மருதம் குளம், வவுனியா பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வவுனியா பகுதியிலிருந்து டாட்டா சிறியரக லொறியொன்றில் பொருட்களுடன் மூன்று கிலோ 100 கிராம் கஞ்சா பொதியை மறைத்து கொண்டுசென்றபோது உப்புவெளி போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை மேற்கொண்டபோதே சந்தேகநபர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே இவ்வாறு உத்தரவு பிரப்பிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்ட பதில் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக சுகுணன் நியமனம்

***(பாறுக் ஷிஹான்)***



மட்டக்களப்பு மாவட்ட பதில் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக வைத்தியர் ஜி.சுகுணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று (18) மதியம் குறித்த பிராந்தியத்தில் உத்தியோகபூர்வமாக கடமையேற்ற பின்னர் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக்குறிப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளரால் எனக்கு கடிதம் ஒன்றின் ஊடாக தேவை கருதி மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சேவை பதில் பணிப்பாளராக கடமையாற்றுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்கத்தான் நான் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பதவியில் இருந்து உடனடியாக இடமாற்றம் பெற்று கடமையை பொறுப்பேற்றுக்கொண்டேன்.

மேலும் எனது பதவிக்காலத்தில் கல்முனை பிராந்தியத்தில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு உச்சக்கட்டத்தில் எனக்கு கிடைக்கப்பெற்றது. இதனால் மக்கள் உடனடியான தகவல்களை பெறுவதற்கு பங்களிப்பு வழங்கிய ஊடகவியலாளர்கள் ஊடகங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கல்முனை பிராந்திய சேவைகள் பணிமனையின் பதில் கடமைக்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசல குணவர்தனவினால் கல்முனை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பி.அப்துல் வாஜித் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரிதியகம மிருகக்காட்சிசாலையின் டோரா சிங்கக்குட்டி மக்கள் பார்வைக்கு

ரிதியகம மிருகக்காட்சிசாலையில் பிறந்துள்ள டோரா என பெயரிடப்பட்டுள்ள சிங்கக்குட்டி நேற்று (18) முதல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாக ரிதியகம மிருகக்காட்சிசாலையின் உதவிப் பணிப்பாளர்



ஹேமந்த சமரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த சிங்கக்குட்டி கடந்த ஜூலை மாதம் 26ஆம் திகதி பிறந்தது. அதற்கு இப்போது நான்கரை மாதங்கள் பூர்த்தியாகின்றன.

மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தாலும், சிறந்த நிலைக்கு வரும்வரை டோராவை தனிமையில் வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.


ரிதியகம சபாரி பூங்காவில் லாரா என்ற சிங்கத்துக்கு பிறந்த முதல் சிங்கக்குட்டி இதுவாகும். தற்போது ரிதியகம சபாரி பூங்காவில் 15 சிங்கங்கள் உள்ளதாகவும் அதில் 08 சிங்கக்குட்டிகள் அதே பூங்காவில் பிறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கரணவாய் பகுதியில் மினி சூறாவளி!

## 19 குடும்பங்கள் பாதிப்பு

***(யாழ் நிருபர்)***







யாழ்ப்பாணம் - கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரணவாய் பகுதியில் நேற்று முன்தினம் (17)ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக 19 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

கரணவாய் பகுதியில் J/348 மற்றும் J/350 பிரிவுகளில் இந்த சேத விவரங்கள் பதிவாகியுள்ள அதேவேளை, 15 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணிநேரத்தில் திடீரென பெய்த மழை காரணமாக 119.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மீண்டும்அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம்

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

தற்போது நாட்டிலுள்ள கொரோனா நிலைமையை கட்டுப்படுத்த முடியும். ஆனால், இது தொடர்பாக பொதுமக்கள் விழிப்புடனும் பாதுகாப்புடனும் இருப்பது மிகவும் முக்கியம் என்று சுகாதார அமைச்சின் தலைமை ஒருங்கிணைப்பாளர், சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளிலுள்ள 70 தீவிர சிகிச்சைப் பிரிவுக்குரிய கட்டில்களில் தற்போது 52 கட்டில்கள் கோவிட் வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த காலத்தை விட தற்போது ஒட்சிசன் வழங்க வேண்டியுள்ள கோவிட் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கோவிட் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த சட்ட மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் தேவையான சட்ட வரைபுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் வைத்தியர் அன்வர் ஹம்தானி மேலும் தெரிவித்துள்ளார்.

LK Newspapers Viber Community

தைப்பொங்கல் மற்றும் பௌர்ணமி தினத்துடன் இணைந்து கிடைத்த நீண்ட வார இறுதி விடுமுறை நாட்களில் பொது சுகாதார விதிமுறைகளை மதிக்காது, பாதுகாப்பற்ற பயணங்கள் மற்றும் யாத்திரைகள் காரணமாக கொரோனா தொற்று பரவுவதற்கான ஆபத்து காணப்படுவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

வார இறுதி யாத்திரைகள் மற்றும் சுற்றுலாக்கள் காரணமாக அநுராதபுரம், சிவனொளிபாதமலை, கண்டி ஆகிய சுற்றுலாத்தலங்கள் மற்றும் பல கடற்கரைகள் என்பன பொதுமக்களால் நிரம்பி வழிந்ததாகவும் அவர் தெரிவித்தார். குறிப்பாக, சுற்றுலாப் பயணிகள் முறையாக சுகாதார விதிமுறைகளை பின்பற்றாது, முகமூடிகளைக் கூட அணியாது மிக நெருக்கமான முறையில் நடந்துகொண்டதையும் காணக்கூடியதாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போது நாட்டில் ஒமிக்ரொன் திரிபினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. கடந்த மூன்று நாட்களில் இலங்கையில் முறையே 677, 661 மற்றும் 690 கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இவ்வாறான நிலையில், மக்கள் பாதுகாப்பற்ற முறையில் செயற்பட்டால் எதிர்காலத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நீண்ட விடுமுறையில் நீண்ட தூரம் பயணம் செய்பவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது மிகவும் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சுகாதார வழிகாட்டல்களை பொதுமக்கள் கடுமையாக கடைப்பிடிக்கவேண்டிய சூழ்நிலை மீண்டும் உருவாகி வருவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். சுகாதாரத்துறை அதிகாரிகளின் எச்சரிக்கைகளை புறந்தள்ளி மக்கள் பொறுப்பற்று நடப்பது இப்போது வாடிக்கையாகியிருக்கிறது.


தமிழன் THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜனவரி 19ஆம் திகதி, புதன்கிழமை


# மக்கள் முன்னுள்ள பொறுப்பு!

2021ஆம் ஆண்டுடன் கொரோனா விடை பெற்றுவிடும் என்று நினைத்திருந்த நிலையில், கொரோனாவின் தாக்கம் மீண்டும் உச்சமடைந்து வருகிறது. இரண்டாம் அலையின் உச்சத்தைச் சரியாகக் கணித்த கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் போல் கட்டுமன், ஒமிக்ரொன் பரவலின் வளர்ச்சிப் போக்கை 'அதிவேகம்' என்கிறார். ஒப்பீட்டளவில் நாட்டின் மருத்துவக் கட்டமைப்பும் தயார் நிலையில் உள்ளது. இரண்டாம் அலையில் கற்ற பாடங்கள், மருத்துவர்களையும் சுகாதாரக் கட்டமைப்பையும் கூடுதல் திறன்மிக்கவையாக மாற்றியுள்ளன.

ஒமிக்ரொன் தொற்றால் கடுமையான பாதிப்போ, மரணமோ ஏற்படும் சாத்தியம் குறைவாக இருப்பதுபோல் தோன்றினாலும், மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய அவசியத்தை மருத்துவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

ஒமிக்ரொன் வேற்றுருவின் ஆரம்பகட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் இளம்வயதினர். அவர்களுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்படும் சாத்தியம் முந்தைய வேற்றுருக்களிலும் குறைவாக இருந்தது. மேலும், முந்தைய கொரோனா தொற்றாலோ, தடுப்பூசியாலோ நோயெதிர்ப்பாற்றல் பெற்றவர்களையே ஒமிக்ரொன் பெருமளவில் பாதித்திருக்கிறது. எனவே, தடுப்பூசி போடப்படாத வயதானவர்களை ஒமிக்ரொன் எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்த தெளிவு இல்லை. குறிப்பாக, நெரிசலான வாழ்க்கை முறை, அதிக ஊட்டச்சத்துக் குறைபாடு, நீரிழிவு, காசநோய் போன்ற காரணிகள் மக்களை அதிக ஆபத்தில் தள்ளக்கூடும்.

புதிய ஆண்டில் உருவாகிவரும் புதிய அலையின் காலகட்டம் இரண்டாம் அலையின் காலகட்டத்துடன் ஒத்துப்போகிறது. பாடசாலைகள் முதல் சமூக பொது நிகழ்வுகள் வரை அரங்கேற ஆரம்பித்துள்ளன. இந்தப் பின்னணியில் நாம் அனைவரும் சமூகப் பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும். தனிமனித இடைவெளி, முகக்கவசம் அணிதல், கைகளை சவர்க்காரம் கொண்டு கழுவுதல், கூட்டங்களைத் தவிர்த்தல், தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதல் உள்ளிட்ட கொரோனா தடுப்பு நடைமுறைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும். எதற்கெடுத்தாலும் அரசையும், சுகாதாரத்துறையையும் குறைசொல்வதை விடுத்து நமக்குள்ள பொறுப்பை நாம் நிறைவேற்ற வேண்டும்.



# முதுமையைச் சிக்கலுக்குள்ளாக்கும் ஒஸ்டியோபொரோசிஸ்

• டொக்டர் சிவப்பிரகாஷ்

முதிய வயதில், குறிப்பாக, பெண்கள் குளியலறை அல்லது வேறு இடங்களில் வழுக்கி விழுந்து விலா எலும்பை முறித்துக்கொள்வது நாம் அடிக்கடி கேள்விப்படும் நிகழ்வாகும். இந்த நிகழ்வு விபத்தாகக் கருதப்பட்டு, எலும்பு முறிவுக்கான சிகிச்சையே மேற்கொள்ளப்படுகிறது. உண்மை என்னவென்றால், விபத்துகளாகக் கருதப்படும் இந்த நிகழ்வுகளில் பெரும்பாலானவற்றுக்கு எலும்புப்புரை நோயே காரணமாக இருக்கலாம். இதைக் கவனிக்காவிட்டால்,பாதிக்கப்பட்டவருக்கு அந்த 'விபத்து' அடிக்கடி ஏற்படத் தொடங்குகிறது. சிலநேரம் உயிருக்கும் ஆபத்தாக முடிகிறது.

குழந்தைப் பருவத்தில் மென்மையாக இருந்து, வயது ஏற ஏற வலுப்பெற்று, பின்னர் மீண்டும் வயது ஏற ஏற தன் வலுவை இழந்து, நொறுங்கும் தன்மை கொண்டதாக மாறும் இயல்பை எலும்புகள் கொண்டுள்ளன. எலும்புகள் நொறுங்கும் தன்மை கொண்டதாக மாறும் நிலையே எலும்புப்புரை நோயாகும். இந்த நோய் எல்லோருக்கும் ஏற்படுவதில்லை என்றாலும், பாதிக்கப்பட்டவர்கள் அந்த நோயால் பாதிப்புக்குள்ளாகியிருப்பதை உணர்வதில்லை. இதுவே இந்த நோயை பெரும் ஆபத்தானதாக மாற்றிவிடுகிறது.

**1. எலும்புப்புரை நோய் என்றால் என்ன?**

எலும்புப்புரை என்பது குறைந்த எலும்புத் திண்மை, எலும்புத் திசுக்களின் நுண்ணிய சிதைவு போன்றவற்றால் ஏற்படும் நோயாகும். இந்த நோயால் எலும்புத் திண்மை குறைவும், அதன் நுண் கட்டமைப்பில் சிதைவும் ஏற்பட்டு, இறுதியில் எலும்பு முறிவு ஏற்படும். எலும்பு முறிவு ஏற்படும் ஆபத்துள்ள எலும்புத் தளங்களை இந்த நோய் பாதிக்கும்.

**2. எலும்புப்புரை குறித்த விழிப்புணர்வு ஏன் முக்கியம்?**

இது மனிதர்களைப் பலவீனப்படுத்தும் நோய்களில் முக்கியமானது. இந்த நோய் காரணமாக, முதுமையில் எலும்பு பலவீனமடைந்து எலும்பு முறியும் அபாயத்தை எதிர்கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. சிலநேரம் இந்த எலும்பு முறிவால் இறப்புக்கூட நேரிடலாம். இது நாட்பட்ட நிலை என்பதால், இதற்கு நீண்டகால சிகிச்சை தேவை. சிலருக்கு வாழ்நாள் முழுவதும் மறுவாழ்வு சிகிச்சை தேவைப்படலாம். அதனால் வாழ்க்கைத்தரம் மோசமாகப் பாதிப்புக்கு உள்ளாகக்கூடும். முன்கூட்டியே கவனிக்காவிட்டால் இந்த நோய்க்கான சிகிச்சை, பாதிப்புக்கு உள்ளானவர்களின் மறுவாழ்வு ஆகியவற்றுக்கான மருத்துவச் செலவு சுமையாக மாறும்.

**3. எலும்புப்புரை நோயின் இயல்பு என்ன?**

50 வயதில் எலும்புப்புரையால் எலும்பு முறிவு ஏற்படுவதற்கான ஆபத்து பெண்களுக்கு 50 சதவீதமும், ஆண்களுக்கு 20 சதவீதமும் உள்ளது. 55 வயதுக்கு மேலான பெண்களிடமும், 65 வயதுக்கு மேலான ஆண்களிடமும் எலும்புப்புரையின் விளைவாக ஏற்படும் எலும்பு முறிவுகள் அதிகரித்துவருகின்றன.

பொதுவாக, எலும்புப்புரையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மாதவிடாய் நின்ற 10 ஆண்டுகளுக்குப் பிறகு மணிக்கட்டு எலும்பு முறிவும், மாதவிடாய் நின்ற 15 முதல் 20 ஆண்டுகளுக்குப் பிறகு முதுகெலும்பு முறிவும், 75 வயதுக்குப் பிறகு இடுப்பெலும்பு முறிவும் ஏற்படலாம்.

**4. எலும்புப்புரை நோய் முதுமையுடன் தொடர்புடையதா?**

ஆம். ஆண்களும், பெண்களும் 30ஆவது வயதில் எலும்புத் திண்மையின் உச்சத்தை அடைந்த பிறகு, எலும்புத் திண்மையை இழக்கத் தொடங்குகின்றனர். மாதவிடாய் நிறுத்தத்துடன் தொடர்பிருப்பதால், விரைவான எலும்புத் திண்மை இழப்பு ஆண்களைவிட பெண்களிடம் அதிக வீரியத்துடன் இருக்கிறது. மாதவிடாய் நின்ற 5 முதல் 7 ஆண்டுகளில் எலும்புத் திண்மையில் அண்ணளவாக 12 சதவீதத்தைப் பெண்கள் இழக்கிறார்கள். மாதவிடாய் நிறுத்தத்திற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு பெண்களிடம் தொடங்கும் ஈஸ்ட்ரோஜன் குறைபாடே இதற்குக் காரணம். வயதான ஆண்களில் டெஸ்டோஸ்டீரோன், ஈஸ்ட்ரோஜன் குறைந்த அளவே எலும்பு இழப்புக்குப் பங்களிக்கிறது.

**5. எலும்புப்புரையால் முறிவுக்கு உள்ளாகும் பொதுவான எலும்புகள் யாவை?**

முதுகெலும்பு, இடுப்பு, மணிக்கட்டு, மேற்கையின் நீண்ட எலும்பு ஆகியவை எலும்புப்புரையால் முறிவுக்கு உள்ளாகும் பெரிய எலும்புகளாகும்.

இடுப்பெலும்பு முறிவுகள், வலி, எடையைத் தாங்க இயலாமை போன்ற அறிகுறிகளுடன் இருக்கும். அதனை சீரமைப்பதற்கு அறுவை சிகிச்சை தேவைப்படும். மற்ற அனைத்து வகையான எலும்பு முறிவுகளைக் காட்டிலும் இந்த எலும்பு முறிவே செயற்பாட்டு நிலையை வெகுவாகப் பாதிக்கும். வாழ்க்கைத் தரத்தையும் குறைக்கும். இறப்புக்கான ஆபத்தும் இடுப்பெலும்பு முறிவில் உண்டு.

முதுகெலும்பு முறிவு, எதிர்கால எலும்பு முறிவுகளின் வலுவான முன்னறிவிப்பாகும். நாட்பட்ட வலி, கூன் விழுதல், நரம்பியல் பிரச்சினைகள், நுரையீரல் திறன் குறைதல், தன்னம்பிக்கை இழப்பு போன்றவை இதனால் ஏற்படலாம்.

முதுகெலும்பு முறிவுகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவேண்டிய அளவுக்குக் கடுமையான வலியையோ, சில வாரங்களில் மறைந்துவிடும் இலேசான வலியையோ கொண்டிருக்கும் என்பதால், இதை ஸ்கேன் மூலமாகவும், எக்ஸ்ரே மூலமாகவும் மட்டுமே கண்டறிய முடியும். 3 செ.மீ. அல்லது அதற்கு மேற்பட்ட உயர இழப்பு ஏற்பட்டால் அது புதிய முதுகெலும்பு முறிவாக இருக்கலாம் என்கிற எச்சரிக்கையுடன் அதை அணுக வேண்டும்.

மணிக்கட்டு எலும்பு முறிவுகள், அடுத்தடுத்த முதுகெலும்பு, இடுப்பெலும்பு முறிவுகளின் முக்கியமான முன்னறிவிப்பாகக் கருதப்பட வேண்டும்.

**6. எலும்புப்புரை எவ்வாறு கண்டறியப்படுகிறது?**

***1. மருத்துவக் கண்டறிதல்:*** முகத்திலும் மண்டை ஓட்டிலும் ஏற்படும் எலும்பு முறிவுகளைத் தவிர்த்து, நிற்கும் நிலையிலிருந்து விழுந்ததற்குச் சமமான அல்லது அதற்குக் குறைந்த அதிர்ச்சியின் விளைவாக ஏற்படும் எலும்பு முறிவின் மூலம் எலும்புப்புரையை வரையறுக்க முடியும்.

***2. ஸ்கிரீனிங்:*** எலும்புத் திண்மை இழப்பு வெளித் தெரியாமல் ஏற்படுகிறது. இது தொடக்கத்தில் அறிகுறியற்றதாக இருக்கும். பெரும்பாலும் முதல் மருத்துவ முறிவு ஏற்பட்ட பின்னரே எலும்புப்புரை கண்டறியப்படுகிறது. எனவே, மேலும் எலும்பு முறிவுகளைத் தடுப்பதே இந்தச் சிகிச்சையின் நோக்கம்.

***3. D.X.A ஸ்கேன்:*** டி.எக்ஸ்.ஏ. ஸ்கேன் மூலம் பி.எம்.டியை (எலும்புத்தாது அடர்த்தி) அளவிடுவதன் மூலம் எலும்புப்புரையைக் கண்டறியவும், எலும்பு முறிவு அபாயத்தைக் கணிக்கவும் முடியும்.

***4. Frax:*** எலும்பு முறிவுக்கான வாய்ப்புகளை வழங்கும் இணைய அடிப்படையிலான மதிப்பெண் இதுவாகும். உலகெங்கிலும் உள்ள பெரும்பாலான சிகிச்சை வழிகாட்டுதல்களில் இது சேர்க்கப்பட்டுள்ளது. அடுத்த பத்தாண்டுகளில் எலும்பு முறிவுக்கு என்ன சாத்தியம் உள்ளது என்பதை இதன் மூலம் கண்டறிய முடியும்.

சில சமயம் பி.எம்.டி. அளவீடு மட்டும் போதுமானதாக இருக்காது என்பதால், D.X.A ஸ்கேனுடன் சேர்த்து, Frax மதிப்பீட்டையும் இணைத்துப் பார்ப்பதே துல்லிய கண்டறிதலுக்கு உதவும்.

**7. எலும்புப்புரையால் எலும்பு முறிவுக்கு உள்ளாகும் அபாயத்தில் உள்ளவர்கள் யார்?**

எலும்புப்புரைக்கும் எலும்பு முறிவுகளுக்கும் குறைந்த எலும்புத் தாது அடர்த்தி மட்டுமே ஆபத்து காரணி அல்ல.

***மாற்ற முடியாத ஆபத்து காரணிகள்:***

முதுமை, பெண் பாலினம், ஆசிய இனம், எலும்புப்புரையால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்ப வரலாறு, முந்தைய எலும்பு முறிவுகள், பலவீனமான உடல்.

***மருத்துவ ரீதியாகச் சரிசெய்யக்கூடிய ஆபத்து காரணிகள்:***

1. ஈஸ்ட்ரோஜன் குறைபாடு, கல்சியம் குறைபாடு, விற்றமின் டி குறைபாடு, மதுப்பழக்கம், புகைபிடித்தல், மருந்துகள் (குறிப்பாக ஸ்டீரொய்ட்கள்).
2. எலும்பு முறிவுகளுக்கான ஆபத்து காரணிகள் (எலும்புத்தாது அடர்த்தி தவிர்த்து)
3. அடிக்கடி கீழே விழும் இயல்பு (குறிப்பாக குறைந்த எலும்புத் தாது அடர்த்தி கொண்ட நோயாளிகளிடையே), மோசமான உடற்செயல்பாடு, குறைபாடுள்ள பார்வை, பலவீனமான அறிவாற்றல் போன்றவை.

நீரிழிவு நோய் உள்ளதா என்று நாம் பரிசோதிப்பதுபோன்று, எலும்புப்புரை நோய் ஏற்படும் சாத்தியம் உள்ளதா என்பதை நாளமில்லாச் சுரப்பியல் நிபுணரின் (Endocrinologist) மேற்பார்வையில் பரிசோதித்துக்கொள்வது நல்லது.

வயதானவர்களுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டால், நாளமில்லாச் சுரப்பியியல் நிபுணரையும், எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணரையும் சந்தித்து ஆலோசனை பெற வேண்டும். அது வருங்கால ஆபத்தைப் பெருமளவு குறைக்கும்.

- நன்றி - இந்து தமிழ்

# ரொபோவுடன் பறக்கும் ஆளில்லா ஹெலிகொப்டர்




மோட்டார்சைக்கிள் தயாரிப்பிலிருந்த கவசாக்கி, திடீரென குட்டி ஹெலிகொப்டர் தயாரிப்பில் இறங்கிவிட்டது. அதன் 1,000 சி.சி., நிஞ்சா ரக பைக்கின் இயந்திரத்தை வைத்தே கே.ரேசர் எக்ஸ் 1-பி என்ற ஹெலிகொப்டரை அண்மையில், கவாசாக்கி வெள்ளோட்டம் பார்த்துள்ளது.

இந்த ஹெலிகொப்டர் ஆளில்லாமல் பறக்கும் தானியங்கி ரகமாகும். அதுமட்டுமல்ல, ஒரு சிறிய ரொபோவும் இந்த சிறிய ஹெலிகொப்டரில் இருக்கும். அது ஹெலிகொப்டரில் சரக்கை ஏற்றும் என்பதுடன், அதனுடனேயே போய் தரையிறங்கி, முகவரிதாரருக்கு சேர்க்கவேண்டிய துரித அஞ்சல்களை எடுத்துப் போய்க் கொடுத்துவிட்டு, மீண்டும் ஹெலிகொப்டரில் ஏறிக்கொள்ளும். எதற்கு இந்த திடீர் மினி ஹெலிகொப்டர் முயற்சி?

உலகெங்கும் சரக்குப் போக்குவரத்தில் வேலையாட்களுக்கு தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. மேலும், போக்குவரத்து நெரிசல், ஆறு, மழைவெள்ளம், கடல் போன்ற புவியியல், தட்பவெப்பத் தடைகளைத் தாண்டி, சரக்குகளை வழங்கும் ஒரு வாகனமாக சிறிய ஹெலிகொப்டர்களை தேர்ந்தெடுத்திருப்பதாக கவசாக்கியின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த வாகனம் ஒரு கலவைப் பிறவியாகும். ஹெலிகொப்டரைபோன்று தலைக்கு மேல் சுழலும் விசிறிகள் வாயிலாக செங்குத்தாக தரையிலிருந்து கிளம்பவும், இறங்கவும் ரேசரால் முடியும். ஆனால், முன்னோக்கிச் செல்வதற்கு, விமானம் போன்று வலமும், இடமும் இறக்கைகளும், இயந்திர விசிறிகளுமுள்ளன.

பேரிடர் காலங்களில், 100 கிலோ எடையை சுமந்து பறக்கும் திறன்கொண்ட கவசாக்கியின் ரேசர் ஹெலிகொப்டர் மருந்துகள், உணவு, உடை போன்றவற்றை வேண்டியோருக்குக் கொடுக்க உதவும். அதுமட்டுமல்ல, தீவுப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு தரவும் இது உதவும்.

# இன்றைய நாளில்...

- 1764 – உலகின் முதலாவது அஞ்சல் குண்டுவெடிப்பு, டென்மார்க் இராணுவத் தலைவர் போல்சனைப் படுகாயப்படுத்தியது.
- 1818 – பிரெஞ்சு இயற்பியலாளர் ஒகஸ்டின் பிரெனெல் முனைவுற்ற ஒளியைப் பற்றிய விளக்கத்தை அறிவித்தார்.
- 1867 – இலங்கையில் பால்க்னர் என்பவரைக் கொன்ற குற்றத்திற்காக கல்யாண் கங்காணி என்பவர் தூக்கிலிடப்பட்டார்.
- 1883 – முதலாவது மேலே செல்லும் கம்பி வலையமைப்பைக்கொண்ட மின்னொளி அமைப்பு எடிசனால் நியூ ஜெர்சியில் அமைக்கப்பட்டது.
- 1903 – ஐக்கிய அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே முதலாவது வானொலி ஒலிபரப்பு ஆரம்பமாயிற்று.
- 1946 – ஜப்பானிய போர்க் குற்றவாளிகளை விசாரிப்பதற்கென டக்ளஸ் மக்கார்த்தர், டோக்கியோவில் தூர கிழக்கிற்கான பன்னாட்டு இராணுவ நீதிமன்றத்தை அமைத்தார்.
- 1966 – இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1983 – அப்பிள் நிறுவனத்தின் வரைகலை பயனர் இடைமுகம் மற்றும் சுட்டியுடனான முதலாவது வணிகமுறை தனி மேசைக் கணினியான "அப்பிள் லீசா" வெளியிடப்பட்டது.
- 1983 – நாசி போர்க்குற்றவாளியான கிளவுஸ் பார்பி பொலிவியாவில் கைதுசெய்யப்பட்டார்.
- 1986 – முதலாவது கணினி நச்சுநிரலான பிரெயின் பரவத் தொடங்கியது.
- 2006 – புளூட்டோவுக்கான முதலாவது விண்கலமான 'நியூ ஹரைசன்ஸ்'ஐ நாசா விண்ணுக்கு ஏவியது.

# நக்கல் நமசிவாயம்

எரிபொருள் கேட்டு மினிஸ்டர் காமினி லொக்குகே, மினிஸ்டர் கம்மன்பிலவிடம் கெஞ்சுற கெஞ்சுக்கு சர்வதேச நாணய நிதியத்திடமே உதவிய கேட்டிருக்கலாம் போல..!



LK Newspapers Viber Community

# நுரைச்சோலை மின்நிலையத்தின் மேலுமொரு பிரிவை இடைநிறுத்த மின்சார சபை கோரிக்கை

நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாம் பிரிவிலுள்ள இயந்திரத்தின் பராமரிப்பு செயற்பாடுகளுக்கு நூறு நாட்கள் தேவைப்படுமென மின்சார சபை, மின்சக்தி அமைச்சருக்கு அறிவித்துள்ளது.

ஆறு வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் பராமரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மூன்றாம் பிரிவின் பராமரிப்பு நடவடிக்கைகள் இந்த வருடத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதன் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை மின்சார சபை கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஏழாம் திகதி மின்சக்தி அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, இந்த பாராமரிப்பு நடவடிக்கைகளுக்காக 400 பணியாளர்கள் தேவைப்படுவார்கள். மேலும், சீனா மெசினரி எஞ்சினியர் கோப்ரேஷன் நிறுவனத்தினூடாக முன்னெடுக்கவும் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதுவரையிலும் நுரைச்சோலை லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் பிரிவு செயலிழந்துள்ளது. அதன் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்வரும் 22ஆம் திகதியாகும்போது நிறைவுசெய்ய முடியும் என எதிர்பார்ப்பதாக அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## 18.01.2022 நாணய மாற்று வீதம்

இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 7234 | 036 73 |
| கனேடியன் டொலர் | 046 6 28 | 052 5071 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 1 2 | 21 1720 |
| யூரோ | 115 0353 | 124 0 7 |
| ஜப்பான் யென் | 0 6121 | 0 6771 |
| சிங்கப்பூர் டொலர் | 035 8644 | 040 5842 |
| ஸ்ரேலிங் பவுன் | 158 7037 | 167 1614 |
| சுவிஸ் பிரான்ங் | 104 8807 | 112 5532 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 5002 |
| குவைட் | குவைட் தினார் | 557 3127 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 4125 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 3528 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 71 1 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 87 |

# பளையில் இடியனுடன் ஒருவர் கைது!

(யாழ் நிருபர்)



பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சோறன்பற்று பகுதியில் சட்டவிரோதமாக இடியன் துப்பாக்கி வைத்திருந்த நபரொருவர் பளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பளை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம்(17) இரவு குறித்த சந்தேகநபரின் வீடு சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபரிடமிருந்த இடியன் துப்பாக்கி மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் பளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யால தேசிய பூங்காவில் உல்லாசமாகத் திரியும் விலங்குகள்

(செலும் குணதிலக்க)

யால தேசிய பூங்காவுக்கு கடந்த சில தினங்களாக பெய்த மழையுடனான காலநிலையினால் அங்குள்ள நீர்நிலைகளில் நீர் நிறைந்துள்ளது.



கொரோனா தொற்று நிலையின் காரணமாக தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் நீர்நிலைகள் நீரில் நிரம்பியுள்ளதால், விலங்குகள் யால வனப்பகுதியில் உல்லாசமாக இருப்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ் நிருபர்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் விளக்கமறியல் பெப்ரவரி முதலாம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 20ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட குறித்த 13 மீனவர்களும் மறுநாள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று மூன்றாவது தவணையாக குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது 13 மீனவர்களுக்கான விளக்கமறியல் காலத்தை எதிர்வரும் முதலாம் திகதிவரையில் நீதவான் நீடிக்க உத்தரவிட்டுள்ளார்.

# மூத்த கல்வியியலாளர் அப்பாத்துரை பஞ்சலிங்கத்துக்கு விருது வழங்கி கௌரவிப்பு

(யாழ் நிருபர்)

மூத்த கல்வியியலாளர் அப்பாத்துரை பஞ்சலிங்கம் அகில இலங்கை சைவ மகா சபையினால் "அன்பே சிவம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்தோடு அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற திருமந்திரப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



அகில இலங்கை சைவ மகா சபை தைப்பூச திருநாளை முன்னிட்டு நடத்திய அன்பே சிவம் நிகழ்வும் விருது வழங்கலும் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணம் மற்றும் சொக்குவில் இந்துக் கல்லூரிகளின் முன்னாள் அதிபர் அப்பாத்துரை பஞ்சலிங்கம் அன்பே சிவம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீசற்குணராஜா, வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் இராசேந்திரம் குருபரன், ஓய்வுநிலை நீதிபதி இ.வசந்தசேனன், விரிவுரையாளர்கள், அகில இலங்கை சைவ மகா சபையினார், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







தைத்திருநாளை முன்னிட்டு நல்லூர் கைலாச பிள்ளையார் இந்து இளைஞர் சங்கத்தினால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் பொங்கல் நிகழ்வு ஆலய முன்றலில் கடந்த சனிக்கிழமை (15) இடம்பெற்றது. (படங்கள் - யாழ் நிருபர்)

# இராஜாங்க அமைச்சர் விம்பிள்டன் பிரபு இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சந்திப்பு

ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக தெற்கு மற்றும் மத்திய ஆசியா, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான இராஜாங்க அமைச்சர் விம்பிள்டன் பிரபு அஹ்மட்டை வெளியுறவு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய நிறுவனங்களுக்கான முதலீட்டு வாய்ப்புகள், இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் உறவுகளை மேம்படுத்துதல், கல்வியிலான பங்காளித்துவம், ஐக்கிய இராச்சியத்தில் இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்புகள் மற்றும் ருவாண்டாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு மற்றும் பேர்மிங்ஹமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் போன்ற இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சிய இருதரப்பு உறவுகளிலான பரஸ்பர நலன்கள் குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.



# சௌபாக்யா உற்பத்தி கிராமங்களின் உற்பத்திகளை சர்வதேச மயப்படுத்த திட்டம்

## அநுராதபுரம் மாவட்டத்தில் மாத்திரம் 30 பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக செஹான் தெரிவிப்பு

(அநுராதபுரம் நிருபர்)

சௌபாக்யா உற்பத்தி கிராமங்களிலிருந்து பெறப்படும் உற்பத்திப் பொருட்களை எமது தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதே அரசின் பிரதான நோக்கமாகுமென சமூர்த்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டங்களில் ஒன்றான சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் மூலம் அநுராதபுர மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் 30இற்கும் அதிகமான உற்பத்திக் கிராமங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ரஜரட்ட பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அனைத்து உற்பத்திக் கிராமங்களில் இருந்தும் தற்சமயம் அதன் பயனை அடைந்துகொள்வதற்கு செய்கையாளர்கள் ஆரம்பித்துள்ளனர்.

பொறுப்புவாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உரிய சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் எமது நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி வெளிநாட்டு சந்தைகளில் எழ ஆரம்பிக்கும். இதன் மூலம் அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சி வீதத்துக்கு பாரிய பங்களிப்பு கிடைக்குமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதன் மூலம் உற்பத்திக் கிராம செய்கையாளர்களுக்கும் தமது பொருளாதாரத்தினை விருத்திசெய்து கொள்வதற்கான வாய்ப்பும் சந்தர்ப்பமும் கிட்டுகின்றது. அண்மையில் இலங்கைக்கு விசேட சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த சீன நாட்டு தூதுக்குழுவினர் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களின் முன்னேற்றம் குறித்து நேரில் சென்று பார்வையிட்டதுடன் அதனை பாராட்டியும் உள்ளனர்.

இத்திட்டத்தினை மேலும் விருத்திசெய்வதற்கு தேவையான உதவிகளையும் வசதிகளையும் எமக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளதுடன் எமது நாட்டு உற்பத்திப் பொருட்களை சீன நாட்டு வர்த்தக சந்தைகளுக்கு கொள்வனவு செய்வதற்கும் முன்வந்துள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.





அநுராதபுர மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களுக்கு சீன தூதுக்குழு நேரில் சென்று பார்வையிட்டபோது..
(படங்கள் - அநுராதபுரம் நிருபர்)

# வென்னப்புவ — போலவத்த கிறிஸ்தவ தேவாலயத்தில் பழங்கால மயான பூமி

(ஜூட் சமந்த)

வென்னப்புவ, போலவத்த கிறிஸ்தவ தேவாலய நிலப்பரப்பில் பழைமைவாய்ந்த மயான பூமியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த தேவாலயத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடமொன்றுக்காக முன்னெடுக்கப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளின்போதே இந்த மயானபூமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நிலப்பரப்பிலிருந்து 3 அடி வரையான ஆழத்தில் நபரொருவரின் சடலம் புதைக்கப்பட்ட கொங்கிறீட்டினூடாக நிர்மாணிக்கப்பட்ட சடல பெட்டியொன்று இனங்காணப்பட்டுள்ளது. அதன்பின்னர் அவர்கள் இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

தேவாலய நிலப்பகுதியில் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வது சாதாரணதொரு விடயமாக கருதப்படுகிறது. அதற்காக தேவாலயத்தின் நிலத்தில் ஒருபகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், தேவாலயத்தில் பணியாற்றிய பாதிரியார் இறந்ததால் கத்தோலிக்க சமூகத்தினர் தேவாலயத்திற்கு அருகில் உடலை அடக்கம் செய்கின்றனர்.

இருந்தபோதிலும் போலவத்த தேவாலயத்தின் பூமியில் இதுவரைகாலமும் அவ்வாறு யாரும் அடக்கம் செய்யப்படவில்லை என அந்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய இந்த மயான பூமி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு தேவாலயத்தின் பாதிரியார் தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்த மயான பூமியை பார்வையிடுவதற்காக அதிக எண்ணிக்கையிலானோர் வந்துசெல்வதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

LK Newspapers Viber Community

# அக்கரப்பத்தனையில் மூன்று கோவில்களில் ஒரேநாளில் கொள்ளையர்கள் கைவரிசை

## சந்தேக நபர்களைத் தேடி பொலிஸார் வலைவீச்சு

(க.கிஷாந்தன்)

நுவரெலியா - அக்கரப்பத்தனையில் ஒரே நாளில் அடுத்தடுத்து, மூன்று கோவில்களில் கொள்ளையடித்த சம்பவம் அப்பகுதி மக்களிடம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரப்பத்தனை சின்னதோட்டம் ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவிலில் புகுந்த கொள்ளையர்கள் சாமி கழுத்திலிருந்த தங்க நகை மற்றும் உண்டியலை உடைத்து பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதற்கிடையே இதற்கு அடுத்துள்ள பச்சைபங்களா தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் பூட்டை உடைத்து, அங்கிருந்த உண்டியலை உடைத்து பணத்தை கொள்ளையடித்து எடுத்துச் சென்றுள்ளனர். இதனையடுத்து உருலேக்கர் தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பூட்டை உடைத்து அங்கிருந்த உண்டியலை உடைத்து பணத்தை கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.





அக்கரப்பத்தனை நகரத்திற்கு அடுத்தடுத்த தோட்டங்களில் ஒரேநாளில் மூன்று கோவில்களின் பூட்டை உடைத்து கொள்ளை நடந்திருப்பது பொதுமக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கோவில் கொள்ளைகள் தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர்கள் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து அக்கரப்பத்தனை பொலிஸாரும், நுவரெலியா பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரும், கைரேகை பிரிவினரும் ஆலய கட்டிடங்களுக்கு சென்று சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

அத்தோடு சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை எனவும், பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.



கம்பளை பொலிஸ் வலயத்திற்குட்பட்ட பகுதியில் பாடசாலைக்கு செல்லாமல் இருக்கும் மாணவர்களை இனங்கண்டு அவர்களை பாடசாலைக்கு சேர்த்து தேவையான உபகரணங்களையும் கம்பளை வலய பொலிஸ் அத்தியட்சகர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தலைமையில் வழங்கினர். (கம்பளை நிருபர் )

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## சிங்கள மொழி பேசும் அதிகாரிகளால் தமிழ் கலாசார கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு





(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபை ஆளணி மற்றும் பயிற்சிப் பிரிவினால் சிங்கள மொழி பேசும் நிறைவேற்று அதிகாரிகளுக்கு 200 மணித்தியால தமிழ்மொழி தேர்ச்சிப் பாடநெறி ஒன்று வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி பயிலுனர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட தமிழ் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சி ஒன்று அண்மையில் பல்லேகல வீரவிக்கும மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் அரசகரும மொழிகள் திணைக்கள போதனாசிரியர் எஸ்.சந்திரசேகரன், மத்திய மாகாண ஆளணி மற்றும் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் திலினி தெஹிகொல்ல, வத்துகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரசிகா கலுடான, மகாவலி கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி சர்மிலா தர்சினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கம்பளையில் எரிவாயு அடுப்பு வெடிப்பு



கம்பளை நிருபர்

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜயமாலப்புர பிரதேசத்தில் வீடு ஒன்றில் எரிவாயு கோளாறு காரணமாக அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

நேற்றுமுன்தினம் (17) மதியம் உணவு சமைத்துக் கொண்டிருந்தபோது திடீரென அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது. எனினும், யாருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கினிகத்தேனை - தேசிய பாடசாலையில் இரு ஆசிரியர் உட்பட 11 பேருக்கு கொவிட்

(கண்டி நிருபர்)

கினிகத்தேனை தேசிய பாடசாலையில் 11 பேருக்கு கொரோனா தொற்று காரணமாக இரண்டு வகுப்புகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

10ஆம் மற்றும் 11ஆம் தர வகுப்புகளைச் சேர்ந்த 08 மாணவர்களுக்கும் 2 ஆசிரியர்களுக்கும் கொரோனா தொற்று உறுதியானதையடுத்து மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

எனவே ஸூம் தொழில்நுட்பத்தில் பாடங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலையில் மேற்படி பாதிப்பிற்குள்ளானதாகக் கருதப்படும் மாணவர்களுடன் தொடர்புடைய 500இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கும் 63 ஆசிரியர்களுக்கும் சுயதனிமைப்படுத்தல் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## கொட்டகல - கொமர்சல் பகுதியில் சிறுத்தை நடமாட்டம் அதிகரிப்பு

மக்கள் பீதியில்



மஸ்கெலியா நிருபர்.

கொட்டகல மற்றும் கொமர்சல் பகுதியில் இரவு, பகல் வேளையில் சிறுத்தை நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொட்டகல கொமர்சல் மற்றும் சமகிபுர பகுதியில் சுமார் 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்கள் கடந்த சில தினங்களாக மிகவும் அச்சத்துடன் வாழ்ந்துவருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த இரண்டு கிராமத்தின் மேல் பகுதியில் 100 ஏக்கர் பரப்பளவில் வனப்பகுதியிலுள்ள கற்குகைகளில் சிறுத்தைகள் உள்ளதாகவும் இப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்கள் வளர்க்கும் நாய், கோழி, தாராக்கள் என்பனவற்றை இரவு பகல் நேரத்தில் பிடித்துக் செல்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அப்பகுதியில் வாழும் மக்களுக்கான குடிநீர்க் குழாய் அந்த வனப்பகுதியிலிருந்து பெற்றுகொண்டுள்ளதால் குடிநீர்க் குழாய் உடைப்பு ஏற்பட்டால் திருத்தம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# விலை அதிகரிப்பை அரசு கண்டுகொள்ளாதிருப்பது மக்களின் வாழ்க்கைக்கு அடிக்கும் சாவுமணி

## - உக்குவளை பிரதேச சபை உறுப்பினர் பரூஸ் விசனம்

மாத்தளை நிருபர்

அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்திடும் நுகர்வோர் அதிகாரசபை இன்று செயலிழந்து காணப்படுகின்றது. இதை அரசு கண்டும் காணாமல் கண்மூடித்தனமாக செயல்படுவது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அடிக்கும் மரண ஓலையாக காணப்படுவதாக உக்குவளை பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் எம்.பரூஸ் தெரிவித்தார்.

அத்தோடு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன மொட்டு கட்சியும் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆடும் அரசியல் கபட நாடகத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் சோரம் போகாது மிகவும் கவனமாக நடந்துகொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்

இன்றைய சமகால அரசியல் நிலைமைப்பற்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இன்று இந்நாட்டு அரசியல் ஒரு கேள்விக்குறியாக மாறிவிட்டது. நாட்டின் ஜனநாயக அரசியலும் ஒரு கேள்விக்குறியாகிவிட்டது. பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கிச் செல்லும்போது அத்தியாவசியப் பொருட்களின் விலை ஆகாயத்தை நோக்கி அதிகரித்துச் செல்கின்றது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்திடும் நுகர்வோர் அதிகாரசபை இன்று செயலிழந்து காணப்படுகின்றது. இதை அரசு கண்டும் காணாமல் கண்மூடித்தனமாக செயல்படுவது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு சாவு மணி அடிக்கும் செயலாக காணப்படுகின்றது. இதனால் இன்றைய ஆட்சியாளர்களின் ஆதரவு நாளுக்குநாள் சரிந்துகொண்டே செல்கின்றது.



சரிந்துபோகக்கூடிய ஆட்சியை சரிந்து போகாவண்ணம் காப்பாற்றிடவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் மறைமுகமாக செயற்படுகின்றார்கள். இதை இந்நாட்டு பெரும்பான்மை சமூகத்தினர் நன்றாகவே புரிந்துகொண்டுள்ளபோதும் இந்நாட்டு தமிழ் மொழி பேசக்கூடிய தமிழ், முஸ்லிம் மக்கள் நன்றாகவே புரிந்துகொள்ள வேண்டும் என்பதே எங்களின் வேண்டுகோளாகும்.

நாட்டில் சரிந்துபோகும் ஆட்சியை காப்பாற்றிட ஜனாதிபதி கோட்டாபய அணியும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அணியும் நல்லதோர் நாடகத்தை அரங்கேற்றி வருகின்றார்கள்.

நாடகத்தின் தலைப்பும் பெயரும் வெவ்வேறாக இருந்தாலும் நாடகத்தின் கணிப்பொருள் ஒன்றுதான். இந்த நாடகத்தின் மூலமாக இவ்விரு தலைமைகளும் நாட்டையும் நாட்டு மக்களையும் நன்றாகவே ஏமாற்றி வருகின்றார்கள்.

கடந்த 04ஆம் திகதி மாத்தளையில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டின்போது அதில் கலந்துகொண்ட மைத்திரிபால சிறிசேன நடைமுறையில் இருக்கும் ஆட்சியாளர்களுக்கு கடந்த தேர்தலின்போது கிடைக்கப்பெற்ற 69 இலட்சம் வாக்குகளில் 15 இலட்சத்திற்கு மேலான வாக்குகள் தங்கள் கட்சிக்கு சொந்தமானதென்றும் இந்த வாக்குகள் இல்லாவிட்டால் இன்று ஆட்சியில் இருப்பது யார் என்ற கேள்வியை எழுப்பினார்.

இதை தொடர்ந்து ஆளும் தரப்பிலிருந்து ஆட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் உடனடியாக அரசை விட்டு வெளியேற வேண்டுமெனக் கூறி வருகின்றார்கள். இதற்கு பதிலளிக்கும் மைத்திரிபால அணியினர் எங்களை வெளியேற்றவோ வெளியே செல்லும்படி கூறவோ ராஜபக்ஷாக்களின் சிரேஷ்ட தலைமைத்துவங்களுக்கே உரிமை உண்டு. ஆனால், ஆட்சியில் இருக்கும் சில்லறை அரசியல்வாதிகளுக்கு எந்தவித உரிமையும் கிடையாது என மைத்ரி அணியினர் அடித்துக் கூறுகின்றனர்.

அரசிலிருந்து வெளியேறுங்கள் என்று ஆட்சியாளர்கள் கூறுவதும் நாங்கள் வெளியேறமாட்டோம் என்று மைத்ரி அணியினர் கூறுவதும் நாட்டில் அடுத்த ஒரு தேர்தல் வரும் வரை இந்த நாடகம் அரகேற்றப்பட்டுக்கொண்டே இருக்கும். தேர்தல் முடிவுக்குப் பின்னர் நாடகத்தின் இரு பகுதியினரும் ஒருவருக்கு ஒருவர் கட்டித்தழுவி அடுத்துவரும் ஆட்சியிலும் இவர்களே பங்காளிகளாக செயற்படுவார்கள். எனவே, இவர்களை பற்றி இந்நாட்டின் தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும் - என்றார்.

LKNewspapers
Viber Community

தமிழன்
www.thamilan.lk

# வணிக உலகம்
## Business world

GROWTH

# 2022ஆம் ஆண்டுக்கான SLT-MOBITEL தனது புதிய தொனிப்பொருளாக 'No Dream Too Big' என்பதை அறிமுகம் செய்துள்ளது





புதுவருடத்தில் தேசிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, தனது புதிய தொனிப்பொருளான 'No Dream Too Big' ஐ அறிமுகம் செய்துள்ளது. புதுவருடத்தை குறிக்கும் வகையில், ஸ்ரீலங்கா ரெலிகொம் தலைமையகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள வரவேற்பு பகுதியில் இந்த அறிமுகம் வைபவ ரீதியாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் SLT-MOBITEL சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர். SLT குழுமத்தின் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ, SLT பணிப்பாளர் மொஹான் வீரகோன் பிசி, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLT பிரதம நிறைவேற்று அதிகாரி கித்தி பெரேரா, மொபிடெல் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரென, பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரியந்த பெர்னாண்டஸ், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

பாரம்பரிய முறைகளின் பிரகாரம், தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் பாடப்பட்டது. சமயத் தலைவர்கள் பிரசன்னமாகி புதுவருடத்தை முன்னிட்டு நிறுவனத்துக்கும் ஊழியர்களுக்கும் ஆசி வழங்கியிருந்தனர். இந்த நிகழ்வின் போது சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்களால் பிரதான புத்தாண்டு உரைகள் ஆற்றப்பட்டன.

SLT-MOBITEL இன் புதிய மற்றும் பிரத்தியேகமான தொனிப்பொருளான 'No Dream Too Big' என்பதன் அறிமுகத்தின் நோக்கம், மக்களுடன் தொடர்பை பேணி, அவர்களின் உள்ளங்களை வெல்வதாக அமைந்துள்ளது. SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ உரையாற்றும் போது, நிறுவனத்தின் மீது ஊழியர்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்புக்காக நன்றி தெரிவித்ததுடன், 2022ஆம் ஆண்டில் நிறுவனம் எய்துவதற்கு திட்டமிட்டுள்ள பிரதான செயற்றிட்டங்கள் பற்றியும் விளக்கமளித்திருந்தார்.

SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "எதிர்காலத்தை பற்றி கருதும்போது நான் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளேன். உங்களின் ஆதரவுடன் எம்மால் 2022ஆம் ஆண்டில் பெருமளவு சாதிக்க முடியும்.




SLT குழுமத்தை பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனமாக திகழச் செய்வதுடன், டிஜிட்டல் இலங்கையை சாத்தியப்படுத்துவதில் முக்கிய பங்களிப்பை வழங்கக்கூடியதாக இருக்கும். SLT-MOBITEL ஐச் சேர்ந்த நாம் தொழில்நுட்பத்தின் மையத்தில் காணப்படுவதுடன், வழிநடத்திச் செல்லும் செயலணியாக சிறந்த நிலையில் அமைந்துள்ளது. உங்கள் அனைவரின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்காகவும் எமது சிறந்த நிறுவனத்தின் மீது கொண்டுள்ள ஈடுபாட்டுக்காகவும் சகலருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், புது வருடத்திலும் உங்கள் அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கின்றேன்" என்றார்.

ஒரு வருடத்துக்கு முன்னதாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக நாம ஒன்றிணைப்பு இடம்பெற்ற முதல், இலங்கையை டிஜிட்டல் மயமாக்கத்துக்கு உட்படுத்துவதில் பெருமளவு பங்களிப்பு வழங்கியிருந்தது. ஒன்றிணைந்த வழிமுறையினூடாக, SLT-MOBITEL இனால் பல தரப்பட்ட தொலைத்தொடர்பாடல் அப்ளிகேஷன்கள் மற்றும் தீர்வுகளுடன், ஒன்றிணைந்த தொழில்நுட்பங்களை அணுகும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதனூடாக வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறையில் தாக்கம் செலுத்தும் தொலைத்தொடர்பாடல் அனுபவங்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு பிரத்தியேகமான டிஜிட்டல் அனுபவங்களை கட்டியெழுப்பும் வகையில், SLT-MOBITEL இனால் ஹோம் புரோட்பான்ட் சேவைகளை நிர்வகிப்பதற்கு Amazon Alexa திறன்களை நிர்வகிக்கும் வசதிகளை ஏற்படுத்தியிருந்த முதலாவது இலங்கை நிறுவனமாக அமைந்துள்ளது. மேலும், SLT-MOBITEL இனால் மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் one-stop customer support gateway, 'MySLT App' என்பது அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இதனூடாக விறுவிறுப்பான ஒப்பற்ற சுய-பராமரிப்பு அனுபவங்கள் வழங்கப்படுகின்றன.

2022ஆம் ஆண்டின் அறிமுகத்துடன், SLT MOBITEL தொழில்நுட்பத்தின் மையமாக திகழும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், வாழ்க்கையை மாற்றியமைக்கும் வழிகாட்டியாகவும் தன்னை நிலை நிறுத்தியுள்ளது. முன்னர் செயற்படுத்தப்பட்ட தந்திரோபாயத் திட்டங்கள் நிறுவனத்தின் பாரிய வெற்றிகரமான செயற்பாடுகளில் பெருமளவு பங்களிப்பு செலுத்தியுள்ளதுடன், வளர்ச்சி மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தி, வாடிக்கையாளர் பராமரிப்பு, விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் சாதனங்கள் போன்ற பல அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வளர்ச்சியை துரிதப்படுத்தி, SLT-MOBITEL இனால் 'telco to techno' எனும் நிலையை நோக்கி நகர்ந்த வண்ணமுள்ளது. 2022 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள முக்கியமான நடவடிக்கைகளில், SEA-ME-WE 6 எனும் புதிய கடலுக்கடியிலான கேபிளில் முதலீடு செய்வது, போர்ட் சிட்டி பைபர் ஒப்டிக் உட்கட்டமைப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது போன்றன அமைந்துள்ளன.

# IDEAL Finance தனது புதிய கிளையை கடவத்தையில் திறந்து வைத்துள்ளது

பரந்தளவிலான வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கவும் மற்றும் நிதிச் சேவைகள் அனைத்தையும் அனைவரும் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறைகளை அதிகரிக்கவும், இலங்கையின் புகழ்பெற்ற நிதி நிறுவனங்களில் ஒன்றான IDEAL Finance Limited (IFL), கடவத்தையில் புதிய கிளை ஒன்றை ஆரம்பிப்பதன் மூலமாக, தனது கிளை வலையமைப்பில் மற்றுமொரு கிளையை சமீபத்தில் சேர்த்துக் கொண்டுள்ளது. இக் கிளையானது, மேல் மாகாணத்தில் உயர் வளர்ச்சி கொண்ட பிராந்தியத்தின் வாடிக்கையாளர்களின் நலன் கருதி, IFL இன் சேவைகளை சௌகரியத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. IDEAL Finance இன் புதிய கடவத்தை கிளையானது, 2021 டிசம்பர் 10 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டதுடன், சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய உயர் அதிகாரிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் பங்களிப்புடன் ஒரு விசேட திறப்பு விழா வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

IDEAL Finance Limited இன் தலைமை நிர்வாக அதிகாரியாகிய துமிந்த வீரசேகர, புதிய கிளையை திறந்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "கடவத்தையில் கிளை ஒன்றை ஆரம்பிப்பது எமது பயணத்தின் ஓர் மைல்கல்லாக மாறியுள்ளதுடன், எமது பரந்த வலையமைப்பு விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது. 2022 மார்ச் இறுதிக்குள், எங்கள் அடைவு மட்டத்தை இரட்டிப்பாக்க திட்டமிட்டுள்ளதுடன், நாட்டின் பெரும்பாலான முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளோம். இப் பிராந்தியத்தில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு சிறந்த நிதித் தீர்வுகளை வழங்க இந்தப் புதிய கிளை எங்களுக்கு உதவுவதோடு, ஒன்றுபட்டு உழைப்பதன் மூலம், மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு மட்டுமன்றி, எமது நிறுவனத்தில் தங்கள் கனவுகளை நனவாக்குவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ள ஊழியர்களுக்கும் நாம் வாய்ப்புகளை உருவாக்கி வருகிறோம். தொடர்ச்சியாக 3 வருடங்கள் Great Place to Work என்ற அங்கீகாரத்துடன், இலங்கையில் அபிமானம் பெற்றுள்ள தொழில் தருநராக அங்கீகரிக்கப்பட்டதில் நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். எமது வலையமைப்பு விரிவாக்கத்துடன் வளர்ச்சி காணும்போது, எதிர்கால சவால்களைச் சமாளிக்க எமது அணியை ஒருங்கிணைக்கவும் நாம் திட்டமிட்டுள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

Mahindra and Mahindra Financial Services Limited நிறுவனம் IDEAL Finance Limited நிறுவனத்தில் முதலீடு செய்ததைத் தொடர்ந்து IFL இன் வலையமைப்பு விரிவாக்கம் மற்றும் சேவைகள், தீர்வுகள் பல்வகைப்படுத்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இது பல கட்ட வெளிநாட்டு நேரடி முதலீடு என்பதுடன், 2020 பெப்ரவரியில் தொடங்கியது. Mahindra ஆரம்பத்தில் IFL இல் 38.2வீத பங்குகளை கொள்முதல் செய்தது. முதலீட்டின் இறுதி தவணையானது, 2021/22 நிதியாண்டில் 58.2வீதமாக உயர்வடைந்ததன் விளைவாக இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மொத்தமாக ரூபா 2 பில்லியனுக்கும் அதிகமாகியுள்ளது. எனவே, இன்று, IDEAL Finance ஆனது, 11 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்துகளை நிர்வகித்து வருகின்ற உலகளாவிய நிதி நிறுவனத்தின் பக்கபலத்தைக் கொண்டுள்ளது.

அதன் வலையமைப்பு விரிவாக்கத் திட்டம், வளர்ச்சி மூலோபாயம் மற்றும் Mahindra உடனான கூட்டணி ஆகியவற்றின் வெற்றிக்கு சான்று பகரும் வகையில், உலகளாவிய தொற்றுநோயால் ஏற்படும் சவால்களை நேர்த்தியாக வழிநடத்தி, 2021 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டில், IDEAL Finance தனது சிறந்த வருடாந்த பெறுபேற்றுத்திறனை இந்த ஆண்டின் தொடக்கத்தில் அறிவித்தது. வரிக்கு முந்தைய இலாபம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 76வீதமாக அதிகரித்து ரூபா 288.4 மில்லியனாக பதிவாக்கப்பட்டது. அதே நேரத்தில் வரிக்குப் பிந்திய இலாபம் 74வீதமாக அதிகரித்து ரூபா 183.8 மில்லியனாக பதிவாக்கப்பட்டது. நிறுவனத்தின் தொழிற்படா கடன்கள் விகிதமும் 3.3வீதத்தால் மேம்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டில் 5.2வீதமாக இருந்த தொழில்துறையின் போக்கை விடவும் மேம்பட்டமை குறிப்பிடத்தக்கது. IDEAL Finance Limited நிறுவனத்தில் Mahindra நிறுவனத்தின் முதலீட்டைத் தொடர்ந்து, Fitch Ratings ஆனது IDEAL Finance நிறுவனத்தின் தர மதிப்பீட்டை BB (lka) இலிருந்து AA – (lka) க்கு நிலையான கண்ணோட்டத்துடன் மேம்படுத்தியுள்ளது.

IDEAL Finance Limited (IFL) என்பது இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட ஒரு வங்கி அல்லாத நிதி நிறுவனம் ஆகும். கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புறத்துறைகளில் தெளிவான கவனம் செலுத்தியவாறு 2012 மார்ச்சில் தனது நடவடிக்கைகளைத் தொடங்கியது. அதன் கடன் வழங்கல் சேவைகள் துறையில் தங்கக் கடன்கள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிக் கடன்கள், தனிநபர் கடன்கள், மோட்டார் கார்கள், முச்சக்கர வாகனங்கள், விவசாய வாகனங்கள் மற்றும் வணிக வாகனங்களுக்கான குத்தகை வசதிகள் அடங்கியுள்ளன. IFL ஒரு தரமான கடன் வழங்கல் துறையை உருவாக்கியுள்ள அதே நேரத்தில் இலாபத்தில் நிலைபேற்றியலுடனான வருடாந்த வளர்ச்சியைப் பதிவு செய்கிறது.








*IDEAL Finance நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளரான நிஷாந்த கன்னங்கர மற்றும் IDEAL Finance இன் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளுடன் இணைந்து கடவத்தையில் புதிதாக திறக்கப்பட்ட IDEAL Finance பணியாளர்களுடன் காணப்படுகின்றார்.*






LK Newspapers Viber Community

# ஜனாதிபதியின் அக்கிராசன உரை

நாங்கள் சர்வதேச சட்டத்திட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பவற்றை மதிக்கும் ஓர் நாடாக விளங்குகின்றோம். கடந்த காலங்களில் எமது நாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் எடுத்துச் செல்லப்பட்ட தவறான கருத்துகளை சீர்செய்யும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது. எனது ஆட்சிக் காலத்தில் எந்தவொரு விதத்திலும் மனித உரிமை மீறல்களுக்கு எமது அரசு உடந்தையாக இருக்கவில்லை. அதேபோன்று எதிர்காலத்திலும் அவ்வாறான நிலைமைகள் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் அங்கீகரிப்பதும் இல்லை.

கடந்த 30 ஆண்டுகளில் நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களும் பயங்கரவாதம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. 2009ஆம் ஆண்டு பயங்கரவாதம் தோற்கடிக்கப் பட்டு, நாட்டில் மீண்டும் சமாதானம் நிலைநாட் டப்பட்டுள்ளது. இருள் சூழ்ந்த கடந்த கால ஞாபகங்களை ஒருபுறம் வைத்து அனைத்து சமூகங்களும் சமாதானத்துடனும் சகவாழ்வுடனும் வாழக்கூடிய பாதுகாப்பான நாடொன்றை உருவாக்குவது எமது நோக்கமாகும். இதற்காக அனைவரும் இன, மத, அரசியல் வேறுபாடு களின்றி ஒன்றிணைதல் வேண்டும்.

யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையை வழமை நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் பாரிய முதலீடுகளைச் செய்துள்ளோம்.

யுத்தம் நிலவிய காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரின் பயன்பாட்டுக்காக கையேற்கப்பட்டிருந்த காணிகளில் 90வீதமானவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை நான் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது ஆரம்பித்திருந்தேன். அந்த பிரதேசங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி அமைதியான சூழலொன்றை ஏற்படுத்த எம்மால் முடிந்துள்ளதனால் எதிர்வரும் நாட்களில் மீதியாகவுள்ள காணிகளையும் விடுவிக்க எங்களுக்கு இயலும்.

யுத்தத்தினால் காணாமற் போனவர்கள் தொடர் பான பிரச்சினை ஒரு தரப்பினருக்கு மாத்திரம் பொதுவானதல்ல. அனைவருக்கும் எம்மால் முடிந்தளவில் நீதி, நியாயம் வழங்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

நாங்கள் இனவாதத்தை நிராகரிக்கின்றோம். நாட்டில் வாழும் அனைத்து பிரஜைகளும் கௌர வத்துடன் வாழ்வதற்கும் அவர்களது அனைத்து உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதனால் குறுகிய அரசியல் நோக்கங்கள் அடிப்படையில் மக்களை ஒருவர் மீது ஒருவரை ஏவி விடுவதை தற்போதாவது நிறுத்துமாறு, அவ்வாறான அரசியல்வாதிகளிடம் வேண்டுகோள் விடுக்கின் றோம்.

நீண்டகாலமாக தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருந்த எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர் சிலருக்கு மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய நான் கடந்த நாட்களில் நடவடிக்கை எடுத்திருந்தேன். அதேபோன்று 1978ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையிலிருக்கும் பயங்கரவாதத்தைத் தடுக்கும் வகையில் அதற்கான திருத்தங்களை கொண்டு வர நாங்கள் தயாராகவிருக்கின்றோம்.

நாட்டின் இறைமை, தேசிய பாதுகாப்பு என்ப வற்றுக்கு முன்னுரிமை வழங்கும் அதேவேளை, சர்வதேச சமூகத்தினரால் முன்வைக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பாக நியாயமான பிரதிபலிப்புகளை முன்வைப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

நாங்கள் சுதந்திரமான தன்னாதிக்கமுள்ள ஓர் நாடாகும். வல்லரசுகளுக்கிடையிலான மோதல்களில் சிக்குவதற்கு எமக்கு எத்தகைய தேவையும் கிடையாது. நாங்கள் எமது அயல வர்களை கௌரவிப்பதுடன், அனைத்து நாடுகளுடனும் நட்புறவைப் பேணுவது எமது கொள்கையாகும்.

யுத்தத்தினால் நீண்ட காலம் பாதிக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மக்களுக்கு பொருளாதார பாதுகாப்பே முக்கிய தேவையாகவுள்ளது. சிறுவர்களுக்கு சிறந்த கல்வி, இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகள், சுய தொழில்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்புகள், மக்களுக்கு சுத்தமான குடிநீர், விவசாய நடவடிக்கைகளுக்கான நீர்ப்பாசன வசதிகள், வாழ்வதற்குத் தேவையான வீடுகள், வைத்தியசாலைகள், நெடுஞ்சாலைகள் உட்பட மேலும் பல அடிப்படை வசதிகள் அவர்க ளுக்குத் தேவையாகவிருந்தது. அனைத்து சமூகத்தினருக்கும் எத்தகைய பராபட்சமுமின்றி தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கு வது நல்லிணக்கத்துக்கு அடிப்படையாக அமையும் என்பது அரசின் கொள்கையாகும்.

இதனால் இந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள மக்களின் பிரதிநிதிகளிடம் நான் ஓர் வேண்டுகோளை விடுக்கின்றேன். பல்வேறுபட்ட அரசியல் கருத்து வேறுபாடுகளை தற்காலிகமாக ஒருபுறம் வைத்து உங்கள் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு எடுக்கும் நடவடிக் கைகளுக்கு நீங்கள் உங்களது ஆதரவினை வழங்க வேண்டும்.

ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்காக சட்டத்தின் ஆதிக்கமும் வெளிப்படைத்தன்மை யும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது எனது கடும் நம்பிக்கையாகும். சட்டத்தின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக நீதிமன்றங்கள் சுயாதீனமாக இயங்குவதை நாங்கள் பலப்படுத்தல் வேண்டும். நான் ஜனாதிபதியானதன் பின்னர் நீதித்துறையிலும், சட்டமா அதிபர் திணைக்களத்திலும் இடம்பெறும் நியமனங்கள் தொடர்பாக எத்தகைய அரசியல் தலையீடுகளையும் மேற்கொள்ளவில்லை. நீதிமன்றத்துறையில் அனைத்து உத்தியோகத்தர்களும் திறமை மற்றும் சேவைமுதிர்வு அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, இது தொடர்பாக எனது அரசு தனது அர்ப்பணிப்பை நடைமுறைப்படுத்தியுள்ளதை இந்தச் சந்தர்ப் பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அனைவருக்கும் நீதி, நியாயம் வழங்கக் கூடிய மக்களுக்கு சுமையில்லாத ஒரு செயற்றிறன்மிக்க நீதித்துறை ஒன்று நாட்டுக்கு தேவைப்படுகின்றது. எனினும், தற்போது நீதித்துறையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அரசியல் யாப்பில் இரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக பல மனுக்கள் கூட சில சந்தர்ப்பங்களில் பத்து வருடங்களுக்குள்ளாவது விசாரித்து நிறைவு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் உள்ளன. சிறுவர்கள் மீது குற்றம் இழைப்பவர்களுக்கு தண்டனை வழங்க பல வருடங்கள் எடுக்கின்றன. காணிகள் தொடர்பான வழக்கு விசாரணைகள் பெரும்பாலும் ஒரு பரம்பரையை தாண்டிச் செல்லும் நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறான பின்னணியில் சட்டம் மற்றும் அதன் நடைமுறை தொடர்பாக மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம் ஏற்பட்டிருப்பது ஓர் ஆச்சரியமான விடயமல்ல.

சட்டத்தின் தாமதம் காரணமாக பல இன்னல்களை அனுபவிக்கும் மக்களுக்கு தீர்வுகளை வழங்குவதோடு, முதலீட்டு கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைப்பதற்குத் தேவையான சட்டரீதியான மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையை பல அரசுகள் உணர்ந்திருந்தபோதிலும், அவை தொடர்பான சட்ட மறுசீரமைப்புகளை மேற்கொள்ள முன்னர் ஆட்சியில் இருந்த பல அரசாங்கங்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

எனினும், எனது அரசு ஆட்சிபீடமேறியதன் பின்னர் சட்டத்துறையில் காணப்படும் தாமதங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து மிகவும் நம்பிக்கையான முறையில், செயற்றிறன் மிக்க வகையில் நீதி, நியாயம் வழங்கும் செயற்பாட்டு முறையொன்றை ஸ்தாபிப்பதற்கும் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், நீதிமன்றங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கும் காலம் கடந்த சட்டதிட்டங்களை இற்றைப்படுத்துவதற்கும் டிஜிட்டல் மயமாக்கும் நிறுவனங்களுக்கிடையிலான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் ஐந்தாண்டு திட்டத்தினூடாக பல விசேட மாற்றங்களைச் செய்துள்ளோம்.



பல வருடங்களாக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆரம்பிக்க முடியாதிருந்த அனைத்து சட்டத்துறை பிரிவுகளையும் ஓரே கூரையின் கீழ் கொண்டு வரும் "அதிகரன பியச" வேலைத்திட்டத்தையும், நீதித்துறை கட்டமைப்பினை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான திட்டங்களையும் நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். 2022ஆம் ஆண்டுக்குள் ஒட்டுமொத்தமான நீதித்துறை கட்டமைப்பினை உள்வாங்கும் வகையில் இந்த டிஜிட்டல் மயப்படுத்தும் வேலைத்திட்டத்தை விஸ்தரிக்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

42வருடங்களுக்குப் பின்னர் உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். ஏனைய நீதிமன்றங்களிலும் பணியாற்றும் நீதிபதிகளின் எண்ணிக்கையையும் அதிகரித்து, அந்த நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் அதிகரித்துள்ளோம்.

சட்டத்துறையில் காணப்படும் தாமதங்களுக்குத் தீர்வாக புதிதாக சிறு உரிமைகளுக்கான நீதிமன்றங்கள் மற்றும் முதலீட்டு நீதிமன்றங் களைத் ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு பணச்செலவுகளை மேற்கொண்டு நீதிமன்றங்களை நாடிச்செல்வது இலகுவான காரியமல்ல. இதனால் சிறு வழக்குகளைத் தீர்ப்பதற்கு நாங்கள் மாற்று வழிகளை அறிமுகப் படுத்தியுள்ளோம். அதன்படி காணிகள் மற்றும் நிதி தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு விசேட இணக்கச்சபைகளை ஸ்தாபிப்பதற்கான சட்டங்களை உருவாக்கியுள்ளோம். 2022 ஆம் ஆண்டில் விசேட இணக்கச்சபைகளை நிறுவவுள்ளோம். அதேபோன்று கொழும்புக்கு வரையறுக்கப்பட்டிருந்த கடன் நிவாரண சபைகளை முறையாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதற்கும் அதற்கு முன்னோடியாக காலி, கம்பஹா, குருநாகல் ஆகிய பிரதேசங்களில் அவற்றை ஆரம்பிப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்.

இதற்கு மேலதிகமாக சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம், அரச இரசாயன பகுப்பாளர் திணைக்களம் ஆகிய நிறுவனங்களில் ஆளணியினரின் எண்ணிக்கையை அதிகரித்து நீதித்துறையை மிகவும் செயற்றிறனுடன் இயங்க வைக்கக் கூடிய வகையில் அவற்றின் ஆற்றலை விருத்தி செய்வதற்கான நிதி ஒதுக்கங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

குற்றவியல் கட்டளைச் சட்டம், சிவில் வழக்குகள் தொடர்பான கட்டளைச் சட்டம், வர்த்தக கட்டளைச் சட்டம் ஆகிய துறைகளில் மிகவும் பரந்தளவிலான மறுசீரமைப்புகளை மேற்கொள்வதன் ஊடாக இதுவரை 98இற்கும் அதிகமான சட்டதிட்டங்களில் தேவையான திருத்தங்களைச் செய்துள்ளோம்.

எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்குள் இலங் கையை சர்வதேச அங்கீகாரம் உள்ள பெரிதும் கவனத்தை ஈர்க்கக்கூடிய கேந்திரநிலையமாக மாற்ற தேவையான சட்ட பின்புலத்தை நாங்கள் உருவாக்கி வருகின்றோம்.

1994ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் புதிய அரசியல் யாப்பொன்றை அறிமுகப்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்தாலும் அவை எதுவும் வெற்றியளிக்கவில்லை. எனவே, இந்த விடயம் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து விரிவான முறையில் மக்களின் கருத்தைப் பெற்று மக்கள் சார்பான அரசியல் யாப்பொன்றை உருவாக்குவதற்கான அரசியல் யாப்பைத் தயாரிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதியுடன் அரசியல் யாப்பு உருவாக்கத்திற்கான ஆலோசனை குழுவொன்றை நியமித்துள்ளேன்.

இந்தக் குழுவின் முன்மொழிவுகள் அமைச் சரவையில் விரிவாக கலந்துரையாடப்படுவதற்கும் நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்கும் நான் எதிர்பார்க்கின்றேன்.

துரிதமான மற்றும் நிலைபேறான அபிவிருத் திக்கு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் அவசியத்தை நாங்கள் நன்கு அறிந் துள்ளோம். அதனால் உலகளாவிய ரீதியிலான தொற்றுநோய் பின்னணியிலும், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளையும் நாங்கள் தொடர்ந்து செய்து வருகின்றோம். ஒரு மில்லியன் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டம், நகர அபிவிருத்தித் திட்டம், கிராமப்புற வீடுகள் மற்றும் நகர்ப்புற தொடர்மாடி வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம், 5ஆயிரம் பாலங்களை அமைக்கும் திட்டம், 14ஆயிரம் குளங்களை அபிவிருத்திச் செய்யும் திட்டம், நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றை முன்னெடுத்து வருவதுடன், நாட்டிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் மற்றும் குடிநீரினை வழங்கும் திட்டம், துரித இன்டர்நெட் வசதிகளை நாடு முழுவதிலும் விஸ்தரித்தல், வெள்ளப் பெருக்கினை கட்டுப்படுத்தல் மற்றும் கிராமங்கள் உட்பட கைத்தொழில் நகரங்களை உருவாக்கும் திட்டம் என்பவற்றை நாங்கள் எதிர்பார்த்தவாறு தொடர்ந்தும் நடைமுறைபடுத்தி வருகின்றோம். இந்தப் பணிகள் கட்டம் கட்டமாக பூர்த்தியடையும்போது, மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருவதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியும்.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் உடன்பட்ட விதத்தில் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை நிர்மாணித்தலை நாங்கள் கடந்த வாரம் ஆரம்பித்தோம். மேற்கு முனையத்தின் நிர்மாணப் பணிகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும். 2024 மற்றும் 2025ஆம் வருடங்களில் இக்கருத்திட்டம் முடிவடையும்போது, கொழும்புத் துறைமுகத்தின் கொள்ளளவு இருமடங்காகி உலகத்தில் அதிவேலை மிகுந்த துறைமுகங்கள் 15இற்குள் எங்களால் இணைய முடியும்.

தற்போது நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறது. சுற்றுலாப் பயணிகள் மீண்டும் வருகிறார்கள். ஏற்றுமதித் துறையில் தெளிவான வளர்ச்சி காணப்படுகின்றது. ஆனால், மேலும் பல சவால்களை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவற்றைக் வெற்றிகொள்வதற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வை வழங்குவது அவசியமாகவுள்ளது.

இவ்வாறான குறுகிய கால தீர்வாகத்தான் இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் கிராமிய வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், நாடு முழுவதும் உள்ள ஏராளமான சுயதொழில் செய்பவர்களுக்கு உதவ அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

இன்று மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளை நாம் நன்கு புரிந்து கொண்டுள்ளோம். எனவே, 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே மக்களுக்காக 229 பில்லியன் ரூபா நிவாரணப் பொதியை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பெரும் பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து செயற்படுவதால் இந்த நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன.



கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாயிகளுக்கு எங்கள் அரசு இலவசமாக உரம் வழங்கி வருகிறது.

நெல்லுக்கு 50 ரூபா உத்தரவாதவிலை நிர்ணயம் செய்தோம். அரசு 50ரூபா கொடுத்தபோது, தனியார் துறையினர் விவசாயிகளுக்கு மேலும் அதிகமான விலையை கொடுத்தனர். சில சந்தர்ப்பங்களில் அரசாங்கம் எடுத்த அந்த முடிவால்தான் ஒரு கிலோ 60 முதல் 70 ரூபாவுக்கு விற்க முடிந்தது. இதனை இன்று விவசாய சமூகத்தில் ஒரு பிரிவினர் மறந்திருப்பது வருத்தத்துக்குரிய விடயமாகும்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின் பாசிப் பயறு, கௌபீ, மஞ்சள், இஞ்சி போன்ற 16 பயிர் வகைகளை இறக்குமதி செய்வதை நிறுத்தினேன். இன்று விவசாய சமூகம் அதன் பலனை அனுபவித்து வருகிறது. விவசாய உற்பத்தி பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கின்றது. அதேபோன்று, தேயிலை, தேங்காய், இறப்பர் போன்றவற்றுக்கு சமீப காலத்தில் சிறந்த விலை கிடைத்தது. இதற்கு நாம் மேற்கொண்ட கொள்கை ரீதியான தீர்மானங்களே காரணம். இன்று மஞ்சள் விளைச்சலில் தன்னிறைவு பெற்றுள்ளோம். மீள் ஏற்றுமதி நிறுத்தப்பட்டுள்ளதால் மிளகு, கறுவா, பாக்கு போன்ற பயிர்களின் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. அதேபோன்று வெற்றிலைக்கு இன்று நல்ல விலை கிடைக்கிறது.

கடந்த காலத்தில் இந்த நாட்டிற்கு எத்தனோல் இறக்குமதி செய்வது தொடர்பாக பெரும் எதிர்ப்பு நிலவியது. நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் எத்தனோல் இறக்குமதியை முற்றிலும் தடை செய்தோம். அதன் காரணமாக இன்று சீனி உற்பத்தி ஆலைகள் இலாபம் ஈட்டி வருகின்றன. அதேபோன்று கரும்பு விவசாயிகளுக்கும் நல்ல வருமானம் கிடைக்கின்றது.

இன்று பால் பண்ணையாளர்களுக்கும் நல்ல சந்தை உருவாக்கப்பட்டுள்ளது. உள்ளூர் பால் உற்பத்தி நிறுவனங்களின் இலாபம் அதிகரித் துள்ளது.

நச்சுத்தன்மையற்ற பசுமை விவசாயத்திற்காக நாங்கள் எடுத்த கொள்கையை செயற்படுத்தும் போது, சில சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. எமது நோக்கம் மற்றும் திட்டம் தொடர்பாக சரியாக அறிவூட்டப்படா மையினாலும், திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் ஏற்பட்ட சில நடைமுறை சிக்கல்கள் அரசியல்மய மாக்கப்பட்டதாலும் இது தொடர்பாக தவறான புரிதல் ஏற்பட்டது. பசுமை விவசாயம் தொடர்பான பரந்த கருத்து பரப்பெல்லை சில நேரங்களில் சேதனப் பசளை என பொறுப்பானவர்களால் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டமை தவறான கருத்துகள் மக்கள் மயமாகுவதற்கு வழிவகுத்தது. அதற்கேற்ப சில முடிவுகள் பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியதால் அவற்றில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது.

ஆனால், பசுமை விவசாயம் தொடர்பான நமது அரசின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை. எனவே, குறைபாடுகளை நிவர்த்தி செய்து இக்கொள்கைகளை மிகவும் பயனுள்ள வகையில் முன்னோக்கி கொண்டு செல்ல நாம் எதிர்பார்க்கின்றோம். விவசாயத்தில் அதிக உற்பத்தித்திறனை அடைய நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதும், உயிரின பசளை பயன்பாட்டை ஊக்குவிப்பது மற்றும் நச்சுத்தன்மையற்ற விவசாய உற்பத்திக ளுக்கான சர்வதேச சந்தையை உருவாக்குவது எங்கள் இறுதி இலக்காகும். அதனூடாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மற்றும் அதனை சார்ந்த சேவைகளை வழங்கும் மக்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். இதன் மூலம் இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு வலுவான பங்களிப்பை பெற்றுக்கொள்ள நாம் எதிர்பார்க்கின்றோம்.

2022 என்பது உணவுப் பாதுகாப்பு தொடர்பாக பல முடிவுகளை எடுக்க வேண்டிய ஆண்டாகும். இதில், உள்ளூர் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கான துரிதமான செயல்திட்டமொன் றின் தேவை முக்கியமாக மேலெழுகின்றது. நாட்டில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய ஒவ்வொரு சேற்று மற்றும் மேட்டு நிலத்தையும் பயன்படுத்திக்கொண்டு நாம் அனைவரும் ஒன்றிணைந்து விவசாய புரட்சியொன்றை ஆரம் பிக்க வேண்டியுள்ளது. அதற்காக பல நீர்ப்பாசன வசதிகள் அபிவிருத்தி மற்றும் குளங்களை புனரமைக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளமை எமக்கு வலுவூட்டலாக அமைகின்றது. கடந்த காலங்களில் சுவர்களில் ஓவியம் வரைந்துகொண்டு, பாழடைந்த வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொண்டு, முன்வந்து நாட்டை நேசிக்கும் குறிப்பாக, இளைஞர் சமுதாயமும் இதற்கு ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

எமது 'வாரி சௌபாக்யா திட்ட'த்தின் கீழ் மக்களுக்கு வசதியளிக்கக் கூடிய பல பாரிய அளவிலான திட்டங்கள் தற்போது செயல்படுத் தப்பட்டு வருகின்றன.

120 மெகா வோட் புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியை தேசிய மின்சார வலையமைப்புக்கு வழங்கும் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் மற்றும் அதற்கு இணையாக அலிகொட்ட ஆர, ஹந்தபானகல மற்றும் குடா ஓய சேமிப்பு நீர்த்தேக்கங்கள் மற்றும் அதனால் போஷிக் கப்படும் 300 குளங்களை அபிவிருத்தி செய்தல்.

மொனராகலை மாவட்டத்தின் வறண்ட பிரதேசங்களுக்கு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் வழங்கும் கும்பக்கன் ஓயா நீர்த்தேக்கத் திட்டம்.

மன்னார் மாவட்டத்துக்கு நீர்ப்பாசனம் மற் றும் குடிநீர் வழங்கும் பஹல மல்வத்து ஓயா நீர்த்தேக்கத் திட்டம்.

வடமேல் மாகாணத்துக்கு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் வழங்கும் வயம்ப மகாஎல கால்வாய் திட்டம்.

வடமத்திய மாகாணத்துக்கு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் வழங்குவதற்கான வடமத்திய பிரதான கால்வாய்த் திட்டம்.

கம்பஹா மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கான பஸ்னாகொட நீர்த்தேக்கத் திட்டம்.

ஊவா மாகாணத்துக்கு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீரை வழங்கும் தல்பிட்டிகல நீர்த்தேக்கத் திட்டம்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மற்றும் மஹாஓயா பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் மற்றும் குடிநீரை வழங்கும் முந்தேணி ஆறு திட்டம்.

யாழ். குடாநாட்டில் நிலவும் நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் பிரச்சினைக்கு நிலையான தீர்வாக "யாழ்ப்பாணத்துக்கு ஓர் நதி" திட்டத்தின் கீழ் புதிய நன்னீர் தடாகங்களை அபிவிருத்தி செய்தல்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் நீர்ப் பற்றாக்குறைக்குத் தீர்வுகளை வழங்கும் அதே நேரம் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும் உதவும் நில்வலா நதி அபிவிருத்தித் திட்டம்.

மினிபே மஹா எல புனரமைப்புத் திட்டம், மாதுரு ஓயா தென்கரை அபிவிருத்தித் திட்டம் மற்றும் மகாவலி ஆற்றுப்படுக்கை அபிவிருத்தித் திட்டம்.

நாடு முழுவதும் சிறிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் 5ஆயிரம் மற்றும் 52 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களின் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

விவசாய சமூகத்தின் உண்மையான தேவை களை கண்டறிந்த, விவசாயத்தை மதிக்கும் அரசாங்கம் என்ற வகையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள 20 பாரிய நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்களை எனது பதவிக்காலத் தில் நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளேன்.

பொருளாதார முகாமைத்துவத்தில் இன்று நாம் எதிர்கொள்ளும் மிகக் கடுமையான சவால் தற்போதைய அந்நியச் செலாவணி பிரச்சினையாகும். காலாகாலமாக பல அரசாங் கங்கள் நிரந்தரத் தீர்வை வழங்கத் தவறிய பிரச்சினையின் உச்சத்தில் இன்று நாம் இருக்கி றோம். 2019ஆம் ஆண்டு நான் நாட்டைப் பொறுப்பேற்றபோது, நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 7.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே. அதன் ஒரு பகுதி குறுகிய கால கடன்களாகும்.

அதற்குள், அடுத்த இரண்டு ஆண்டுகளில், ஆண்டுக்கு 6 பில்லியன் டொலருக்கும் அதிக மான வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருந்தது. அதுவரை இருந்த சகல அரசாங்கங்களும் அவ்வப்போது வாங்கிய கடன்களையே அவ்வாறு திருப்பிச் செலுத்த வேண்டியிருந்தது.

இந்தச் சூழ்நிலையில், நமது செலவினங்களைக் கட்டுப்படுத்தத் தவறினால், எதிர்காலத்தில் அந்நியச் செலாவணி பிரச்சினை ஏற்படும் என்பதை நாம் ஏற்கனவே புரிந்துகொண்டி ருந்தோம். அதனால்தான் வாகனங்களின் இறக்கும தியை தற்காலிகமாக இடைநிறுத்துவது, பல்வேறு அத்தியாவசியமற்ற இறக்குமதிப் பொருட்களின் இறக்குமதியை கட்டுப்படுத்துவது போன்ற மக்கள் விரும்பாத முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. இதன் மூலம் கடந்த இரண்டு வருடங்களாக மொத்த இறக்குமதி செலவினத்தை கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக, நாட்டின் சராசரி ஆண்டுக்கான வர்த்தகப் பற்றாக்குறை சுமார் 8 பில்லியன் டொலர்கள் ஆகும். இந்த பற்றாக்குறை சுற்றுலாத்துறையின் வருவாய் மற்றும் வெளி நாட்டு ஊழியர்களிடமிருந்து வரும் பணம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் என்பவற்றின் மூலம் ஈட்டப்பட்ட அந்நிய செலாவணி மூலமே ஈடுசெய் யப்பட்டது.

(09 ஆம் பக்கம் பார்க்க)

LK Newspapers Viber Community

# ஜனாதிபதியின் அக்கிராசன உரை

இவற்றில், சுற்றுலாத்துறையின் மீது எமக்கு அதிக நம்பிக்கை இருந்தது. சில ஆண்டுகளுக்குள் சுற்றுலாத்துறையின் வருவாயை 10 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க திட்டமிட்டிருந்தோம்.

ஆனால், டிசம்பர் 2019இல் ஆரம்பித்த கொவிட் -19 உலகளாவிய தொற்றுநோய் காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தது. இதனால், சுற்றுலா மூலம் 2020 மற்றும் 2021இல் நாட்டுக்கு ஆண்டுக்கு சுமார் 4.5 பில்லியன் டொலர் வருவாயை நாம் இழக்க நேரிட்டது.

உலகளாவிய ரீதியிலான கொவிட் தொற்று நோய் காரணமாக சுமார் 2இலட்சம் வெளிநாட்டு ஊழியர்கள் அவர்களின் வேலையை விட்டு நாடு திரும்பியதன் காரணமாக ஒவ்வொரு மாதமும் அவர்கள் இலங்கைக்கு அனுப்பும் பெருந்தொகையை நாங்கள் இழந்தோம்.

தொடர்ந்து நாடு முடக்கப்பட்டமையினால், புதிய வெளிநாட்டு முதலீடுகளை எம்மால் ஈர்க்க முடியவில்லை.

எம்மையும் மீறி நடந்த இந்த தவிர்க்க முடியாத செயல்பாட்டினால் தான் நமது கையிருப்பு மிகக் குறைந்த அளவிற்கு வீழ்ச்சியடைந்து பொருட்களை இறக்குமதி செய்வது மிகவும் கடினமாகியது.

கையிருப்பை அதிகரிக்காமல் நமது இறக்குமதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது.

நீண்டகால அடிப்படையில் இந்தப் பிரச்சினையில் இருந்து விடுபட, புத்தாக்கம், ஏற்றுமதி பல்வகைப்படுத்தல், மதிப்பு சேர்த்தல் போன்ற முறைகள் மூலம் நமது ஏற்றுமதித்துறையில் பெரும் முன்னேற்றத்தை கட்டாயமாக நாம் ஏற்படுத்த வேண்டும். அதேபோன்று, வெளிநாட்டு செலாவணியை ஈர்க்கும் சுற்றுலாத்துறை, வெளிநாடுகளுக்கு பயிற்சிபெற்ற தொழிலாளர்களை அனுப்புதல், கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பெரும் முன்னேற்றம் காண வேண்டும். இவை அனைத்தும் எமது கொள்கைப் பிரகடனத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தற்போது அவற்றை செயல்படுத்துவதை விரைவுபடுத்த வேண்டும்.

சிறிய நாடான நம் நாட்டில் அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய இயற்கை வளங்கள் மிகக் குறைவாகும். எம்மிடம் எண்ணெய், எரிவாயு, நிலக்கரி போன்ற வளங்கள் இல்லை. இன்று உலகில் இயற்கை வளங்கள் இல்லாத முன்னேற்றமடைந்த நாடுகள் அனைத்தும் அந்நிய நாட்டு முதலீடுகளையே தீர்வாகத் தேர்ந்தெடுத்துள்ளன. ஏற்றுமதி தொழில்களை மேம்படுத்தவும், புதிய வேலைகளை உருவாக்கவும் மற்றும் உள்நாட்டு தொழில்களை ஆதரிக்கவும் அவர்கள் வெளிநாட்டு முதலீடுகளை பயன்படுத்தினர்.

தவறான விளக்கங்கள் மூலம் வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிராக மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை ஏற்படுத்த, முற்றிலும் அரசியல் நோக்கத்துக்காக யாராவது செயல்பட்டால் அவர்கள் நாட்டுக்கு செய்வது நன்மையல்ல.

இந்த நேரத்தில் நமது நாட்டின் அபிவிருத்திக்கான முதலீட்டின் தேவை தீவிரமாக உள்ளது. எனவே, கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் புதிய முதலீட்டை ஈர்க்க எதிர்காலத்தில் அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவை உள்நாட்டு முதலீடுகளா அல்லது வெளிநாட்டு முதலீடுகளா என்பது முக்கியமல்ல, அவை நாட்டின் நலனுக்கானதா என்பது மாத்திரமே முக்கியம்.

வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தீர்வு, வேலைவாய்ப்பை உருவாக்குவதில் உள்ளது. தற்போது நாட்டின் பெரும்பாலான வேலைவாய்ப்பு தேவைகள் சிறு மற்றும் நடுத்தர அளவிலான உள்ளூர் தொழில்துறைகள் மூலமே பூர்த்தி செய்யப்படுகின்றன. எனவே, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள உள்ளூர் தொழில்முனைவோரின் பாதுகாப்பு மற்றும் வலுவூட்டுதலுக்கு நாம் எப்போதும் முன்னுரிமை வழங்க வேண்டும். அதனால், வர்த்தக சமூகத்தின் தேவைகளை நாங்கள் புரிந்துகொண்டு அவர்களை ஊக்குவிக்க எங்களால் முடிந்த சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

எமது வருடாந்த இறக்குமதி செலவினத்தில் 20வீதம் எண்ணெய் இறக்குமதிக்காக ஒதுக்கப்படுகிறது. மொத்த ஏற்றுமதி வருமானம் ஒரு மாதத்திற்கு ஆயிரம் மில்லியன் டொலர்களுக்கும் குறைவாக இருக்கும்போது, எண்ணெய்க்காக மாத்திரம் ஒரு மாதத்துக்கு சுமார் 350 மில்லியன் செலவழிக்க வேண்டியுள்ளது. இறக்குமதி செய்யப்படும் எரிபொருளில் 70வீதம் வாகனங்களுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. மின்சார உற்பத்திக்கு சுமார் 21வீதம் பயன்படுத்தப் படுகின்றது. தொழில்துறைக்கு 4வீதம் மாத்திரமே



பயன்படுத்தப்படுகிறது.

எதிர்காலத்தில், வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கும்போது மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்க எதிர்பார்க்கின்றோம். அதன்படி, வாகனங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் இயன்றளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை பயன்படுத்த திட்டமிட வேண்டும்.

இலங்கையில் தொழில்துறைகள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை அதிக எரிசக்தி செலவாகும். அவை அனைத்தும் இறக்குமதி செய்யப்பட வேண்டும். ஆனால், எமக்கு ஆறுகள், அருவிகள் உள்ளன. நாட்டை சுற்றிலும் கடல் உள்ளது, ஏராளமான காற்று மற்றும் ஆண்டு முழுவதும் சூரிய ஒளி உள்ளது. இதனால்தான் எமது சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தின் கீழ் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. 2030ஆம் ஆண்டுக்குள் நாட்டின் 70வீத எரிசக்தி தேவையை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆதாரங்கள் மூலம் உற்பத்தி செய்யும் இலக்கை நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளோம்.

எதிர்கால மின் தேவையை பூர்த்தி செய்ய ஏற்கனவே பல திட்டங்களை வகுத்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் மாத்திரம், காற்றாலை மற்றும் சூரிய சக்தியைப் பயன்படுத்தி உள்ளூர் மின்சார வலையமைப்புக்கு கவனத்திற் கொள்ளக்கூடிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கொள்ளளவை சேர்க்க முடிந்தது.

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தம்பபன்னி காற்றாலை மின்நிலையத்தின் திறன் தற்போது சுமார் 100 மெகா வோட் அளவில் வெற்றிகரமாக இயங்கி வருகிறது. இந்த ஆண்டு மேலும் 50 மெகா வோட்டால் அது அதிகரிக்கப்படும். இதற்கு மேலதிகமாக, "கிராமத்துக்கு ஒரு வலுசக்தி நிலையம்" திட்டத்தின் கீழ் உள்ளூர் முதலீட்டாளர்கள் மூலம் கிராம அளவில் 100 கிலோ வோட் திறன் கொண்ட 7ஆயிரம் சிறிய சூரிய மின் நிலையங்களை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு இதில், 560 மெகா வோட், அடுத்த இரண்டு ஆண்டுகளில் மின்சார வலையமைப்பில் சேர்க்கப்படும். அதேபோன்று கடந்த ஆண்டு இந்திய குடியரசுடன் கைச்சாத்திடப்பட்ட 2ஆயிரம் கோடி ரூபா கடன் வசதி மூலம் அரசு அலுவலகங்களின் மேற்கூரையில் சோலார் பேனல்கள் (Rooftop Solar Panels) பொருத்தும் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

120 மெகா வோட் உமா ஓயா மற்றும் 35 மெகா வோட் பிராட்லேண்ட்ஸ் நீர் மின் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளன. மொரகொல்ல நீர் மின் நிலைய கட்டுமானப் பணிகளை 2023ஆம் ஆண்டு பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

2050க்குள் கார்பன் பூஜ்ஜிய இலக்கை அடைவது எமது இலக்காகும். உலகளாவிய நிலக்கரி அல்லாத எரிசக்தி ஒப்பந்தத்தில் இலங்கை ஏற்கனவே இணைத் தலைவராக உள்ளது. எக்காரணம் கொண்டும் இனி நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க அனுமதி அளிக்க மாட்டோம்.

தேசியக் கொள்கைகளை வகுப்பதில் கல்விக்கு மிக முக்கிய இடமளிக்க வேண்டுமென நான் எப்போதும் கூறி வருகிறேன். உலகத்தரம் வாய்ந்த புதிய கல்வி முறையொன்றே எமக்குத் தேவை. இந்த நோக்கத்திற்காக, கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டில் நாங்கள் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளோம். இதுவரை 379ஆக இருந்த தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிப்பதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம். இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலும் பாடசாலை அபிவிருத்திக்காக பாரியளவிலான நிதியை ஒதுக்கியுள்ளோம். அடுத்த சில ஆண்டுகளில், பாடசாலைகள் இடையே உள்ள இடைவெளியை குறைக்க, நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்வோம்.



புதிய உலகில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் வணிக வாய்ப்புகளை உருவாக்குவதில் தொழில்நுட்பக் கல்வியின் முக்கியத்துவத்தை நாம் கண்டறிந்துள்ளோம். எனவே, கடந்த இரண்டு ஆண்டுகளில், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகிய பிரிவுகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மாணவர்கள் என்ன பாடத்திட்டங்களை பயின்றாலும், அவர்கள் எல்லோருக்கும் தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் தொழில் முனைவு தொடர்பான அறிவை வழங்கும் பாடத்திட்டங்களை அறிமுகம் செய்வதற்கு சீர்திருத்தங்கள் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

உயர்தரம் சித்திபெறும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பல்கலைக்கழகத்துக்கு உள்நுளையும் உரிமையை நாம் அன்று வலியுறுத்தினோம். அதன்வண்ணம் சகல பல்கலைக்கழகங்களினதும் கொள்ளளவை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறைந்த வசதியுள்ள 10 மாவட்டங்கள் உள்ளடங்கும் விதத்தில் 10 நகர பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கு சகல ஏற்பாடுகளும் தயார்செய்து முடிக்கப்பட் டுள்ளன.

இச் சீர்திருத்தங்களினூடாக தற்போது பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 35 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன்வண்ணம் இதற்கு முன்னதாக உள்வாங்கப்பட்ட 30ஆயிரம் அளவிலான மாணவர்கள் எண்ணிக்கைக்கு மேலதிகமாக புதிதாக 10ஆயிரம் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு கடந்த வருடம் எங்களால் முடிந்தது. பல்கலைக்கழக ஆசிரியர்கள் குழாமை 500 ஆல் அதிகரிக்கச்செய்து அவர்களுக்கு தேவையான கல்வி மற்றும் நலன்புரி வசதிகளை அதிகரிக்கச் செய்வதற்கு தேவையான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக திறந்த பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பாடத்திற்காக புதிதாக 10ஆயிரம் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இம் மாணவர்களுக்கு ஆரம்ப வருடத்திலிருந்தே தொழிலொன்றில் ஈடுபட்டுக்கொண்டு கல்வியை பெற்றுக்கொள்ளக்கூடிய வண்ணம் பாடநெறிகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

அது எவ்வாறாயினும், இன்னும் வருடாந்தம் பல்கலைக்கழகங்களுக்கு தகைமைபெறும் மாணவர்களின் எண்ணிக்கையில் 25 வீதத்திற்கும் குறைந்த அளவினையே அரச பல்கலைக்கழக கட்டமைப்புக்குள் உள்வாங்குவதற்கு இயன்றுள்ளது. இந்நிலைமையின்கீழ் வருடாந்தம் அதிகரிக்கும் சனத்தொகைக்கு ஒப்பீட்டளவில் உயர்தரம் சித்தியடையும் சகல மாணவர்களுக்கும் கூடிய தரத்திலான பல்கலைக்கழக கல்வியொன்றை அரசாங்கத்தால் மட்டும் பெற்றுக் கொடுப்பது மேலும் யதார்த்தமாகாது என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்

பல்கலைக்கழகமொன்றுக்கு உள்வாங்கப்படுவதற்கு தகைமை இருந்தாலும், அதற்காக அரச பல்கலைக்கழக தொகுப்பினுள் போதுமான இடவசதி இல்லாமையும், பணத்தை செலவு செய்தேனும் உயர் கல்வியை பெறுவதற்கு இந்நாட்டினுள் வாய்ப்பு இல்லாத காரணத்தால் பல இளைஞர்கள் விரக்திக்கு உள்ளாகின்றார்கள். ஏதேனும் வசதியுள்ளவர்கள் தாய், தந்தையரின் காணி நிலங்களை விற்றேனும் வெளிநாட்டில் கல்வி கற்பதற்கு செல்கின்றார்கள். ஏனையோர்கள் நிர்க்கதிக்குள்ளாகின்றார்கள்.

எமது பிள்ளைகளின் கல்விக்காக பணத்தை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு மாறாக உயர்ந்த தரத்தினுடனான பல்கலைக்கழக தொகுப்பொன்றினூடாக வெளிநாட்டு மாணவர்களையும் கூட இலங்கைக்குள் ஈர்ப்பதற்குள்ள சந்தர்ப்பத்தை நாங்கள் இழந்துள்ளோம்.

உலகில் சிறந்த பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த அதிகமான பல்கலைக்கழகங்கள் இலாபம் ஈட்டாத நிறுவனங்களாக செயற்படுகின்ற அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களாகும். அப்பல்கலைக்கழகங்கள் சகலவற்றிலும் திறமை வாய்ந்த மாணவர்களுக்கு இலவசமாக கல்வி பெறுவதற்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. உலகில் அதிகமான நாடுகளுக்கு பொதுவான இந்த முன்மாதிரியானது எமது நாட்டில் செயற்படுவதில்லை.

எமது நாட்டினுள்ளும் பல்கலைக்கழக கல்விக்காக மிகவும் சுதந்திரமான சூழலை ஏற்படுத்தினால், சர்வதேச தர மட்டத்திலான உலக அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்களை இலங்கைக்கு ஈர்த்துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் எமக்கு கிடைக்கும். அதனூடாக இலங்கையின் பல்கலைக்கழக கட்டமைப்பினுள் கொள்ளளவினை அதிகரிக்கச் செய்து அதிகளவிலானோருக்கு உயர்கல்வி சந்தர்ப்ப வாய்ப்பை வழங்க முடியும்.

இவ் வாய்ப்பினை நாட்டின் பிள்ளைகளுக்கு வழங்காதிருக்க பாரம்பரிய அரசியல்வாத சித்தாந்தங்களைத் தவிர, வேறு எந்தவித காரணிகளும் இல்லை. இதை நடைமுறைப்படுத்துவதற்கு நாட்டின் சட்ட கட்டமைப்பினை மாற்ற வேண்டுமாயின் அதனை நாடாளுமன்றத்தினால் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

ஆகையினால் அரச பல்கலைக்கழக கொள்ளளவினை அதிகரிக்கச் செய்வதோடு, தரமுயர்ந்த அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை நாட்டினுள் ஆரம்பிப்பதற்காக அனுமதி வழங்க வேண்டுமா என்பதை பரவலாக கலந்துரையாடும்படி நான் இந்த உன்னத சபைக்கு முன்மொழிகின்றேன்.

இன்று முழு உலகமே தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒரு யுகம். எமது நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை ஈடேற்றிக் கொள்வதற்காகவும், சகல துறைகளிலும் தொழில்நுட்பத்தைப் பாவிப்பது மிகவும் முக்கியமாகும். தொழில்நுட்பத்தினால் வலுப்படுத்தப்பட்ட டிஜிட்டல் பொருளாதாரத்துடன் நேர்த்தியான இலங்கையொன்றை உருவாக்கும் இலக்கை ஈடேற்றிக் கொள்வதற்காக கடந்த இரண்டு வருடத்தினுள் நாம் அதிகமான வேலைத்திட்டங்களைச் செய்துள்ளோம்.

இது தொடர்பாக செயற்படுகின்ற TRCSL, ICTA மற்றும் CERT சகல அரச நிறுவனங்களை ஒருங்கிணைத்து அவற்றுக்குத் தேவையான வழிகாட்டலை வழங்குவதற்கும், அவற்றின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும் தனியானதொரு தொழில்நுட்ப அமைச்சொன்றை நிறுவுவதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்தோம்.

எந்தவொரு நாட்டையும் டிஜிட்டல் மயமாக்குவதற்காக இணையத்தள மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அடிப்படை வசதிகள் மிகவும் முக்கியமாகும். ஆகையினால், FIBER மற்றும் 4G வலையங்களை பரவலாக்கி நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் BOARDBAND அதிவேக இணையத்தள தொடர்பாடல் வசதிகளை வழங்குவதற்கு நாங்கள் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம். 8 மாவட்டங்களை உள்ளடக்கும் விதத்தில் 300க்கும் அதிகமான கிராமங்களை தற்போது இவ் வலையத்துடன் இணைத்து முடித்துள்ளோம். மிகவும் குறுகிய காலத்தினுள் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் FIBER மற்றும் 4G வலையத்தை பரவச் செய்து சிறிய மற்றும் பெரிய சகல பாடசாலைகளுக்கும் BOARDBAND அதிவேக இணையத்தள தொடர்பாடல் வசதிகளை வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

கடந்த கால கொவிட் -19 உலகளாவிய ரீதியிலான தொற்றுப் பரவல் இருந்த காலகட்டத்தினுள் வீட்டிலிருந்து கடமையாற்றுவதற்கும் (Work From Home) இயங்கலை (online) முறையினூடாக தொடர்ச்சியாக கல்வியை வழங்குவதற்கும், இணையத்தளத்தினூடாக வியாபார நடவடிக்கைகளை பேணுவதற்கு மக்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. இவ்விதமான அதிவேகமாக முன்னேறும் அடிப்படை வசதிகளின் காரணத்தினாலேயாகும்.

அண்மையில் பிரசுரிக்கப்பட்ட International Telecommunication Union அறிக்கைகளுக்கமைய, உலகில் அதிக மான நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தொடர்பாடல் கட்டணங்கள் ஆகக் குறைந்த நாடுகளுக்குள் நாம் முன்னிலை வகிக்கின்றோம்.

சுதந்திர கல்வி எண்ணக்கருவை டிஜிட்டல் நிலைக்கு கொண்டு செல்வதற்காக கல்வியமைச்சு மற்றும் ICTA நிறுவனம் ஒன்றிணைந்து கட்டியெழுப்பிய ஈ கல்வித் தொகுதியை சகல பாடசாலைகளிலும் உத்தியோகபூர்வ இயங்கலை (online) கல்வித் தொகுப்பாக ஸ்தாபித்துள்ளோம். முற்றுமுழுதாக இணையத்தள சேவைக் கட்டணங்களிலிருந்து விடுவித்துள்ள இப்புகுமுகமானது அரச பல்கலைக்கழக தொகுப்பிற்கு தற்போது திறக்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாக நடவடிக்கைகளுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தலும் எங்களால் எடுக்கப்பட்ட மற்றுமொரு முதன்மையான நடவடிக்கையொன்றாகும். அதன் வண்ணம் முன்னுரிமையாக இனங்காணப்பட்ட சுகாதாரம், விவசாயம் மற்றும் நீதி உள்ளிட்ட பல துறைகளுக்கான அரச நிறுவனங்களில் டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடு தற்போது அதிவேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் பல காலமாக எதிர்பார்த்திருந்த டிஜிட்டல் அடையாள அட்டையை அறிமுகம் செய்யும் கருத்திட்ட நடவடிக்கைகள் தற்போது பெரும்பாலும் முடிவடைந்துள்ளன. இதனை அறிமுகப்படுத்தும் ஆரம்ப கட்டத்தை இவ் ஆண்டுக்குள் நாங்கள் ஆரம்பிப்போம்.

இலங்கையை டிஜிட்டல் மயமாக்கும்போது அதற்குத் தேவையான மனிதவளம் மற்றும் தொழில்நுட்ப ஊழியச் செயலணியை உருவாக்குவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வித் துறைகளில் கடந்த இரண்டு வருடங்களுக்குள் அதிகளவிலான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இளம் தொழில்நுட்பவியலாளர்களுக்கு நாட்டில் எந்த இடத்தில் இருந்தேனும் வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கு மற்றும் அவ் வியாபாரத்தை நடத்திச் செல்வதற்கு இயன்ற விதத்தில் தேசிய மட்டத்தில் வசதிகளை கட்டியெழுப்புவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். தேசிய தொழில்நுட்பவியலாளர்களுக்கு மட்டுமல்ல, Digital Nomad வேலைத்திட்டத்தினூடாக வெளிநாடுகளிலிருந்து வரும் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலிருந்தும் வெளிநாடுகளுக்கு சேவைகளை வழங்குவதற்கு இயன்ற விதத்தில் அடிப்படை வசதிகளை முன்னேற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

தற்போது காலி, குருநாகல், கண்டி, நுவரெலியா மற்றும் ஹபரண ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தொழில்நுட்ப பூங்காக்களின் ஊடாக இலங்கை புத்தாக்க ஊக்குவிப்புக்கு போன்று வெளிநாட்டு தொழில்நுட்ப நிறுவனங்களையும் இலங்கைக்கு ஈர்த்துக் கொள்வதற்கு நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

அதிவேகமாக நடைபெறும் டிஜிட்டல் மயமாக்கலுக்கு இணையாக அதற்குரிய சட்டரீதியான சூழலை புதுப்பிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். பொது மக்களின் தரவுகளை பாதுகாப்பதற்காக தரவுப் பாதுகாப்பு சட்ட வரைவிற்கு போன்று இலங்கையின் சைபர் பாதுகாப்புக்கான சைபர் பாதுகாப்புச் சட்டவரைவிற்கும் தற்போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் சப்மெரின் கேபல் தொகுதியைப் பாதுகாப்பதற்காக புதிய சட்டத் தொகுப்பு தற்போது வரையப்பட்டு வருகின்றது.

இத்துறையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும்போது வலயத்தில் எந்தவொரு நாட்டிற்கும் இணையாகாத வண்ணம் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மிகவிரைவாக 3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கூடிய ஏற்றுமதி துறையொன்றாக ICT/BPM வியாபாரங்களை கட்டியெழுப்புவதோடு, அதனூடாக தொழில்நுட்பத்தினூடாக வலுவூட்டப்பட்ட நாடொன்றாக எதிர்கால இலங்கையை உருவாக்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். எமது எதிர்கால சந்ததியினருக்கு புதிய தொழில்நுட்பத்தை உபயோகிப்பதன் மூலம் தமக்கே தனித்துவமான படைப்புகளினூடாக உலகத்தில் எந்தவொரு நாடொன்றினுடனும் போட்டியிடக் கூடிய சூழலொன்றை தயார் செய்து கொடுப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

நாங்கள் வரலாறு முழுவதும் எந்தவொரு சவால்களையும் எதிர்நோக்கிய இனமாகும். நாட்டுக்கு உரிய தலைமைத்துவம் இருந்த சந்தர்ப்பங்களில் நாம் அச்சவால்களை சிறப்பாக வெற்றிக் கொண்டோம்.

இச் சந்தர்ப்பத்திலும் எமக்குள்ள சவாலை வெற்றிக் கொள்வதற்கு எமக்கு முடியும். அதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு நான் தயாராகவுள்ளேன்.

தற்கால சவால்களை வெற்றிக்கொண்டு மக்கள் எதிர்பார்க்கும் சுபீட்சமான தேசத்தை நிலைநாட்டுவதற்குத் தேவையான திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

எமது இலக்கு எதிர்வரும் வருடங்களுக்குள் வலயத்தில் வேகமாக அபிவிருத்தியடையும் நாடொன்றாக இலங்கையை உருவாக்குவதாகும். இதற்காக விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் எனும் மூன்று பிரிவுகளிலும் தெளிவான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எமது திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக எனக்கு உங்களதும், மக்களினதும் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது.

இந்நாடு தற்போது இந்நாட்டில் வசிக்கும் மக்களைப் போன்று எதிர்காலத்தில் வசிக்கவுள்ள மக்களுக்கும் உரித்தானதாகும். நாங்கள் இந்நாட்டின் தற்கால பாதுகாவலர்கள் மட்டுமே. நாங்கள் இன்று செயற்படும் விதத்தில்தான் இந்நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஆகையினால் நாங்கள் எல்லோரும் எதிர்கால சந்ததியினருக்கு பொறுப்பு கூற வேண்டும்.

ஆகவே, நாட்டுக்கு ஆதரவான சகலரும் ஒன்று சேர்ந்து இச்சந்தர்ப்பத்தில் அவ் ஒத்துழைப்பை நல்குவீர்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**உங்கள் அனைவருக்கும் நன்றி**
**மும்மணிகளின் ஆசி.**

# எம்.ஜி.ஆர். பிறந்த தின நிகழ்வு







(யாழ். நிருபர்)

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 105ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் (17) மாலை யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு, யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் மனைவி மாலை அணிவித்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் மற்றும் வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் செல்வம் உள்ளிட்டோர் எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினர், எம்.ஜி.ஆரின் ரசிகர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது அண்மையில் இயற்கை எய்திய யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் நினைவாக அவர்களது குடும்பத்தினரால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன.

யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கம் அண்மையில் இயற்கை எய்திய நிலையில் அவரின் குடும்பத்தினரால் யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர். சிலை புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டதுடன், யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கம் மற்றும் எம்.ஜி.இராமச்சந்திரனின் படங்கள் கல்வெட்டுகளாக பதிக்கப்பட்டு எம்.ஜி.ஆர். சிலை புதுப்பொலிவுடன் மாற்றியமைக்கப்பட்டது.

எம்.ஜி.இராமசந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமாக விளங்கிய யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஏற்பாட்டில் ஆண்டுதோறும் எம்.ஜி.ஆர். நினைவேந்தல்கள் கல்வியங்காடு பகுதியில் இடம்பெற்றுவந்த நிலையில் அவர் அண்மையில் இயற்கை எய்தினார்.

யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர் சிலை எம்.ஜி.இராமசந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நம்மவர் கதை பேசும் 'சினம்கொள்' திரைப்படத்திற்கு பேராதரவு தாருங்கள்!

## வசனகர்த்தா - பாடலாசிரியருமான தீபச்செல்வன் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

தடுப்புச் சிறையிலிருந்து விடுதலையாகும் முன்னாள் விடுதலைப் புலிப் போராளியின் வாழ்க்கை போராட்டத்தைப் பேசும் 'சினம்கொள்' திரைப்படத்தை ஈழத்திலுள்ள மக்கள் கட்டணமின்றி பார்வையிடலாம் என்று ஈழத்து எழுத்தாளரும் 'சினம்கொள்' படத்தின் வசனகர்த்தா மற்றும் பாடலாசிரியருமான தீபச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஓ.டி.டி. தளத்தில் (eelampaly.com) வெளியாகியுள்ள 'சினம்கொள்' படத்திற்கு ஈழ மக்கள் பேராதரவு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடகமையத்தில் 'சினம்கொள்' திரைப்படக் குழுவினர் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சினம்கொள்' திரைப்படத்தை இயக்குனர் ரஞ்சித் ஜோசப் எழுதி இயக்கியுள்ளார். அவர் 'பிச்சைக்காரன்', 'செல்லாமலே', 'சிவப்பு மஞ்சள் பச்சை' ஆகிய படங்களின் இயக்குனர் சசியிடம் உதவி இயக்குனராக கடமையாற்றியவர். அத்துடன், இந்தப் படத்தில் ஒளிப்பதிவாளராக பழனிகுமார் மாணிக்கமும் இசையமைப்பாளராக என்.ஆர்.ரகுநந்தனும் பணியாற்றியுள்ளனர். ரகுநந்தன் 'தென்மேற்குப் பருவக்காற்று', 'நீர்ப்பறவைகள்', 'சுந்தரபாண்டியன்' முதலிய படங்களுக்கு இசையமைத்த முக்கிய ஆளுமையாகும்.

மலையகம், வடக்கு, கிழக்கு, சிங்கள கலைஞர்கள், தமிழக கலைஞர்கள், இந்தியக் கலைஞர்கள், கனேடிய கலைஞர்கள் மற்றும் சர்வதேச கலைஞர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் இணைந்து உருவாக்கிய கூட்டுப்படைப்பான 'சினம்கொள்' உலகத் தரமான படமாக இருப்பதாகவே தமிழக திரைப்பட பிரபலங்கள் வியந்து பாராட்டி இருப்பதையும் இங்கே நினைவுபடுத்துகிறேன்.

இந்தப் படத்தில் கதாநாயகனாக 'ஆண்டவன் கட்டளை' படத்தில் விஜய்சேதுபதியுடன் இணைந்து நடித்த அரவிந்த் சிவஞானமும் கதாநாயகியாக நர்வினி டேவிட்டும் நடித்துள்ளனர். அத்துடன், பெருமளவான கதாபாத்திரங்களில் ஈழத்தைச் சேர்ந்த கலைஞர்கள் நடித்திருக்கின்றனர்.

ஈழ மண்ணின் காட்சியையும் ஈழ மண்ணின் கதையையும் கலை அழகியல் குன்றாமல் இந்தப் படம் பேசுகின்றது. ஈழத்திலிருந்து வரும் படங்கள் டாக்குமன்ரி படங்கள் எனக் குறைகூறப்படுகின்ற நிலையில் சிறந்த கொமர்சியல் படமாக, ஜனரஞ்சகப் படமாக 'சினம்கொள்' அமைந்திருப்பதுடன், கலை அழகியல் குன்றாத வகையிலும் இப்படம் அமைந்திருப்பதை இந்திய ஊடகங்களின் விமர்சனங்கள் அண்மையில் பாராட்டியுள்ளன.




அத்துடன், இந்திய திரைப்பட தணிக்கை சபை இந்தப் படத்திற்கு யூ சான்றிதழ் அளித்துள்ளது. இந்திய தணிக்கை சபையின் யூ சான்றிதழ் பெற்ற முதல் ஈழத் திரைப்படமும் இதுவே. இலங்கையின் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தணிக்கை சபையும் இந்தப் படத்திற்கு சான்றிதழ் அளித்துள்ளது.

இந்தப் படத்தை பார்த்துள்ள தமிழகத் திரைப் பிரபலங்கள் பலரும் வெகுவாக பாராட்டி வருவதையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். குறிப்பாக, நடிகர் நாசர் இந்தப் படத்தை வெகுவாகப் பாராட்டி நேர்காணல் ஒன்றை வழங்கியிருக்கிறார். அதேபோல் இயக்குனர் இமையம் பாரதிராஜா, நடிகர் சத்தியராஜ், இயக்குனர் சசி, இயக்குனர் சீனு ராமசாமி, கவிஞர் வைரமுத்து எனப் பலரும் வியக்கும் படைப்பாக 'சினம்கொள்' உருவாகியுள்ளமை ஈழத் தமிழர்களுக்கு பெருமை சேர்க்கும் கலைப்பணி என்றே கருதுகிறேன்.

அத்துடன் இந்தியாவின் முன்னணி ஊடகங்கள் பலவும் 'சினம்கொள்' படம் குறித்து பாராட்டுகளையும் வியப்பான விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்றன. ஈழத் தமிழ் மக்கள் இதுபோன்ற சிறந்த சினிமா படைப்புகளை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை 'சினம்கொள்' ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், ஈழச் சினிமா வரலாற்றில் 'சினம்கொள்' ஒரு மைல் கல்லாக அமையும் என்றே நம்புகிறேன்.

உலக நாடுகளில் இந்தப் படம் பரீட்சார்த்தமாக திரையிடப்பட்டபோது பெருமளவான மக்கள் கலந்துகொண்டு ஆதரவளித்தார்கள். படத்தைப் பார்த்த அத்தனை பேரும் கண்ணீரோடும் நெகிழ்ச்சியோடும் சென்றதைக் கண்டோம். அதுபோல் ஈழத்தில் யாழ். சர்வதேச திரைப்பட விழாவில் இப் படம் வெளியிடப்பட்டபோதும் பெருந்திரளான மக்கள் பெரும் நெகிழ்ச்சியுடன் கண்ணீருடன் இந்தப் படத்தை பார்த்தார்கள். மக்களின் இதயத்தை தொடும் வகையில் தீராத ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் சிறந்த படைப்பாகவும் இப்படம் உருவாகியிருக்கிறது.

இப்போது நாங்கள் இந்த ஊடக சந்திப்பை நடத்துவதற்கான நோக்கம் யாதெனில், தற்போது 'சினம்கொள்' ஈழம்பிளே.கொம் (eelampaly.com) என்ற ஓ.டி.டி. தளத்தில் வெளியாகியுள்ளது. ஈழத்தில் வாழ்கின்ற மக்கள் எந்தவிதமான கட்டணங்களும் இல்லாமல் இப் படத்தை பார்க்கலாம். எந்த மக்கள் பற்றிய திரைப்படமோ அந்த மக்களே இத் திரைப்படத்தை முழுமையாக பார்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இயக்குனர் ரஞ்சித் இந்த வாய்ப்பை ஏற்படுத்தி தந்துள்ளார். அதேபோல வெளிநாடுகளில் படத்தை பார்க்கத் தவறிய உலகத் தமிழர்கள் அனைவரும் இப் படத்தை பார்க்க வேண்டும்.

எனவே, எமது மக்கள் இந்தத் திரைப்படத்தை பார்வையிட வேண்டும். பேராதரவு வழங்கவேண்டும். நிச்சயமாக உங்கள் அனைவரையும் மிகவும் ஈர்க்கின்ற படமாக மீண்டும் மீண்டும் பார்க்கின்ற படமாக சினம்கொள் அமையும் என்று திடமாக நம்புகிறேன். ஊடக நண்பர்களும் எமது தாயக பத்திரிகைகளும் இந்தப் படம் பற்றிய செய்தியை மக்களிடம் கொண்டுசேர்க்க வேண்டும்.

ஏன் படத்தின் வெளியீடு தாமதமானது? என்று இச்சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியமைக்கு பதிலளித்த தீபச்செல்வன், உலக நாடுகளில் பரீட்சார்த்த முயற்சியாக திரையிடல் நடந்தது. அந்த திரையிடல்கள் நடந்துகொண்டிருந்தபோதே கொரோனா தொற்று ஏற்பட்டமையால் படத்தின் வெளியீடு பாதிக்கப்பட்டது. அத்துடன், யாழ். சர்வதேச திரைப்பட விழாவின் திரையிடலைத் தொடர்ந்து இலங்கையில் திரையிடல் முயற்சி நடந்தபோதும் இதனையே எதிர்கொண்டோம். விரைவில் இலங்கை திரையரங்குகளில் சினம்கொள் வெளியிடப்படும். இப்போது உங்கள் வீடுகளில் இருந்தே ஈழம்பிளே (eelampaly.com) என்ற ஓ.டி.டி. தளம் வாயிலாக இந்தப் படத்தை பார்த்து ஆதரவைத் தாருங்கள்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழ். போதனா வைத்தியசாலையில் திரவ ஒட்சிசன் தாங்கி திறந்துவைப்பு







(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட திரவ ஒட்சிசன் தாங்கி திறந்துவைக்கப்பட்டது.

நேற்றுக் காலை 11.30 மணியளவில் வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர், வைத்திய கலாநிதி ச.சிறீபவானந்தராஜா மற்றும் வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டது.

குறித்த திரவ ஒட்சிசன் தாங்கி வடமாகாணத்தில் முதல் தடவையாக மத்திய சுகாதார அமைச்சினால் 24 மில்லியன் ரூபா செலவில் 10 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வைத்தியசாலைக்கு தேவையான ஒட்சிசன் குழாய் வழிமூலமாக விடுதிகளுக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்படவுள்ளதுடன், 10 நாட்களுக்கு ஒருமுறை இதனை நிரப்பினால் போதுமானதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கழுதைகள் மன்னாரில் அழியும் தறுவாயில்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகளவாக அருவருக்கப்படும் விலங்காகவும் அவமதிக்கப்படும் விலங்காகவும் காணப்படுவது கழுதைகளாகும்.


ஏனைய மாவட்டங்களில் மன்னார் கழுதைகள் என மன்னார் மாவட்டத்தை அடையாளப்படுத்தும் அளவுக்கு பிரசித்திபெற்றவையாக விளங்குகிறது இவ்கழுதைகள்.

மன்னாரிலுள்ள பிரதான வீதிகள் உள்ளடங்கலாக எல்லா இடங்களிலும் எளிதாக காணக்கூடிய விலங்குகள் கழுதைகள். வீதிகளில் மனிதர்களால் வீசப்படும் பொலித்தீன்களையும் குப்பைகளையும் உண்டு வாழும் இவ்விலங்கின் பொருளாதார மதிப்பு மன்னார் மக்களுக்கு புரியாமல் போனது கவலையே.

கழுதை அதனுடைய சகிப்புத்தன்மைக்குப் பெயர்பெற்றது. கழுதைகளின் தாக்குப்பிடிக்கும் திறன் ஏனைய விலங்குகளை விட அதிகமாகும். எனவே, இவை கரடுமுரடான பகுதிகளில் மிகுந்த பாரம் தூக்கிச் செல்ல பயன்படுத்தப்பட்டன. இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன.

பெரும்பாலான காட்டுக் கழுதைகள் 100 சென்ரிமீற்றர் முதல் 142 சென்ரிமீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. ஆனாலும் வீடுகளில் வளர்க்கப்படும் கழுதைகள் 90இலிருந்து 142 செ.மீ. உயரம் வரை வளர்கின்றன. பொதுவாக கழுதைகள் மிதமான பாலைநிலங்கள் மற்றும் வறண்ட வெப்பம் நிறைந்த பகுதிகளில் வாழக்கூடியவை.

அதை விட இவை குதிரைகளைவிட குறைவான உணவையே உட்கொள்கின்றன. பல நாடுகளில் தற்போதுவரை கழுதைகளை பயன்படுத்தி கட்டிட வேலைகள், போக்குவரத்து என பல பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.










இன்னும் சில நாடுகளில் தற்போதுவரை திருமணத்தின்போது கழுதைகளை சீதனமாக வழங்கப்படும் வழக்கமும் காணப்படுகின்றது.

பண்டைய கால மதச் சடங்குகளுக்கும் கழுதைகள் பயன்படுத்தப்பட்டதுடன், பண்டைய எகிப்தின் பெண் ஆட்சியாளரான கிளியோபட்ரா தனது அழகை பராமரிக்க கழுதைப்பாலில் குளிப்பார் எனவும் கூறப்படுகின்றது. மேலும் விலங்குகளில் கழுதை மிகவும் புத்திசாலியான விலங்காகவும் பண்டைய காலங்களில் கருதப்பட்டது.

எல்லாவற்றையும் விட முக்கியமாக கழுதை பால் மனித பால் போன்று குறைந்த புரதமும் கொழுப்பும் காணப்படுவதுடன், லக்டோஸும் கொண்டது என ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு வேளாண்மை ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும் கழுதை பாலில், விற்றமின் A, B-1, B-2, B-6, விற்றமின் D, விற்றமின் E உள்ளது. கழுதை பாலிலிருந்து தயாரிக்கப்படும் சோப், கிறீம் மற்றும் இதர பொருட்களுக்கு சில நாடுகளில் நல்ல சந்தை மதிப்புள்ளமை சிறப்பம்சமாகும்.

அதேநேரம் கழுதை பால் அழகு சாதனப்பொருட்கள் மற்றும் மருத்துவத்துறைக்கு பயன்படுத்தப்படுகின்றது எனவும் கழுதை பால் உடலில் காணப்படும் செல்களை குணப்படுத்துவதாகவும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் பண்பு கொண்டுள்ளது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அதேநேரம் கழுதை பாலின் சந்தை மதிப்பு லீற்றருக்கு 12ஆயிரம் தொடக்கம் 20ஆயிரம் வரை இலங்கை மதிப்பில் கணிப்பிடக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான பின்னணியில் மன்னார் மாவட்டத்தில் நீண்ட நெடிய காலமாக பரவல் அடைந்திருந்த கழுதைகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக வீழ்ச்சியடைந்துள்ளது. பராமரிப்பற்ற தன்மை, விபத்துகள், உணவு இன்மை, நோய்த்தாக்கம் உட்பட பல காரணங்களால் இந்தக் கழுதைகளின் இனப்பெருக்கம் மற்றும் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இந்நிலையில், கழுதைகளுக்கு புனர்வாழ்வளிக்கும் முகமாகவும் அவற்றின் ஊடாக பயனுள்ள கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாகவும் பிறிஜிங் லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் மன்னார் ஓலைத்தொடுவாய் தாயிலான் குடியிருப்பு மக்களும் இணைந்து மன்னாரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கழுதைகள் மருத்துவமனை மற்றும் கல்வி மையம் பலரையும் கவர்ந்துள்ளது.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, சின்னக்கரிசல் தாயிலான் குடியிருப்பு பகுதியில் கழுதைகளுக்கான மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அவைகளை பராமரிப்பதற்கென மருத்துவமனை ஒன்றும் அதன் அருகில் கழுதைகள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு 5 வருடங்களுக்கு மேலாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையத்தின் ஊடாக மன்னாரில் காயமடைந்த மற்றும் புறக்கணிக்கப்பட்ட கழுதைகளை பராமரிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வாறான காயமடைந்த கழுதைகள் பரிசோதிக்கப்பட்டு, சிகிச்சையளிக்கப்பட்டு அதனை பழக்கப்படுத்தி பயனுள்ள நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் கழுதைகள் தொடர்பான தெளிவுபடுத்தல் வழங்கக்கூடிய கற்றல் நிலையம் ஒன்றும் குறித்த நிலையத்தில் செயற்பட்டு வருகின்றது.

6 விதமான இனங்களைச் சேர்ந்த கழுதைகள் இங்கு பராமரிக்கப்படுவதுடன் பயிற்றுவிக்கப்பட்ட கழுதைகளைக் கொண்டு மனநலம் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதும் அவதானிக்கத்தக்கது.

கழுதைகள் அதிகமாக காணப்படுவதால் என்னவோ மன்னாரில் தற்போதுவரை கழுதைகள் புறக்கணிக்கப்பட்ட விலங்காகவே வீதிகளில் காட்சி தருகின்றன. அவற்றை பயனுள்ள விலங்காக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் மேற்கொள்ளாவிடத்து புகைப்படங்களிலே கழுதைகளை எமது எதிர்கால சந்ததியினர் காணவேண்டிய நிலை வரும் என்பதே நிதர்சனம்.

LK Newspapers
Viber Community

# ஓட்டமாவடி பிரதேச சபையின் நிர்ணய விலையை கண்டித்து மாட்டிறைச்சி கடைகளுக்கு பூட்டு

(எச்.எம்.எம்.பர்ஸான்)






கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை, மாட்டிறைச்சி விற்பனைசெய்ய நிர்ணயித்துள்ள விலையை கண்டித்து நேற்று செவ்வாய்க் கிழமை (18) முதல் அனைத்து மாட்டிறைச்சிக் கடைகளையும் மூட தீர்மானித்துள்ளதாக வரையறுக்கப்பட்ட கால்நடை இறைச்சி விநியோக தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.எம்.கமால் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மாட்டிறைச்சி ஒரு கிலோ 1,000 ரூபாவுக்கும், கலவன் இறைச்சி 850 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபரின் தலைமையில் கடந்த 16ஆம் திகதி நடந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் எமது சங்கத்திலுள்ள இறைச்சிக் கடை உரிமையாளர்கள் கலந்து கொண்டு தங்களது நியாயமான காரணங்களை முன்வைத்தபோதும் பிரதேச சபை அதனை மறுத்து தன்னிச்சையாக மாட்டிறைச்சிக்கு நிர்ணய விலையை மக்கள் மத்தியில் அறிவித்துள்ளது.

இதனால் எமது தொழிலாளர்கள் பல்வேறு பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இறைச்சிக்காக அறுக்கப்படும் மாடுகள் தட்டுப்பாடு, வெளி பிரதேசங்களுக்கு மாடுகள் ஏற்றுமதி, மாட்டிற்கான விலை அதிகரிப்பு போன்ற காரணங்களை கருத்திற்கொண்டு எமது சங்கத்தினால் ஒரு கிலோ தனி இறைச்சி 1,100 ரூபா, இறைச்சி எலும்புடன் 1,000 ரூபா, ஒரு கிலோ ஈரல் 1,200 ரூபா, பாபத் ஒரு கிலோ 500 ரூபா எனும் விலைகளில் விற்பனைசெய்ய எமது சங்கம் தீர்மானித்துள்ளது.

எனவே, எமது இறைச்சிக் கடை உரிமையாளர்களின் நிலைமையை கருத்திற்கொண்டு, அவர்களது தொழில் பாதிப்படையாமல் ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாகம் நியாயமான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

தங்களுக்கான நியாயம் கிடைக்கும் வரை ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளை இன்று (18) முதல் மூடத் தீர்மானித்துள்ளோம் என்று வரையறுக்கப்பட்ட கால்நடை இறைச்சி விநியோக தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.எம்.கமால் மேலும் தெரிவித்தார்.

# மட்டு. அரசினர் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய மாணவர்கள் 10 பேருக்கு கொரோனா

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் கல்வி பயின்றுவரும் இரண்டாம் ஆண்டு ஆசிரிய மாணவர்கள் 202 பேருக்கு நேற்று செவ்வாய்க்கிழமை (18) மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக ஆசிரியர் கலாசாலை அதிபர் எம்.பி.யுனைட் தெரிவித்தார்.





நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று காரணமாக கடந்த 2020ஆம் ஆண்டு விடுமுறையில் சென்ற ஆசிரிய மாணவர்கள் தொடர்ந்து விடுமுறையில் இருந்த நிலையில் சூம் முறையிலான கல்வி கற்று வந்துள்ளனர்.

இந்நிலையில், சுமார் ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் ஆசிரியர் கலாசாலை நேற்று (18) மீண்டும் திறக்கப்பட்டதையடுத்து, அங்கு கல்வி பயின்றுவரும் 202 இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 5 பேருக்கும் அம்பாறை மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 5 பேர் உட்பட 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டு. மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிப்பு

(கனகராசா சரவணன்)





மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசியான பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையின்கீழ் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் உள்ள மாணவர்களுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை (18) தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு, 350 மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு வெட்டுக்காடு பொதுச் சுகாதார பரிசோதகர் த.மிதுனன் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக் கமைய நாடளாவிய ரீதியில் 12 தொடக்கம் 15 வயதுவரையிலான பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர் களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று (18) மட்டக்களப்பு இந்துக் கல்லூரியிலுள்ள மாணவர்களுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஏனைய பாடசாலை களில் உள்ள மாணவர்களுக்கு தொடர்ச்சியாக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெறும் எனவும் மாணவர்கள் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் ஆர்வமாக ஈடுபட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிண்ணியா நகர, பிரதேச சபைகளின் புதிய தவிசாளர் தெரிவுக்கு பலத்த போட்டி

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச சபை ஆகிய இரு சபைகளின் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாமல் தோல்வியடைந்ததால் புதிய தவிசாளர் தெரிவு இடம்பெறவுள்ளதாக வர்த்தமானி ஊடான அறிவித்தல் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

இதனால் குறித்த இரு சபைகளின் புதிய தவிசாளர் தெரிவானது நாளை (20) வியாழக்கிழமை உரிய சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதன்படி கிண்ணியா நகர சபையின் புதிய தவிசாளர் தெரிவு காலை 9.30 மணிக்கும் கிண்ணியா பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு காலை 11 மணிக்கும் இடம்பெறவுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் மூலமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி இரு சபைகளின் தவிசாளர் தெரிவு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர, சபை உறுப்பினர்களுக்கு இடையில் அதிகாரப் போட்டி நிலவிவருகிறது. யார் அந்த தவிசாளர் கதிரையை அலங்கரிக்கப்போகின்றனர் என எதிர்பார்ப்பு கட்சிகளுக்கிடையே பெரும் பரபரப்பை தற்போது ஏற்படுத்தியுள்ளது.

## போடியார் புலம்பல்.!



வாக்குறுதிகள் அனைத்தையும் மூன்று ஆண்டுகளுக்குள் நிறைவேற்றுவாராம் என்று நம்மட சனாதிபதி ஜயா சொல்லிப்போட்டாரு.. அப்ப வங்குறோத்து அனைத்தையும் எத்தன வருஷத்துக்குள்ள நிறைவேற்றுவார் என்று தம்பி பசீலிட்ட கேட்டு அதையும் சொன்னால் நல்லது எலுவா!

# வழிப்பறியில் ஈடுபட்ட பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட நால்வர் பொலிஸாரால் மடக்கிப்பிடிப்பு

மட்டக்களப்பில் பகீர் சம்பவம்!

மட்டக்களப்பு செங்கலடி சவுக்கடி பகுதியில் இடம்பெற்ற வழிப்பறி கொள்ளைச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபையின் தன்னாமுனை வட்டார பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட குழுவினரை வழிப்பறி சம்பவத்தில் மடக்கிப்பிடித்து கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த தைப்பொங்கல் தின இரவுவேளையில் செங்கலடி சவுக்கடி பகுதியில் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட 04 பேர் அவ்வழியால் வந்த குடும்பஸ்தர்களை தாக்க முற்பட்டு அவர்களிடமிருந்த பெறுமதியான தங்க நகைகளையும் அபகரிக்க முயன்றுள்ளனர்.

மதுபோதையில் இருந்த பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட குழுவினரிடமிருந்து தப்பித்த கணவன், மனைவி மற்றும் குழந்தைகள் சவுக்கடி கடற்கரை வழியால் தப்பிச்சென்று கோட்டமுனை மைதான பணியாளர்களின் உதவியுடன் கொக்குவில் பொலிஸார் ஊடாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, வழிப்பறிச் சம்பவத்தில் ஈடுபட்ட பிரதேச சபை உறுப்பினர் உட்பட்ட குழுவினர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டுள்ளனர். எதிர்வரும் 21ஆம் திகதி வரை பிரதேச சபை உறுப்பினர் நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோனா தொற்றுக்குள்ளான மாணவர்களுக்கு வைத்தியசாலைகளில் பரீட்சை நிலையங்கள்!

(கல்லடி நிருபர்)

க.பொ.த. (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றும் கொவிட்- 19 தாக்கத்தினால் பாதிக் கப்பட்ட மாணவர்களுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வைத்தியசாலைகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட்டினால் பாதிக்கப்பட்ட க.பொ.த. (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக பெரியகல்லாறு மாவட்ட வைத்தியசாலையில் பரீட்சை நிலையம் அமைக்கப்படவுள்ளது.

# தமக்கான உரிமைகளை வென்றெடுக்க முஸ்லிம் சமூகம் ஐக்கிய மக்கள் சக்தியோடு ஒன்றிணைய வேண்டும்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. அழைப்பு

(கிண்ணியா நிருபர்)

இலங்கையில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்க முஸ்லிம் மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியோடு ஒன்றிணைய வேண்டும் - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் முஸ்லிம் சமூகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (18) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் சமூகம் பல்வேறு இன்னல்களையும் சவால்களையும் சந்தித்து வருகின்றது. பல இடங்களில் முஸ்லிம் சமூகத்தவர்கள் புறக்கணிக்கப்பட்டு



வருகின்றார்கள். இந்த விடயங்களை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர்களால் பேச முடியாது என்பது நாமறிந்த உண்மையாகும்.

முஸ்லிம்களின் உரிமையைப் பெற்றுத் தருவோம் என்று ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் கட்சிகள் உரிமைக் கோஷத்தை முன்வைத்து வாக்குகளைப் பெற்று இன்று வெறும் அற்ப சலுகைகளுக்காக அரசாங்கத்திடம் சரணாகதி அடைந்துவிட்டன. சலுகைகளை மட்டும் கேட்டுப் பெற்றுக்கொண்ட அவர்களால் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பற்றி பேச முடியாது என்பதையும் நாம் கண்டுள்ளோம்.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற மாகாணம் கிழக்கு மாகாணம். முஸ்லிம்களின் அடையாளத்தைச் சொல்லும் பிரதான மாகாணம் இது. வேறு கட்சிகளில் போட்டியிட்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 6 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அரசுக்கு ஆதரவு வழங்குகின்றனர்.

கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண பாலர் பாடசாலைப் பணியக பணிப்பாளர்களுள் எந்தவொரு முஸ்லிம் பிரதிநிதியும் இல்லை. இவற்றைத் தட்டிக் கேட்கவோ அல்லது முஸ்லிம் பணிப்பாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவோ அரசுக்கு ஆதரவு வழங்கும் இந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முடியவில்லை.

கடந்த எமது நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இந்தப் பாலர் பாடசாலை பணியகத்திற்கு தவிசாளர்களாக முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கு மேலதிகமாக பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகவும் முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால், இந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையில் எந்தவொரு முஸ்லிமும் இல்லை என்ற ஆதங்கத்தை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் எம்மோடு பகிர்ந்துகொள்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் கடந்த 4 மாதங்களாக திட்டமிடல் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக உள்ளது. இதனை நிரப்ப தகுதியான உத்தியோகத்தர்களாக முஸ்லிம் உத்தியோகத்தர்களே இருக்கின்றனர். இந்த ஒரே காரணத்திற்காக இந்தப் பதவி இதுவரை நிரப்பப்படாமல் உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றார். ஆனால், அவரால் இந்த வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

ஏனெனில், இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட சலுகைகளுக்குள் இதுபோன்ற உரிமை சார்ந்த விடயங்கள் இல்லை. அவர்கள் கேட்டதையெல்லாம் இந்த அரசு கொடுத்து விட்டது. இனி எதுவும் கேட்கமுடியாது. அதனால்தான் இவர்களால் இதுபோன்ற விடயங்களைப் பற்றி கவனம் செலுத்த முடியாமல் உள்ளது. பேச முடியாமல் உள்ளது.

இந்த அரசாங்கத்தின் உறுப்பினர்களாகச் செயற்படும் இவர்களால் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை பெற்றுத்தர முடியாது என்பதற்கு இவை நல்ல உதாரணங்கள்.

இப்போது முஸ்லிம் சமூகத்தின் உரிமை சார்ந்த விடயங்களை ஐக்கிய சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் பேசி வருகின்றார்கள். முஸ்லிம் கட்சிகள் செய்யவேண்டிய இந்தப் பணியை ஐக்கிய மக்கள் சக்தி செய்கின்றது.

எனவே, இனியும் இந்த முஸ்லிம் கட்சிகளை நம்பி முஸ்லிம் சமூகம் ஏமாந்துவிடக்கூடாது. நமது சமூகம் ஏனைய சமூகத்தவரைப் போன்று இந்த நாட்டில் தலைநிமிர்ந்து வாழ அனைத்து முஸ்லிம்களும் ஐக்கிய மக்கள் சக்தியோடு ஒன்றிணைய வேண்டுமென அழைப்பு விடுக்கின்றேன்.

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பெரியகல்லாறு சூர்யா விளையாட்டுக் கழகத்தின் கலை, கலாசார நிகழ்வுகள்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு பெரியகல்லாறு சூர்யா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) கலை, கலாசார விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழ் பண்பாட்டு பவனியுடன் அதிதிகளை வரவேற்று மைதானம் வரை ஊர்வலமாக அழைத்து வந்தனர். அதனையடுத்து தேசிய கொடி ஏற்றப்பட்டதுடன், தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. அதனையடுத்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

முதலாவது நிகழ்வாக வரவேற்பு நடனம் இடம்பெற்றதனை தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இளவட்ட கல் தூக்குதல், வழுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சமர், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், நீருக்குள் அப்பிள் சாப்பிடுதல், மெதுவாக சைக்கிள் ஓட்டுதல் போன்ற 15இற்கு மேற்பட்ட முதியவர்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

சூரியா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர்எல்.கே.டபிள்யூ.கே.சில்வா, கிழக்கு மாகாண சபை செயலாளர் எம்.கோபாலரெட்ணம் விளையாட்டுக் கழகத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.









LK Newspapers Community

# கொரோனா தொற்றினால் கல்முனையில் மூவர் மரணம்; புதிய பிறழ்வான ஒமிக்ரொனாக இருக்கலாமென சந்தேகம்

## தற்காலிகமாக மூடப்பட்ட இடைத்தங்கல் முகாம்களை திறக்கவேண்டிய நிலைமையும் ஏற்படலாம் - பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புது வருடம் ஆரம்பமானதிலிருந்து மூவர் கொரோனா தொற்று நோயின் காரணமாக இது வரை மரணமாகியுள்ளதாகவும் அதிகளவான மாணவர்களும் தற்போது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்காலிகமாக எமது பிராந்தியத்தில் மூடப்பட்ட கொரோனா சிகிச்சை இடைத்தங்கல் முகாம்களை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தமையால் இறுக்கமான சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டதுடன், சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டு கொரோனா தொற்று நோய்ப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. கடந்த 2021 இறுதிக் காலப்பகுதியில் கல்முனைப் பிராந்தியம் இலங்கையில் மிகவும் பாதுகாப்பான பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் பொதுமக்களுக்கான தடுப்பூசி பிராந்தியத்தில் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வந்ததுடன் பொதுமக்கள் சுகாதார சட்ட விதிமுறைகளை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் என்ற அறிவுறுத்தல்களும் சுகாதார தரப்பினரால் வழங்கப்பட்டு வந்தன.

பொது நிகழ்வுகளில் அதிகமானவர்கள் கலந்துகொள்வதும் நீண்ட விடுமுறை காரணமாகவும் முகக்கவசம் அணியாமல் அலட்சியம் செய்யும் நிலையும் அவதானிக்கப்பட்டுவந்த நிலையில் கல்முனைப் பிராந்தியத்தில் தற்போது மூன்று மரணங்கள் சம்பவித்துள்ளன.

மரணித்தவரில் ஒருவர் 58 வயதுடைய பெண்மணி சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மல்வத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர். அடுத்தவர் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய பிரிவைச் சேர்ந்த மாதவன் வீதியில் வசித்து வந்தவர். இவருக்கு 74 வயதாகும். இதில் மல்வத்தை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்மணி எதுவித




தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளவில்லை. எனினும், கல்முனையைச் சேர்ந்தவர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர். இவர் கொவிட் நியூமோனியாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். அத்துடன், நிந்தவூர் பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய நபரும் கடந்த திங்கட்கிழமை (17) மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

மேலும் மேற்படி மூவரின் மரணத்தை தொடர்ந்து எமது பிராந்தியத்தில் ஒமிக்ரொன் கொரோனாவின் திரிபு பரவலடைவது குறித்து அச்சப்படும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் ஒமிக்ரொன் பரவல் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நீண்ட விடுமுறைகள் மக்கள் சுகாதார நடைமுறைகளை கவனிக்காமை அத்துடன், சுகாதாரத்துறையும் மிக இறுக்கமாக சுகாதார நடைமுறைகளை கவனிக்க முடியாத சூழ்நிலையும் இந்த பரவல் தொடர்வதற்கு காரணமாக அமைகின்றது. அத்துடன், இரு வாரங்களில் இதன் தாக்கம் அதிகரிப்பதற்கு சந்தர்ப்பமும் உள்ளது. எனவே, மக்கள் முகக்கவசம் அணிதல், ஒன்றுகூடுவதை தவிர்த்தலும் நன்று. இது தவிர அதிகமாக தொற்றுக்குள்ளானவர்கள் தடுப்பூசிகளை ஏற்ற தவறியவர்களாவர். தற்போது அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள கொரோனா 3ஆவது தடுப்பு மருந்தினை எடுத்துக்கொள்வதில் மக்கள் அதீத அக்கறை எடுப்பீர்களாயின் இந் நோய் தாக்கத்திலிருந்து தங்களையும் குடும்பத்தினரையும் காப்பாற்றிக்கொள்ள முடியும். மீண்டும் மக்களின் இயல்பு வாழ்க்கையினை ஸ்தம்பிதமடைய இடமாளிக்காமல் ஒன்றுபட்டு நாம் அனைவரும் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

கொரோனா தொற்று பரவல் அடைவதற்கும் சந்தர்ப்பம் உள்ளமையினால் இதனை தடுக்க மக்கள் எமக்கு ஒத்துழைப்புகளை தந்தால் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பி அனைவரும் விடுதலையை பெறமுடியும். எமது பிராந்தியத்தில் அதிகளவான மாணவர்களும் தற்போது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் மூவர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏலவே கொரோனா இடைத்தங்கல் முகாம்களை தற்காலிகமாக மூடியுள்ளதை நாம் அனைவரும் அறிவோம். இவ்விடைத்தங்கல் முகாம்களில் மருதமுனை, பாலமுனை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை என்பன உள்ளடங்குகின்றன. மீண்டும் இவ்வாறான இடைத்தங்கல் முகாம்களை திறக்கவேண்டிய நிலைமையும் ஏற்படலாம். எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள உயர்தர மற்றும் ஏனைய பரீட்சைக்கு முகங்கொடுக்கும் மாணவர்களுக்கு தொற்று ஏற்படுமிடத்து அட்டாளைச்சேனை ஆயுர்வேத வைத்தியசாலையிலுள்ள கொரோனா சிகிச்சை இடைத்தங்கல் முகாமில் இருந்து சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நிந்தவூர் கடலில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காணப்பட்டது

(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் கடற்கரை பிரதேசத்தில் மீட்கப்பட்ட ஆணின் சடலத்தை அடையாளம் காண்பது தொடர்பில் பொலிஸார் பொதுமக்களின் ஒத்துழைப்பினை கோரியிருந்த நிலையில் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் (17) இரவு குறித்த சடலம் மீட்கப்பட்டு இனங்காணப்படாதிருந்த நிலையில் நேற்று (18) காலை நிந்தவூர் 9 பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஆதம்பாவா நிஹ்மதுல்லா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் சடலம் குறித்து ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் சடலம் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நீதிவானின் வருகையை தொடர்ந்து குறித்த சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குச்சவெளியில் பெண்ணொருவர் வன்புணர்வு; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெண்ணொருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய நபர் ஒருவரை இம்மாதம் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் நேற்று முன்தினம்(17) உத்தரவிட்டார்.

நாவற்சோலை, கும்புறுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நாவற்சோலை பகுதியைச் சேர்ந்த தனிமையில் இருந்த இளம் பெண்ணொருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியதாக தெரிவித்து குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரை கைதுசெய்து பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறையில் அணில், குரங்குகளின் தொல்லை; கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை

அம்பாறை தமன பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் காட்டு அணில் மற்றும் குரங்குகளின் தொல்லைகளினால் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் பலவிதமான அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

மலயாய மற்றும் கல்ஓயா தேசிய வனப்பகுதியிலுள்ள நெல்லிக்காட்டிலிருந்து கூட்டம் கூட்டமாக கிராமத்திற்குள் நுழையும் காட்டு அணில்களும், குரங்குகளும் பயிரிடப்பட்டுள்ள காய்கறிகள் மற்றும் பழமரங்களுக்கு பலத்த சேதத்தை விளைவிப்பதுடன், வீடுகளுக்கு மேலாக பாய்ந்து செல்வதால் வீட்டின் ஓடுகளும் உடைந்து சேதத்திற்குள்ளாகின்றன.

கிராமப்புறங்களுக்குள் கூட்டமாக வரும் குரங்குகள் திறந்துள்ள வீடுகளுக்குள் நுழைந்து சமயலறையிலுள்ள உணவுப்பொருட்களை உண்டு நாசப்படுத்துகின்றன.

தமன பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஹிங்குரான, நெலகம்புர, ஹுனுகொட்டுவ, பாசலபெதச மற்றும் கரலேவ போன்ற கிராமங்களில் பயிர்செய்யப்பட்டுள்ள கொய்யா, வாழை, மா போன்ற பழ மரங்களின் பிஞ்சுகளை கடித்து சேதப்படுத்துவதால் விவசாயிகள் தமது விவசாய முயற்சிகளை தொடர முடியாதுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டு அணில்களையும், குரங்குகளையும் அருகிலுள்ள காட்டுப்பகுதியிலிருந்து சனநடமாட்டம் இல்லாத வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

# அம்பாறையில் காணி உறுதிகள் வழங்கிவைப்பு

அம்பாறை மாவட்டத்தில் காணி உறுதிப்பத்திரமற்ற மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க ஞானப்பிரதீபா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான விமலவீர திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ.டி.வீரசிங்க, கலாநிதி திலக் ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டதுடன், காணியற்ற



மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

# மட்டக்களப்பு கரவெட்டியில் இடம்பெற்ற எம்.ஜி.ஆரின் 105ஆவது பிறந்தநாள் விழா

(மண்முனை நிருபர்)

மருதூர் கோபாலன் ராமச்சந்திரன் எனும் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரனின் 105ஆவது பிறந்தநாள் விழா கரவெட்டி எம்.ஜி.ஆர். நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு,







வவுணதீவு பிரதேசத்தின் கரவெட்டி பலநோக்கு மண்டப வளாகத்தில் நேற்று முன்தினம் (17) பிற்பகல் எம்.ஜி.ஆர். நற்பணி மன்றத் தலைவர் வேலாப்போடி கெங்காதரம் தலைமையில் இடம்பெற்றது.

கொவிட்-19 சூழ்நிலையை கவனத்திற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான மக்கள் பங்குபற்றலுடன் இந்நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

இதன்போது எம்.ஜி.ஆர். பெயர் பொறிக்கப்பட்ட கேக் வெட்டி அனைவருக்கும் பகிர்ந்தளித்து பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 5 வருடங்களாக இந்நற்பணி மன்றமானது எம்.ஜி.ஆரின் ஜனன தினம் மற்றும் சிரார்த்த தினம் போன்ற நாட்களில் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

இந்நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் எஸ். சண்முகராஜா, நற்பணி மன்ற ஸ்தாபகர் ராஜகோபால், மன்றத்தின் நாவற்காடு பிரதேச இணைப்பாளர் தங்கத்துரை, செயலாளர் முத்துலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வின்போது நற்பணி மன்றத்தினால், கரவெட்டி கிராமத்தைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்களுக்கு எழுதுகருவிகள் உள்ளிட்ட அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில், வருகைதந்த கலைஞர்களால் எம்.ஜி.ஆர். பற்றிய உரைகளும், திரைப்படப் பாடல்களும் ஏனைய கலை நிகழ்வுகளும் நிகழ்த்தப்பட்டன. இந்நிகழ்வில் எம்.ஜி.ஆர் நற்பணி மன்ற உறுப்பினர்கள், ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பாரம்பரிய முறைப்படி தைப்பூச நாளில் நெல் வயலிலிருந்து புதிர் எடுத்து வந்து மக்களுக்கு வழங்கும் நிகழ்வு விசேட பூஜையின் பின் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது. (காரைதீவு நிருபர்)

# ‘மாண்டவர் மகத்துவம்’ ஒளிப்பேழை வெளியீடு

(மருதமுனை நிருபர்)



கல்முனைப் பிரதேசத்தில் கலை, இலக்கியத்துறைகளை வளர்த்து தங்களுக்கென தனியிடம் பிடித்து சமூகத்துக்கு முன்மாதிரியாக வாழ்ந்து எம்மை வீட்டுப் பிரிந்த இலக்கிய வாதிகளை நினைவு கூர்ந்து சமகாலத்தில் இருக்கின்றன கலை, இலக்கியவாதிகளால் தொகுத்து வெளியிடப்பட்ட ‘மாண்டவர் மகத்துவம்’ ஒளிப்பேழை வெளியீட்டு நிகழ்வு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.சிவஜோதியின் ஒருங்கிணைப்பில் பிரதேச செயலாளர் ஜே.ஜெலியாகத் அலி தலைமையில் கல்முனை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ச.நவநீதன், உலகக் கவிஞர் சோலைக்கிளி, கவிஞர் மருதமுனை ஹஸன், கவிஞர் விஜிலி, கவிஞர் லாஹிர் கரீம், வீடியோ எடிட்டர் லாஹிர், கவிதாயினி சுல்பிஹா சரீப் ஆசிரியை, கலாசார உத்தியோகத்தர் ஹிபானா, ஓய்வு நிலை ஆசிரியர் குமாயூன், கவிஞர் மாஹிறா, பாடகி எஸ்.ஜெஸ்மின் இஸ்றத் மற்றும் இம்திஸா ஹஸன் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான அமீன் காலமானார்

(சாய்ந்தமருது நிருபர்)



ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளரும் நிந்தவூர் பிரதேசத்தின் முதலாவது ஊடகவியலாளரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான கலாபூஷணம் ஏ.எல்.எம்.அமீன், தனது 77ஆவது வயதில் நேற்று (18) காலமானார்.

கிழக்கிலங்கையின் ஊடகத்துறை முன்னோடியாகத் திகழ்ந்த இவர், 1960ஆம் ஆண்டு தொடக்கம் வீரகேசரி பத்திரிகையின் பிராந்திய செய்தியாளராக நீண்டகாலம் மிகுந்த அர்ப்பணிப்புடன் சிறப்பாக பணியாற்றியிருப்பதுடன், தினபதி, சிந்தாமணி உள்ளிட்ட வேறு சில தேசிய பத்திரிகைகளினதும் செய்தியாளராக செயற்பட்டிருக்கிறார்.

சிரேஷ்ட பத்திரிகையாளர் கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம் மற்றும் மு.கா. ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் செய்தித் தொடர்பாளராக கடமையாற்றிய பத்திரிகையாளர் ஏ.எல்.எம்.நயீம் ஆகியோர் இவரது இளைய சகோதரர்கள் என்பதும் இவர்கள் இருவரும் ஊடகத்துறையில் பிரவேசிப்பதற்கு மூத்த சகோதரரான ஏ.எல்.எம்.அமீனே வழிகாட்டியாக இருந்துள்ளார் என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

சமூக சேவைகளில் கூடிய ஈடுபாடு காட்டி வந்துள்ள இவர், நிந்தவூர் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளராகவும் நிந்தவூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினராகவும் நிந்தவூர் வர்த்தகர் சங்கத்தின் செயலாளராகவும் பொறுப்புகளை வகித்து சமூக மற்றும் பிரதேசம் சார்ந்த பல்வேறு பணிகளை முன்னெடுத்துள்ளார்.

நிந்தவூர் வௌவ்வாலோடை பிரதேசத்தில் மின்சார வசதியை ஏற்படுத்துவதற்கும் நிந்தவூரில் குடிநீருக்கான பாரிய குழாய்நீர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் இவர் பின்புலமாக இருந்து செயற்பட்டுள்ளார்.

நிந்தவூர் மற்றும் காரைதீவு பிரதேசங்களுக்கான கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் இப்பிரதேச பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இவர் அமைச்சர்கள், எம்.பிக்கள் மற்றும் அதிகாரிகளை சிறந்த அணுகுமுறையுடன் நெருங்கி, அவர்களது ஒத்துழைப்புகளை பெற்று, வெற்றிகரமாக அவற்றை நிறைவேற்றி வைப்பதில் வல்லவராக திகழ்ந்துள்ளார்.

இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் கல்முனை மாவட்ட கிளையின் செயலாளராகவும் கல்வித் திணைக்களத்தின் கல்முனை மாவட்ட கடன் வழங்கல் சபையின் உறுப்பினராகவும் நிந்தவூர் பிரதேச குவாஷி நீதிபதியாகவும், நிந்தவூர் பிரதேச ஓய்வூதியர் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்புகளை வகித்து கல்வி, சமூகப் பணிகளை மிகுந்த அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துள்ளார்.

1965ஆம் ஆண்டு நிந்தவூர் எழுத்தாளர் சங்கத்தின் உப தலைவராக செயற்பட்ட இவர், தமிழ் உலகுக்கு புகழ் சேர்க்கும் வகையில் இவ்வூரில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் தமிழ் இலக்கிய பெருவிழா ஒன்றை முன்னின்று நடத்தியுள்ளார்.

எழுத்து, பத்திரிகை, கலை, இலக்கிய துறைகளில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமையை கௌரவித்து 2016ஆம் ஆண்டு கலாசார அமைச்சினால் கலாபூஷண விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை வாகனத் தரிப்பிட சர்ச்சைக்கு பொதுச்சந்தை வர்த்தக சங்கம் விளக்கம்

## ஓரிடத்தில் மட்டும் கட்டணம் செலுத்தமுடியும் என சங்கச் செயலாளர் அறிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை ஸாஹிரா கல்லூரி சந்தி முதல் கல்முனை கடற்கரைப்பள்ளிவாசல் சந்திவரை ஒருவரும், கடற்கரைப்பள்ளி சந்தி முதல் தளவாட்டுவான் சந்திவரை ஒருவரும், கல்முனை பொதுச்சந்தை வாகன தரிப்பிடங்களை ஒருவருமாக குறித்த பிரதேசங்களில் மூவர் வாகனத் தரிப்பிடங்களை குத்தகைக்கு எடுத்திருந்தாலும் அந்த பிரதேசங்களில் ஒருவர் ஒரு நாளில் ஓரிடத்தில் மாத்திரம் தரிப்பிட கட்டணம் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்வது போதுமானதாக தீர்மானம் எடுத்துள்ளதாக கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்கச் செயலாளர் ஏ.எல். கபீர் ஊடக அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கல்முனை மாநகர சபையின் கீழுள்ள பல இடங்களில் வாகனத் தரிப்பிட அறவீடுகள் நடைபெறுவதாக சமூக வலைத்தளங்களில் பரவலான குற்றச்சாட்டுகள் எழுந்த வண்ணம் உள்ளன. கல்முனை மாநகர முதல்வரின் அலுவலகத்தில் கல்முனை மாநகர முதல்வர், ஆணையாளர், கணக்காளர், மாநகர சபை உத்தியோகத்தர்கள், கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க பிரதிநிதிகள், குத்தகைக்காரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பேசி எடுத்த தீர்மானமாகவே அது அமைந்துள்ளது.

அதனடிப்படையில், வாகன சாரதிகள் குறித்த இடங்களில் ஓரிடத்தில் மட்டும் வாகன தரிப்பிட கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் இது தொடர்பில் எழும் முரண்பாடுகளை பற்றி கல்முனை மாநகர சபைக்கு அறிவிக்க முடியும்.

அதனடிப்படையில் முச்சக்கரவண்டிக்கு 20 ரூபாவும், கார், வேன் போன்ற வாகனங்களுக்கு 50 ரூபாவும், கனரக வாகனங்களுக்கு 100 ரூபாவும் அறவிடுவது என்று தீர்மானித்து அதற்கான பொதுவான பற்றுச்சீட்டை கல்முனை மாநகர சபை திகதி, வாகன இலக்கத்துடன் வழங்கக்கூடியதாக வடிவமைத்து கொடுப்பது என்றும், அந்த பற்றுசீட்டில் ஆணையாளர் அல்லது கணக்காளர் கையொப்பம்



இடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அட்டாளைச்சேனையில் பெற்றோல் குண்டுத் தாக்குதல்

## மயிரிழையில் உயிர் தப்பிய நபர்





(மாளிகைக்காடு நிருபர்)

அட்டாளைச்சேனையில் பொறியியலாளர் ஒருவரது வீட்டுக்கு இனந்தெரியாதோரால் பெற்றோல் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலக்கம் 78A, ஒலுவில் வீதி, அட்டாளைச்சேனை-8 எனும் முகவரியில் உள்ள பொறியியலாளராக கடமையாற்றி வரும் அப்துல் மனாப் மபாயிஸ் என்பவரது இல்லத்திற்கு நேற்று (18) அதிகாலை 02 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் பெற்றோல் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, கல் வீசி உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

பொறியியலாளராக கடமையாற்றி வரும் அப்துல் மனாப் மபாயிஸ் என்பவரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலால் அவ்விடத்தில் தங்கியிருந்த அவரின் சகோதரர்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். வீட்டின் உரிமையாளரான மபாயிஸ் உடனான தனிப்பட்ட தகராறுகளே சம்பவத்துக்கு காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

# அட்டாளைச்சேனை வெள்ளக்கல் விவசாய அமைப்பினரை சந்தித்தார் முஷாரப் எம்.பி



(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை வெள்ளக்கல் தோட்ட விவசாய அமைப்பினரை, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப், கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் விவசாயிகளுக்கு மிக அத்தியாவசியத் தேவையாக இருக்கின்ற வெள்ளக்கல் தோட்ட சிறிய பாலம் நிர்மாணம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு, குறித்த பாலத்தினை நிர்மாணம் செய்து தருமாறு விவசாயிகளால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

இந்த பாலத்தை நிர்மாணம் செய்து தருவதற்கான ஏதுக்களை உருவாக்கி, அதனை நிர்மாணித்துத் தருவதற்கான முயற்சிகளை எடுப்பதாக, நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் விவசாயிகளிடம் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை ஆலங்குளம் வெள்ளக்கல் தோட்டத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பை, அட்டாளைச்சேனை பிரதேசத்தின் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளரான எஸ்.எம்.அறூஸ் ஏற்பாடு செய்திருந்தார்.

# மட்டு. சமிளையடிவட்டை வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்றுப் பிரதேச சபைக்குட்பட்ட சமிளையடிவட்டை வீதி மிக நீண்டகாலமாக குண்டும் குழியுமாக கிடப்பதனால் அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த சிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அவ்வீதியைப் பயன்படுத்தும் பல நூற்றுக்கணக்கான விவசாயிகள், பொதுமக்கள், மாணவர்கள், அரச கடமைகளுக்குச் செல்லும் உத்தியோகத்தர்களென பலதரப்பட்டோரும் போக்குவரத்து செய்யமுடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மழைக்காலங்களில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் அவ்வீதியை மக்கள் பயன்படுத்தி வருவதாகவும், இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும், கருத்திற்கொண்டு மிகவிரைவில் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# நற்பிட்டிமுனை கிரிக்கெட் கழகத்தின் வருடாந்த வர்ண இரவு நிகழ்ச்சி





நற்பிட்டிமுனை பிரதேச விளையாட்டு கழகங்களில் ஒன்றான நற்பிட்டிமுனை கிரிக்கெட் கழகத்தின் வருடாந்த வர்ண இரவுசிறப்பு நிகழ்ச்சியும், வீரர்கள் கௌரவிப்பும், விருது வழங்கும் நிகழ்வும் கழகத்தின் தலைவர் ஆசிரியர் நிலாஸ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக மயோன் குரூப் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கல்முனை தொகுதி பொறுப்பாளருமான றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், வீரர்களுக்கு விருதுகளையும் வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச பிரமுகர்களும், கழக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# இலங்கை அரசின் சேதனப்பசளை குறளிவித்தையால் விவசாயிகள் பாதிப்பை வெளிக்காட்டியதே கறுப்புப்பொங்கல்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவிப்பு



(வீரமுனை நிருபர்)

பெரும்போக நெல் விளைச்சல் இலங்கை அரசின் சேதனப் பசளை என்ற குறளிவித்தை திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தைப்பொங்கல் விழாவை துக்க தின கறுப்பு பொங்கல் நிகழ்வாக, கவனயீர்ப்பு பொங்கலை மட்டக்களப்பில் நடத்தினோம் என மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஊடகச் செயலாளரும், பட்டிருப்பு தொகுதி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பின் பொங்கல் விழாவுக்கு ஏன் கறுப்பு பொங்கல் என பெயரிடப்பட்டது என ஊடகவியலாளர் கேட்டபோது அதற்கு பதிலளிக்கும்வகையில் மேலும் கூறுகையில்,

தற்போதைய அரசு பதவியேற்று ஒரு வருடங்கள் கடந்து இரண்டாவது வருடத்தை எட்டுகிறது. இந்த அரசு பதவியேற்ற காலம் தொடக்கம் இன்றுவரை மக்களின் வாழ்வு பல பிரச்சினைகளை சந்தித்துள்ளது. பொருளாதார விலை நெருக்கடி, பொருட்களின் விலையேற்றம், தாய் சேய் நலனில் போசாக்கான பால்மா வாங்க முடியாத திண்டாட்டம், எரிவாயு சிலிண்டர்கள் இல்லை, அப்படி வாங்கினால் வெடித்து சிதறும் அபாயம், மின்சாரத் தடைகள், சாதாரண பாண், பருப்பு, மா, சீனி, அரிசி போன்ற அத்தியாவசிய பொருட்களை வாங்க முடியாத விலையேற்றம். அதைவிட குறித்த பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏழைகளின் வயிற்றில் நெருப்பெரியும் நிலையினை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான அவலங்களை பார்த்துக்கொண்டு ஒரு பொங்கல் விழாவை சிறப்பாக நடத்த முடியாது. அதேவேளை, பொங்கல் பண்டிகையை கைவிடவும் முடியாது. இல்லங்களில் அவரவர் எப்படியோ பொங்கலை ஓரளவு சிறப்பாக கொண்டாடினாலும் ஒரு பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சி அதனை சிறப்பாக வெளிக்காட்ட முடியாது என்பதை எமது மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆராய்ந்து இதனை அரசாங்கத்திற்கு ஒரு எதிர்ப்பு நிகழ்வாகவும் துக்க நிகழ்வாகவும் வெளிக்காட்ட வேண்டும் என்ற முடிவை எடுத்தோம்.

துக்கத்துக்கான நிறம் கறுப்பு, எதிர்ப்புக்கான நிறமும் கறுப்பு என்பதால் கறுப்பு ஆடைகளை இயன்றவரை அணிவது எனவும் அந்த கறுப்பு நிறத்தை மையப்படுத்தியே "கறுப்பு பொங்கல்" என இம்முறை பெயரிட்டு, உழவர்களுக்கும் மக்களுக்கும் விவசாயிகளுக்கும் திருப்தி இல்லாத நிலையினை அரசாங்கம் ஏற்படுத்தி விட்டது என்பதை இதன் மூலம் வெளிக்காட்டினோம்.

உண்மையில், ஏனைய மாவட்டங்களை விடவும் மட்டக்களப்பு மாவட்டம் நெல் உற்பத்திக்கு பெயர் போன ஒரு மாவட்டம். பெரும்போக நெற் செய்கையில் ஏக்கருக்கு நாற்பது மூடை தொடக்கம் அறுபது மூடைகளை விளைச்சலாக பெற்ற விவசாயிகள் பலர் மட்டக்களப்பில் உள்ளனர்.

ஆனால், இந்த வருடம் சேதன உரம் பாவித்தமையால் ஒரு ஏக்கருக்கு பத்து மூடைகளை பெற முடியாத நிலையுள்ளது. பொங்கலுக்காக மட்டுமல்ல வாழ்வாதாரத்திற்காகவும் பால் தரும் பசு, எருமை மாடுகள் ஏறக்குறைய மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றரை இலட்சம் உள்ளன. அந்த மாடுகளுக்கு மேய்ச்சல் தரைகளாக ஒதுக்கப்பட்ட மாதவனை, மயிலத்தமடு, கெவிளியாமடு பிரதேசங்களில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை குடியேற்றி மாடுகளின் மேய்ச்சல் தரை அபகரிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மண் வளம் வெளிநாடுகளுக்கு ஆளுந் தரப்பு அரசியல்வாதிகளின் துணையுடன் விற்கப்படுகிறது. இலங்கையில் வறுமை நிலையில் உள்ள மாவட்டமாக மட்டக்களப்பு இனம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறான பெரும் அவலங்கள் ஏனைய மாவட்டங்களை விட மட்டக்களப்பில் மிக கூடுதலாக இடம்பெறுகிறது. இவைகளை தடுக்கவும் உண்மைகளை உலகம் உணரவுமே இம்முறை கறுப்பு பொங்கல் என அடையாளமிட்டு ஒரு எதிர்ப்பு நிகழ்வாகவே இதனை செய்தோம்.

பேரணி, உண்ணாவிரதம், கடையடைப்பு, ஹர்த்தால், ஆர்ப்பாட்டம், கறுப்புபட்டி போராட்டம், மௌன ஊர்வலம், பகிஷ்கரிப்பு, பொங்குதமிழ், எழுகதமிழ், வீதிமறியல் போராட்டம், சத்தியாக்கிரகம் என வெவ்வேறு பெயர் வடிவங்களில் பல எதிர்ப்புகளை காட்டிய தமிழ் தேசியம் இந்த வருட பொங்கல் திருநாளை "கறுப்பு பொங்கல்" என கவனயீர்ப்பு பொங்கல் நிகழ்வாக நடத்தியுள்ளது.

கறுப்பு பொங்கல் என்ற பெயரே இன்று இலங்கை அரசாங்கத்திற்கு மட்டுமல்ல உலகத்திற்கும் ஒரு செய்தியை சொல்லியுள்ளது. அது என்னவெனில், தமிழ் மக்கள் நிம்மதியற்று வாழ்கிறார்கள், வருடா வருடம் தமிழர் திருநாளாக கொண்டாடிய தமிழ்த் தேசிய பொங்கல் விழா இம்முறை அரசின் நிலைமையால் கறுப்பு பொங்கலாக எதிர்ப்பு வெளிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது அரசாங்கத்தின் சேதனப்பசளை என்ற குறளி வித்தை பயனில்லாத வித்தை என்பதை புரிய வைத்துள்ளது என்பதே உண்மை எனவும் மேலும் கூறினார்.

LK Newspapers Viber Community

# தலதா மாளிகைக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக நகர்ப்புற வாகன நிறுத்தப் பூங்கா பிரதமரினால் திறந்துவைப்பு

தலதா மாளிகைக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக நிர்மாணிக்கப்பட்ட 'டொம்லின் பூங்கா' மற்றும் 'சஹஸ் உயன' நகர்ப்புற வாகன நிறுத்தப் பூங்கா ஆகியவை அண்மையில் (16) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்துவைக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின்கீழ் மூலோபாய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் ஊடாக இந்தப் பூங்காக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

டொம்லின் பூங்காவின் நினைவுப்பலகையை பிரதமர் திறந்துவைத்தார். பிரதமர் அங்கு கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்டதுடன், திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டத்தின் முதன்மை ஆலோசகர் எம்.எம்.ஜே.இ.ஜி.பண்டார விளக்கமளித்தார்.



உலக வங்கியின் நிதி உதவியின்கீழ் செலவான தொகை 374 மில்லியன் ரூபாவாகும்.

அதனைத் தொடர்ந்து சஹஸ் உயன நகர்ப்புற வாகன நிறுத்தப் பூங்காவிற்கு விஜயம் செய்த பிரதமர் அதன் நினைவுப்பலகையை திறந்துவைத்தார். திறந்தவெளி அரங்கு, கைவினைப்பொருட்கள் கட்டிடத்தொகுதி, உணவருந்தும் பகுதி மற்றும் குழந்தைகள் பூங்கா ஆகியவற்றைக்கொண்ட இந்த பூங்காவில் ஓய்வெடுக்கும் பகுதியும் அமைக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதி உதவியின்கீழ் 531 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த நகர்ப்புற வாகன நிறுத்துமிட பூங்கா ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.





யாத்திரிகர்கள் இளைப்பாறுவதற்கு அறைகள், சுகாதார வசதிகள் மற்றும் 16 விற்பனை நிலையங்களைக்கொண்ட டொம்லின் பூங்காவை நிர்மாணிப்பதற்காக

# ஐரோப்பிய ஒன்றியத் தூதுவருடன் ரிஷாட் எம்.பி. சந்திப்பு!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் செய்பி (Denis Chaibi) ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்குமான நீண்டகால உறவு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் இச்சந்திப்பின்போது நினைவுபடுத்தியதுடன், கடந்த காலங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவியதற்காக தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"பயங்கரவாதத் தடைச்சட்டம் மூலம் கைது செய்யப்பட்டுள்ள சிறைக் கைதிகளுடைய விடுதலை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் அதிக அக்கறை செலுத்துகின்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு சிறையிலிருக்கின்ற தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பலர் தமது கைதை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்குக்கூட பொருளாதார வசதிகளின்றி மிகவும் சிரமப்படுகின்றனர். பொருளாதார ரீதியில் அவர்களது குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. இதனால் அவர்களுக்கான நியாயம் கிடைப்பது கூட அரிதாகவுள்ளது. எனவே, கடந்த காலங்களைபோன்று ஐரோப்பிய ஒன்றியம் பாதிக்கப்பட்டுள்ள கைதிகளின் நலனுக்கு தமது ஒத்துழைப்பை தொடர்ந்தும் வழங்க வேண்டும்'' எனவும் அவர் வேண்டிக்கொண்டார்.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் உட்பட இன்னும் பல அறிஞர்கள், புத்திஜீவிகள்,



மாணவர்கள் என பலரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருப்பதையும் ரிஷாட் பதியுதீன் எம்.பி. தூதுவரிடம் சுட்டிக்காட்டினார்.

இதன்போது, கருத்து தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் செய்பி, ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்பில் நீதியமைச்சின் ஊடாக நீதிமன்றங்களின் திறனை அதிகபடுக்கும் மூன்று வருட செயற்றிட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், ரிஷாட் பதியுதீன் எம்.பியின் கைது தொடர்பிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் செய்பி கேட்டறிந்துகொண்டார்.

## உள்நாட்டுத் துப்பாக்கியுடன் விவசாயி ஒருவர் கைது

மெதகம பொலிஸாரால் மங்கின் கெந்தவின்ன பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

45 வயதுடைய விவசாயி ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது விளைச்சல் நிலத்தை காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக இந்த துப்பாக்கியை பயன்படுத்துவதற்காக கையில் வைத்திருந்ததாக அவர் பொலிஸாருக்கு தெரிவித்தார்.

## எலிக்காய்ச்சலினால் ஒருவர் உயிரிழப்பு

(செலும் குணதிலக்க)

மொனராகலை மாவட்ட பொது வைத்திய சாலையில் சிகிச்சைபெற்றுவந்த நபரொருவர் எலிக்காய்ச்சலினால் நேற்று முன்தினம் (17) உயிரிழந்துள்ளதாக மொனராகலை மருத்துவமனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொவிந்துபுர. புத்தம குருலன்முல்ல டீ.எம்.திலகரத்ன (56 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபர் காய்ச்சலின் காரணமாக சியம்பலாண்டுவ மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வந்த நிலையில் மொனராகலை வைத்தியசாலைக்கு இடமாற்றம் செயயப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து அவர் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைபெற்று வந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கொவிந்துபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மலையகத்தில் அழிந்துபோன சைவப் பண்பாட்டு முறைகளை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும்

## உலக சைவ தமிழ் ஒன்றியம் வலியுறுத்து

(இக்பால் அலி)

மலையகத்தில் அழிந்துபோன சைவப் பண்பாட்டு முறைகளை மீளவும் கட்டியெழுப்புகின்ற பணிகளை மேற்கொள்ளவுள்ளதாக உலக சைவ தமிழ் ஒன்றியத்தின் தலைவர் நவரட்ணம் இளங்கோ தெரிவித்தார்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வு முருகமலை ஸ்ரீமுருகன் வேதஸ்தான லட்சுமி முத்தையா கல்யாண மண்டபத்தில் கண்டி இந்து சீனியர் கல்லூரியின் அதிபர் சிவக்குமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்த உலக சைவ தமிழ் ஒன்றியத்தின் தலைவர் நவரட்ணம் இளங்கோ இவ்வாறு இதனைத் தெரிவித்தார்

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சைவ தமிழ் ஒன்றியம் என்பது இலங்கையில் அழிந்துபோன சைவ முறைகளை மீண்டும் உயிர்ப்பிப்பதற்காக தோற்றிவிக்கப்பட்டதாகும். கோயிலைச் சுற்றித்தான் அந்தக் காலத்தில் மக்கள் வாழந்தார்கள். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறுவார்கள். கோயில் உள்ள ஊரில்தான் தமிழ் சமூகம் வாழ்ந்தது.

நூலகம் இருந்தது. நூதனசாலை இருந்தது. எல்லாம் கோயிலைச் சுற்றித்தான் இருந்தது. ஏதோ ஒரு காரணத்திற்காக மக்கள் கோயிலுக்கு வந்தேயாக வேண்டும்.

குருக்களிடம் தங்களுடைய குறை நிறைகளைப் பேசுவதற்கு திருப்தி அடைந்துகொள்வதற்கு ஆதி காலத்திலிருந்து வளர்ச்சியடைந்தது. இதைக் குழப்பியது வெள்ளையர்களேயாகும்.

யாழ்ப்பாணத்தில் கருங்கல்லால் கட்டப்பட்ட 35 கோயில்கள் இருந்தன. அந்த கோயில்களில் உள்ள கல்லை உடைத்துச் சென்று யாழ்ப்பாணக்





கோட்டைக்குள் கட்டி வைத்திருக்கிறார்கள். இந்த கற்கள் எல்லாம் வெளியே இருந்து வரவில்லை. கோயில்களை இடித்த கற்கள்தான். இப்படி உடைத்துத்தான் வெற்றிகண்டு இருக்கின்றார்கள். அந்த வெற்றியில் இன்னுமொரு பணிதான் மலையகத்திலும் மற்றும் வேறு சில பகுதிகளிலும் மதமாற்றத்திற்காக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதனைப் பணத்தைக்கொண்டு செய்கின்றார்கள். முன்பள்ளிப் பாடசாலைகள் கிறிஸ்தவ தேவாலயத்தில் வைத்துத்தான் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. அந்தப் பிள்ளைகளுக்கு முதல் சொல்லிக் கொடுப்பது தியானமாகும். எவ்வாறு இறைவனுக்கு நன்றி தெரிவித்தல் என்ற பாடம். எப்படி பைபிளைப் படிப்பிப்பது என்று மூன்று வயதில் இருந்தே சின்னப்பிள்ளைகளை படிப்படியாக மதமாற்றத்திற்கு உட்படுத்தி வருகின்றார்கள்.

இது ஒரு மோசமான நிலைமையாகும். பிள்ளைகள் சைவத்திலுள்ள ஒரு தேவாரத்தையும் படிப்பதில்லை. 5, 6, 7களில் முற்று முழுதாகவே இன்னுமொரு மதத்திற்கு சென்று விடுகின்றார்கள். அந்தளவுக்கு மிகப்பெரிய நச்சு விதைகளை ஊட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்காக நாங்கள் அவர்களை குறை கூறுவது அவசியமில்லை.

எங்களுடைய விடுபட்டுப்போன வழிபாட்டு முறைகளை திருப்பி எங்களிடத்தில் கொண்டு வந்தால் மிகப்பெரிய உயர்ச்சியான உயரத்திற்கு கொண்டுசெல்ல முடியும். மலையகத்திலுள்ள கோயில்கள் எல்லாம் மிகச் சிரமத்திற்கு மத்தியிலேயே பராமரித்து வருகின்றார்கள். ஆனால், அவர்களுக்கு பக்தி இருக்கின்றது. எல்லாம் இருந்தும் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யக்கூடிய ஆட்கள் இல்லை. இதை இப்படியே விட்டால் இனி ஒரு காலமும் மீட்டெடுக்க முடியாது. இது இப்படி அழிந்து போய்விடும். உலகத் தமிழ் ஒன்றியம் இதை முக்கியமான பணியாக எடுத்து செயற்பட்டு வருகின்றோம்.

குறிப்பாக, மலையக மக்கள் மதமாற்றத்திற்கான மாயை வலையில் விழுந்து அதுதான் சரி என்று போகின்றார்கள். அவர்கள் விழுவதற்கான காரணம் பொருளாதார காரணங்களேயாகும். இந்து சமயம் இதுவரையிலும் என்ன செய்தது என்று கேட்கிறார்கள். நாம் உங்களுக்கு இவ்வளவு உதவி செய்கின்றோம். நீங்கள் வர முடியுமா என்று கேட்கின்றனர். அவர்கள் அதற்கு ஏதோ கிடைக்கிறது. ஏதாவது செய்து வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும் என்ற வகையில் இணைந்துகொள்கின்றனர். இயேசுவை ஒப்புக்கொள்கின்றீர்களா எனக் கேட்டவுடன் எல்லோரும் கையைத் தூக்குகின்றனர்.

நாங்கள் பிறந்தவுடன் இந்து சமயத்தை ஒப்புக்கொண்டவர்கள். கடவுளின் இராச்சியம் உன்னிடம் உண்டு. பால்மாவுக்கும் கோதுமாவுக்கும் மதமாற்றம் பெற்றுச் செல்லுகின்றனர். அவர்கள் பைபிளைப் படிக்கவில்லை. இங்கு இருக்கும்போது பவகத் கீதையைப் படித்தார்களா? எதற்கு சனிக்கிழமை விரதம் பிடிக்கிறார் என ஒருவரிடம் கேட்டேன். அம்மா சொன்னார் பிடிக்கச் சொல்லி. இதுதான் எங்களுடைய கேவலமான நிலமை எல்லா இடத்திலும் இதுதான் நடக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது




### தலைமன்னார்

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள வீதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 01 கிலோ 20 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் மோட்டார்சைக்கிளில் பயணித்த நபரொருவரும் பெண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரும் 55 வயதுடைய பெண்ணொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### ஈரட்டிபெரியகுளம்

ஈரட்பெரியகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 06 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெல்லப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### அநுராதபுரம்

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனாநாயக்க மாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் அநுராதபுரம் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 06 கிராம் 408 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருகொடவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 06 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டு, கிராண்ட்பாஸ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ஒருகொடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பேலியகொட

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்கில தோட்டம் பிரதேசத்தில் பேலியகொட மேல்மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 02 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்குளி, கிராண்ட்பாஸ் மற்றும் தெமட்டகொட ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற சொத்துகள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் என்பது சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

திருடப்பட்ட தங்கச்சங்கிலி, 04 கைத் தொலைபேசிகள் என்பன கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவர் மீது மாலிகாகந்த நீதவான் நீதிமன்றத்தினால் பிடியாணையொன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# அக்கரப்பத்தனை சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று

அக்கரப்பத்தனை நகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று (19ஆம் திகதி) காலை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் நடைபெறும் இக்கும்பாபிஷேக விழாவின் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெற்று எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சுபநேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. மஹியம் அடியார்களுக்கு விபூதி பிரசாதம் மற்றும் அன்னதானம் என்பன வழங்கப்படும். சகல கிரியைகளையும் பிரதிஷ்டா பிரதமகுரு யாழ்ப்பாணம் பருத்தித்துறை சிவஸ்ரீ. சிவகுகேந்திரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

விநாயகப்பெருமானின் அருளைப் பெற்றுக் கொள்ள அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றனர்.

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவச சூரியக் கலங்களை வழங்க நடவடிக்கை!

(கல்லடி நிருபர்)

குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவச சூரியக் கலங்களை வழங்க மின்சக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான பிரேரணைக்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளதாகவும், அடுத்த வாரம் முதல் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே அறிவித்துள்ளார்.

மேலும், சுமார் 5 மின்கலங்களைப் பெறுபவர்களுக்கு 1500 ரூபா வழங்கப்படும். அவர்கள் சுமார் 10 வருடங்களின் பின்னர் 10,000 ரூபாவைப் பெற்றுக்கொள்வர்.

இந்தச் சூரியக் கலங்கள் மதவழிபாட்டுத் தலங்களிலும் நிறுவப்படவுள்ளன. அத்தோடு ஒரு கிராமசேவையாளர் பிரிவுக்கு ஒரு வீட்டில் சூரியமின் உற்பத்திக் கலங்களை நிறுவுவதன் மூலம் இந்த வேலைத்திட்டம் ஆரம்பித்துவைக்கப்படும். அதாவது திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் 14000 சூரியக் கலங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

LK Newspapers Viber Community

# உலக செய்திகள்

## மலேஷியா பத்து மலை முருகன் கோவில் தைப்பூசத் திருவிழா



கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக மலேஷியாவின் பத்து மலையில் அமைந்துள்ள முருகன் கோவிலில் தைப்பூசத் திருவிழா எளிமையாக கொண்டாடப்பட்டது.

கடுமையான கோவிட் கெடுபிடிகளுக்கு மத்தியில் கோவிலுக்குள் பக்தர்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில், தலையில் பால் குடம் ஏந்தி நடந்து வந்த பக்தர்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றினர்.

கோவில் அருகே உள்ள நதிக்கரையில் முருகப்பெருமானுக்கு படையலிட்டு பக்தர்கள் வழிபட்ட நிலையில், சில பக்தர்கள் மொட்டையடித்து நேர்த்திக்கடனை நிறைவேற்றினர்.

## ஆஸி. கடலில் தென்பட்ட 'பிளங்கெட் ஒக்டோபஸ்'



அவுஸ்திரேலிய கடற்பரப்பிலுள்ள பவளத்திட்டுகளுக்கு இடையே அரிய வகை பிளங்கெட் (Blanket) ஒக்டோபஸ் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பவளப்பாறைகளுக்கு அருகே வாழும் இவ்வகை ஒக்டோபஸின் கைகளை சுற்றி போர்வை போல் தோல் படர்ந்துள்ளதால் இவை Blanket Octopus என அழைக்கப்படுகின்றன.

ஆண் ஒக்டோபஸ் இரண்டரை சென்றிமீற்றர் நீளம் மட்டுமே வளரக்கூடிய நிலையில், பெண் ஒக்டோபஸோ 6 அடி நீளம் வரை வளரும். அதாவது ஆண் ஒக்டோபஸை விட பெண் ஒக்டோபஸ் 40,000 மடங்கு எடை அதிகமாக இருக்கும்.

செம்மஞ்சள் (ஓரெஞ்ச்) நிறத்தில் கண்ணாடி போல் மின்னும் இந்த பெண் ஒக்டோபஸின் அழகில் மயங்கி ஆண் ஒக்டோபஸ் இனச்சேர்க்கையில் ஈடுபடும். அதன் பின் ஆண் ஒக்டோபஸ் சோர்வடைந்து உடனடியாக உயிரிழந்துவிடும்.

பெண் ஒக்டோபஸ் ஒரு இலட்சம் முட்டைகள் வரை இடும். எலியட் தீவு அருகே கடல்வாழ் உயிரினங்களை படம் பிடித்து கொண்டிருந்த பெண் புகைப்படக் கலைஞர் ஒருவர் இந்த பிளங்கெட் ஒக்டோபஸை வீடியோ எடுத்து இணையத்தில் பதிவேற்றியுள்ளார்.

## பனிப்போர் மனப்பான்மையை உலகம் கைவிட வேண்டும்

### சீன ஜனாதிபதி வலியுறுத்து



உலகம் பனிப்போர் மனப்பான்மையை கைவிட்டு, அமைதி மற்றும் பரஸ்பர வெற்றி நோக்கி பயணிக்க வேண்டும், என சீன ஜனாதிபதி சி ஜின்பிங் வலியுறுத்தியுள்ளார்.

உலக பொருளாதார அமைப்பின் மாநாட்டில் காணொளி மூலம் பங்கேற்று பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

''பிரத்தியேக சிறிய குழு போல் இயங்கும் சில நாடுகள், உலகை கட்டுப்படுத்துவதாக குற்றம்சாட்டிய சீன ஜனாதிபதி, மேலாதிக்கம் மற்றும் மோதல் போக்கு அதிகரித்திருப்பதாகவும் ஆனால் இவை பிரச்சினைகளுக்கு தீர்வு தராது'' என்றும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் சமீபத்திய செயற்பாடுகளால் இருநாடுகள் இடையே மோதல் போக்கு அதிகரித்துவரும் நிலையில், சி ஜின்பிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## அபுதாபி ட்ரோன் தாக்குதல்: ஐ.நா. கடும் கண்டனம்

# "வான் தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும்"

### ஐக்கிய அரபு இராச்சியம் எச்சரிக்கை

''சர்வதேச சந்தையில் 7 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு மசகு எண்ணெய் விலை உயர்வு அபாயம்''



ஐக்கிய அரபு அமீரகத் தலைநகர் அபுதாபியில் ஆளில்லா ட்ரோன் விமானம் மூலம் நிகழ்த்தப்பட்ட வான்வழித் தாக்குதலுக்கு ஐ.நா.கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு ஹவுதி கிளர்ச்சி அமைப்பு பொறுப்பேற்றுள்ள நிலையில் இச்சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள ஐ.நா. பொதுச்செயலாளர் அண்டோனியோ குட்டரெஸ், ''அனைத்து தரப்பினரும் அதிகபட்ச கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டும்'' என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தலைநகர் அபுதாபியில் ஹவுதி கிளர்ச்சியாளர்களால் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என ஐக்கிய அரபு இராச்சியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

**மசகு எண்ணெய் விலை உயர்வு அபாயம்**

சர்வதேச சந்தையில் கடந்த 7 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு மசகு எண்ணெய் விலை உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் இந்தியாவுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட ட்ரோன் தாக்குதலில் அபுதாபி விமான நிலையம் அருகேயுள்ள முசாஃபா பகுதியில் செயற்பட்டு வரும் எண்ணெய் நிறுவனமான ADNOCஇல் மூன்று எண்ணெய்த் தாங்கிகள் தீப்பற்றி வெடித்துச் சிதறியுள்ளன.

இந்நிலையில் மசகு எண்ணெய் விநியோகம் பாதிக்கப்படும் என்ற அச்சம் சர்வதேச ரீதியில் மேலோங்கியுள்ளது. மசகு எண்ணெய் கப்பல்கள் பாதுகாப்பாக செல்வதில் தடை ஏற்படலாம் என்று சர்வதேச சந்தையில் ஐயம் ஏற்பட்டிருக்கிறது.

அபுதாபி விமான நிலையப் பகுதிக்கு அருகே உள்ள தேசிய எண்ணெய் நிறுவனத்தை குறிவைத்து நிகழ்த்தப்பட்ட இந்த தாக்குதலில் இரண்டு இந்தியர்கள் மற்றும் பாகிஸ்தானியர் ஒருவர் உட்பட 3 பேர் உயிரிழந்ததுடன் 6 பேர் படுகாயமடைந்தனர்.

அமீரகத்தின் முக்கிய இடங்களை குறி வைத்து வெற்றிகரமாக தாக்குதல் நடத்தியுள்ளதாக ஹவுதி கிளர்ச்சிப் படையின் செய்தித் தொடர்பாளர் Yahya Saree தெரிவித்துள்ள நிலையில், அமீரக மண்ணில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலுக்கு காரணமானவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லாஹ் பின் சையித் அல் நயான் எச்சரித்துள்ளார்.

இதற்கிடையே ஹவுதி படைக்கு சொந்தமான 8 ட்ரோன்கள் இடைமறித்து அழிக்கப்பட்டதாக ஐக்கிய அரபு அமீரகம் தெரிவித்துள்ளது.

யேமனில் ஈரானின் உதவி பெறும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும், ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஆதரவுடன் இயங்கும் யேமன் அரசுக்கும் இடையே இடம்பெற்றுவரும் உள்நாட்டு போர் காரணமாக பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதுடன் கடுமையான நிதி நெருக்கடி மற்றும் பஞ்சத்துக்கு யேமன் தள்ளப்பட்டுள்ளது.

## அபுதாபி வான் தாக்குதலுக்கு பதிலடி; யேமனில் சவூதி கூட்டுப்படை தாக்குதல்

### 14 பேர் உயிரிழப்பு



யேமனில் சவூதி கூட்டுப்படைகள் நடத்திய தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அபுதாபியில் ஹவுதி கிளர்ச்சியார்கள் நடத்திய ட்ரோன் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சவூதி கூட்டுப்படைகள் யேமனின் சனா நகரில் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் 14பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால், 20 பேர் உயிரிழந்ததாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இது தற்காப்புக்காக நடத்தப்பட்ட தாக்குதல் என சவூதி கூட்டுப்படைகள் தெரிவித்துள்ளன.

## நாகையிலிருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்த முயற்சி; தமிழகம் உட்பட 3 மாநிலங்களைச் சேர்ந்த 9 பேர் கைது

### பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் சர்வதேச மதிப்பு ஒரு கோடி என பொலிஸார் தெரிவிப்பு



நாகையிலிருந்து படகு மூலம் இலங்கைக்கு கடத்த முயன்ற ஒரு கோடி ரூபா மதிப்புள்ள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா ஆகிய 3 மாநில கடத்தல் கும்பலை சேர்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகை மாவட்டம் கோடியக்கரையிலிருந்து சர்வதேச கடத்தல் கும்பலொன்று இலங்கைக்கு படகு மூலம் கஞ்சா கடத்தலிருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து நாகை மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் ஜவகர், கஞ்சா கடத்தல் கும்பலை பிடிக்க தனிப்படை அமைத்து உத்தரவிட்டார். தனிப்படையினர் நாகப்பட்டினம், வேதாரண்யம், கோடியக்கரை உள்ளிட்ட கடலோர பகுதிகளில் கண்காணிப்பை பலப்படுத்தினர். நேற்றுமுன்தினம் இரவு இரு கார்களில் வந்த நபர்களை தனிப்படை பொலிஸார் வேதாரண்யம் அடுத்த புதுப்பள்ளி அருகே மடக்கிப்பிடித்தனர். காரை சோதனையிட்டபோது காரில் ஒரு கோடி ரூபா மதிப்புள்ள 170 கிலோ கஞ்சா பொதிகள் கடத்தி வரப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து காரிலிருந்த ஆந்திரா, கேரளா மற்றும் நாகை மாவட்டம் வேட்டைக்காரணி குருப்பை சேர்ந்தவர்கள் என 3 மாநில கஞ்சா கடத்தல் கும்பலை சேர்ந்த 9 பேரை தனிப்படை பொலிஸார் கைது செய்தனர்.

கஞ்சா கடத்த பயன்படுத்திய 2 சொகுசு கார்களையும் பறிமுதல் செய்த பொலிஸார் கைது செய்யப்பட்ட 9 பேரையும் நாகை, வெளிப்பாளையம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணை மேற்கொண்டனர். முதற்கட்ட விசாரணையில் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்திலிருந்து கஞ்சா பொதிகள் கார் மூலம் வேதாரண்யத்திற்கு கடத்தி வரப்பட்டதாகவும் பின்னர் படகு மூலம் இலங்கைக்கு அதனை கடத்திச் செல்ல திட்டமிட்டிருந்ததும் தெரியவந்துள்ளது. கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் சர்வதேச மதிப்பு ஒரு கோடி ரூபாவுக்கு மேல் இருக்கும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கஞ்சா கடத்தலில் வேறு யாருக்கும் தொடர்புள்ளதா என்பது குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## மொரோக்கோவில் படகு விபத்து

### 43 பேர் உயிரிழப்பு: 10 பேர் உயிருடன் மீட்பு

மொரோக்கோவின் டர்பயா கடல் பகுதியில் படகு கவிழ்ந்ததில் 3 குழந்தைகள் உட்பட 43 அகதிகள் உயிரிழந்துள்ளனர். இருவரது உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளன. ஏனையோரின் உடலை தேடும் பணி நடைபெற்றுவருகின்றது.

இந்த படகு விபத்தில் 10 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். டர்பயா நகரிலிருந்து கேனரி தீவுகளுக்கு அழைத்துச் சென்றபோது இந்த சம்பவம் நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தனுஷ் - ஐஸ்வர்யா விவாகரத்து




நடிகர் தனுஷ் அவரது மனைவி ஐஸ்வர்யாவை விட்டு பிரிவதாக அறிவித்துள்ளார். இதனை ஐஸ்வர்யாவும் உறுதிசெய்துள்ளார்.

கோலிவூட்டின் முன்னணி நடிகர்களில் ஒருவர் தனுஷ். இயக்குநர் கஸ்தூரி ராஜாவின் இளைய மகனான இவர், தன் 16 வயதில் நடிக்க வந்தார். 2004இல் ரஜினியின் மூத்த மகள் ஐஸ்வர்யாவை திருமணம் செய்துகொண்டார்.

இவர்களுக்கு யாத்ரா, லிங்கா என இரண்டு மகன்கள் உள்ளனர். பொலிவூட், ஹொலிவூட், தற்போது தெலுங்கு என ஒரே நேரத்தில் பன்மொழிகளில் நடித்து வருகிறார். நடிகராக மட்டுமின்றி, பாடகர், தயாரிப்பாளர் மற்றும் இயக்குநராக வலம் வரும் தனுஷ், ரஜினி நடித்த 'காலா' படத்தையும் தயாரித்திருந்தார்.

சமீபத்தில் ரஜினி நடிக்கும் படத்தை தனுஷ் இயக்கப் போவதாகவும் செய்திகள் உலா வந்தன. இந்நிலையில், திருமணமாகி 18 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் மனைவி ஐஸ்வர்யாவை பிரிவதாக தனுஷ் அறிவித்துள்ளார். தனுஷ் வெளியிட்ட அறிவிப்பில்,

''18 ஆண்டுகளாக நண்பர்களாக, துணையாக, பெற்றோர்களாக வாழ்ந்தோம். தற்போது நாங்கள் ஒன்றாக பிரியவுள்ளோம். எங்களை நாங்கள் புரிந்துகொள்ள இந்த பிரிவை ஏற்படுத்தியுள்ளோம். எங்களது இந்தப் பிரிவை ஏற்றுக்கொள்ளுங்கள்'' - என தெரிவித்துள்ளார். ஐஸ்வர்யாவும் இதே அறிவிப்பை வெளியிட்டு பிரிவை உறுதி செய்தார். ரஜினியின் இளைய மகள் சௌந்தர்யாவும் முதல் கணவரை விவாகரத்து செய்தநிலையில், சமீபத்தில் இரண்டாவது திருமணமும் செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானில் அடுத்தடுத்து இரு நிலநடுக்கங்கள்

### கட்டட இடிபாடுகளில் சிக்கி 26 பேர் உயிரிழப்பு



ஆப்கானில் அடுத்தடுத்து நிகழ்ந்த 2 நிலநடுக்கங்களில் கட்டட ஈடிபாடுகளில் சிக்கி 4 குழந்தைகள், 5 பெண்கள் உட்பட 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்கு மாகாணமான பட்கிஸ்சில் மதியம் 2 மணி மற்றும் மாலை 4 மணியளவில் அடுத்தடுத்து 5.3 மற்றும் 4.9 ரிச்டர் அளவில் இரு நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

வீடுகளின் கூரைகள் மற்றும் சுவர்கள் சரிந்து வீழ்ந்து தரைமட்டமாகியுள்ளன. துர்க்மெனிஸ்தான் எல்லை வரை அதிர்வு உணரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் உணரப்பட்ட நிலையில் பீதியடைந்த மக்கள் அலறியடித்தபடி வீடுகளை விட்டு ஓடியுள்ளனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெறுவதால் உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

LK Newspapers Viber Community

# ஷாம்ப்பைன் மது போத்தல் திறப்பதை நிறுத்தி உஸ்மான் கவாஜாவை கௌரவப்படுத்திய கம்மின்ஸ்

வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி 4-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. இதன் மூலம்




ஆஷஸ் கிண்ணத்தை மூன்றாவது முறையாக அவுஸ்திரேலியா தக்கவைத்துக் கொண்டது. இந்த வெற்றிக்குப் பின் அவுஸ்திரேலிய வீரர்கள் அனைவரும் புகைப்படத்துக்கு போஸ் கொடுத்து, ஷாம்ப்பைன் மது போத்தலை திறந்து மதுவை பீய்ச்சி அடிக்கத் தயாராகினர்.

டேவிட் வோர்னர், மார்க்கஸ் ஹாரிஸ், மிட்செல் ஸ்டார்க் ஆகியோர் ஷாம்ப்பைன் மது போத்தலைத் திறக்க முயன்றபோது, மது தனது மதத்துக்கு ஆகாது என்பதை உணர்ந்த உஸ்மான் கவாஜா மேடையிலிருந்து கீழே இறங்கினார். இதனால் புகைப்படம் எடுக்கும்போது உஸ்மான் கவாஜா இல்லை, அவரைத் தேடியபோது, அவர் கீழே அமர்ந்திருப்பதை அணித்தலைவர் பெட் கம்மின்ஸ் கவனித்தார். அவரை மேலே வாருங்கள் என்று கம்மின்ஸ் அழைத்தார். அப்போது, உடன் இருந்த வீரர்கள் கவாஜாவின் மதத்தைப் பற்றித் தெரிவித்து, இஸ்லாம் மதத்துக்கு மது விரோதமானது. அது இருக்கும் இடத்துக்கு உஸ்மான் கவாஜா வரமாட்டார் எனத் தெரிவித்தனர்.

இதைக் கேட்ட கம்மின்ஸ், ஷாம்ப்பைன் மது போத்தல் திறப்பதை சகவீரர்களிடம் நிறுத்துமாறு கூறி, உஸ்மான் கவாஜாவை மேடைக்கு அழைத்தார். அவரையும் உடன் அமரவைத்து புகைப்படம் எடுத்தபின், கவாஜா மேடையிலிருந்து கீழே இறங்கிய பிற்பாடு ஷாம்ப்பைன் மது போத்தலைத் திறந்தனர். மாற்று மதத்தினருக்கு மரியாதை அளிக்க வேண்டும் என்ற அணித்தலைவர் பெட் கம்மின்ஸின் நாகரிகம், பெருந்தன்மை ரசிகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் உஸ்மான் கவாஜா தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்ட கருத்தில், "இந்த வீடியோ உங்களைக் காண்பிக்கவில்லை, என்னுடைய அணியினர் எனக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதைக் காண்பிக்கிறது. என்ன நடக்கிறது எனத் தெரியாது. வழக்கமான ஷாம்ப்பைன் மதுக் கொண்டாட்டத்தை நிறுத்திவிட்டு என்னையும் அழைத்தனர். விளையாட்டில் உள்ள உள்ளடக்கம் மற்றும் நமது மதிப்புகள் மிக முக்கியம். நாங்கள் சரியான திசையில் செல்வது போல் உணர்கிறேன்" என்று புகழ்ந்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஆஸி. அணித்தலைவர் பெட் கம்மின்ஸ், "ஆஸி. அணியில் பல்வேறுபட்ட வீரர்கள் இருக்கிறோம். எதையாவது கொண்டாட வேண்டும் என விரும்பினால், ஒவ்வொருவரும் மகிழ்ச்சியடையும் வகையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். எங்கள் வீரர்கள் அருமையாக நடந்து கொண்டார்கள். ஒருவர் மீது ஒருவர் மதிப்பும், மரியாதையும் வைத்துள்ளார்கள். அதனால்தான் புகைப்பட நிகழ்வில் அனைவரும் இருக்க விரும்பினேன்" எனத் தெரிவித்தார்.

# வெளிநாட்டு பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை

(அக்ஷரா)

பீஜிங் 2022 ஒலிம்பிக் குளிர்கால விளையாட்டு அமைப்பாளர்கள், பார்வையாளர் கொள்கையின் இறுதி அறிவிப்பை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளனர்.


"கொவிட்-19 தொற்றுநோயின் தற்போதைய கடுமையான மற்றும் சிக்கலான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அனைத்து பங்கேற்பாளர்கள், பார்வையாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய, டிக்கெட்களை இனி விற்கக்கூடாது. ஆனால், பார்வையாளர்களின் குழுக்களை அழைக்கும் ஒரு தழுவல் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. விளையாட்டுப் போட்டியின் போது இருக்கையில் இருக்க வேண்டும்" என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.



"ஒவ்வொரு நிகழ்வுக்கும் முன்னும் பின்னும் கொவிட்-19 எதிர்ப்பு நடவடிக்கைகளை இந்த பார்வையாளர்கள் கண்டிப்பாக கடைபிடிப்பார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கிறார்கள். விளையாட்டுகளின் போது கைதட்டுவதும் உற்சாகக் குரல் எழுப்புவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

"செப். 30. 2021 அன்று, பீஜிங் 2022 விளையாட்டுகளுக்கான தொற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் வெளியிடப்பட்டன. வெளிநாட்டுப் பார்வையாளர்களுக்கு டிக்கெட்டுகள் விற்பனை செய்யக் கூடாது என்பது கொள்கைகளில் ஒன்றாகும். டிக்கெட்கள் சீனாவில் வசிக்கும் பார்வையாளர்களுக்கு மட்டுமே விற்கப்படும். கொவிட்-19 எதிர்ப்பு நடவடிக்கைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலப்பகுதி" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# ஆசிய லயன்ஸ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக அர்ஜுன

ஆசிய லயன்ஸ், இந்திய மஹாராஜாஸ், வேல்ட் ஜயன்ட்ஸ் ஆகிய மூன்று அணிகள் பங்கேற்கும் கிரிக்கெட் உலகில் இருந்து ஓய்வுபெற்ற வீரர்களை கொண்ட "லெஜென்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடர் - 2022" நாளை ஓமானில் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆசிய லயன்ஸ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக, 96ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு உலகக்கிண்ணத்தை வென்றுகொடுத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் மிஸ்பா உல் ஹக் தலைமையிலான ஆசிய லயன்ஸ் அணியின் குழாமில் 9 இலங்கை வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். நாளைய தினம் ஆரம்பமாகும் குறித்த தொடரானது எதிர்வரும் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் எதிரணிகளை தலா இரண்டு போட்டிகள் வீதம் மொத்தமாக நான்கு போட்டிகளில் விளையாடும். இதில் புள்ளிப்பட்டியலின் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் 29ஆம் திகதி நடைபெறுகின்ற இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. நாளைய தினம் நடைபெறுகின்ற முதல் போட்டியில் இந்திய மகாராஜாஸ் அணியை எதிர்த்து ஆசிய லயன்ஸ் அணி மோதுகிறது.

# ஆஸி. இளையோர் அணியை வீழ்த்திய இலங்கை

ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தங்களது இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலிய இளையோர் அணியை 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இலங்கை இளையோர் அணி குழு "டி"யின் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தை பிடித்துள்ளது.




2022ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வருகிறது. இதில் குழு "டி"யில் இடம்பெற்றிருக்கும் இலங்கை இளையோர் தங்களது முதல் போட்டியில் ஸ்கொட்லாந்து அணியை வீழ்த்திய நிலையில் நேற்று முன்தினம் அவுஸ்திரேலிய அணியை எதிர்கொண்டது.

போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணித்தலைவர் துனித் வெல்லாலகே, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். அதன்படி முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலிய இளையோர் அணி, 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 175 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

176 என்ற இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை இளையோர் அணி 37 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 177 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் இலங்கை அணி காலிறுதிப்போட்டிக்கு தகுதிபெறும் வாய்ப்பை அதிகரித்துள்ளது.




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# நெஸ்டமோல்ட் அனுசரணையில் அரை மரதன், தேகாரோக்கிய ஓட்ட நிகழ்வுகள்

இலங்கை தடகள விளையாட்டுகள் சங்கம் தனது நூற்றாண்டு நிறைவு விழாவை இந்த ஆண்டு முழுவதும் தொடர் விளையாட்டு நிகழ்வுகளுடன் கொண்டாட தயாராகவுள்ளது.

அமெச்சர் தடகள சங்கம் என்ற பெயரில் முன்னர் அறியப்பட்ட இலங்கை தடகள சங்கமானது சர்வதேச தடகள சம்மேளனத்துடன் இணைந்து 1922ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் திகதியன்று நிறுவப்பட்டது.

அதன் நூற்றாண்டு நிறைவு கொண்டாட்டங்களின் ஆரம்பத்தை குறிக்கும் வகையில், இலங்கை தடகள விளையாட்டுகள் சங்கம் அரை மரதன் மற்றும் தேகாரோக்கிய ஓட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் 22ஆம் திகதி மு.ப 6.00 மணி முதல் தியத்த உயனவில் நடைபெறவுள்ளது.




இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் நெஸ்லே நிறுவனத்தின் நெஸ்டமோல்ட் அனுசரணை வழங்கவுள்ளது. இது 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையின் மிகப்பெரிய மரதன் போட்டிகளுக்கு அனுசரணையாளராகவும் ஏற்பாட்டாளராகவும் இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

21 கிலோ மீற்றர் தூரம் கொண்ட அரை மரதன் போட்டியில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் பங்குபற்ற முடியும். தியத்த உயனவில் இருந்து ஆரம்பமாகி, அத்துல் கோட்டே சந்தி, சிறிகொத்தா, பாகொட வீதி, நுகேகொடை சுப்பர் மார்க்கெட் சந்தி, நுகேகொடை ஹைலெவல் வீதி, மஹரகம, பன்னிப்பிட்டிய, பொரளை வீதி, தலவத்துகொட, பத்தரமுல்லை சந்தி ஊடாக மீண்டும் தியத்த உயனவில் நிறைவடையும்.

பல தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு இலங்கை தடகள விளையாட்டுகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளதுடன், ஏறத்தாழ 250 விளையாட்டு வீரர்கள் இதில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அதே நாளில் 5 கிலோ மீற்றர் தூரம் கொண்ட தேகாரோக்கிய ஓட்ட நிகழ்வும் இடம்பெறும். தியத்த உயனவில் இருந்து ஆரம்பிக்கும் இந்தப் போட்டி, நாடாளுமன்ற வீதி, பாலம் துண சந்தி, பத்தரமுல்லை சந்தி ஊடாகச் சென்று மீண்டும் தியத்த உயனவில் நிறைவடையும். சுமார் 1,500 பேர் இந்த நிகழ்வில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# "தடுப்பூசி இல்லையேல், பிரெஞ்ச் ஓபன் தொடரும் இல்லை"

## பிரான்ஸ் அதிரடி அறிவிப்பு



கொரோனா தடுப்பூசி செலுத்தினாரா என்பதை நிரூபிக்க தவறியதால் ஆஸி. ஓபன் டென்னிஸ் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்த உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரரான நோவக் ஜோகோவிச், கொரோனா தடுப்பூசி செலுத்தாவிட்டால் அடுத்த கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியிலும் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகிறது. குறித்த தொடரில் பங்கேற்க சேர்பியாவை சேர்ந்த ஜோகோவிச் சென்றார். கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு மீண்ட ஜோகோவிச், கொரோனா தடுப்பூசி செலுத்தினாரா என்பதை நிரூபிக்கவில்லை.

ஆஸி. அரசின் விதிமுறைப்படி தொடரில் விளையாடும் வீர, வீராங்கனைகள் கண்டிப்பாகத் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என்பதாகும். தடுப்பூசி செலுத்தாமல் நாட்டுக்குள் வருவோரை 14 நாட்கள் தனிமைப்படுத்தும். ஆனால், ஜோகோவிச் தடுப்பூசி செலுத்தாததால் அவருக்கு வழங்கப்பட்ட விசாவை இரத்துச் செய்து சொந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பியது ஆஸி. அரசு.

இந்நிலையில், அடுத்ததாக மே மாத இறுதியில் பிரான்ஸில் ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகள் தடுப்பூசி செலுத்தாவிட்டால் பங்கேற்க அனுமதியில்லை என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் விளையாட்டு அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிவிப்பில், "பிரான்ஸ் நாட்டின் தடுப்பூசி சட்டத்தின்படி, பிரெஞ்ச் ஓபனில் பங்கேற்போர், பார்வையாளர்கள், ஊழியர்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், சட்டத்தின்படி பொது இடங்கள், ஹோட்டல்கள், விடுதிகள் செல்லும் மக்கள் கண்டிப்பாக தடுப்பூசி சான்றிதழைக் காண்பிக்க வேண்டும். இதில் யாருக்கும் விதிவிலக்கு இல்லை. ஆதலால், மே மாதம் நடைபெறும் பிரெஞ்ச் ஓபனிலும் வீர, வீராங்கனைகள், பார்வையாளர்கள் கண்டிப்பாகத் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும். இதில் யாருக்கும் விதிவிலக்கு இல்லை" எனத் தெரிவித்துள்ளது.

LK Newspapers Viber Community

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7